விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 18 வியாழக்கிழமை (04.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 350

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## மகிந்தவுக்கு கட் - அவுட் வைப்பதை

# எதிர்த்தவர் மீது நேற்றுத் தாக்குதல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார கட்-அவுட் ஒன்றை வைக்க ஆளும் கட்சி ஆதரவாளர்கள் எடுத்த முயற்சிக்கு எதிர்ப்பை தெரிவித்த ஒருவரது வீடு தாக்குதலுக்குள்ளானது.

திவுலப்பிட்டிய, குடகம்மன பிரதேசத்தைச் சேர்ந்த துசித வீரசிங்க என்பவரின் வீட்டின் மீது நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக இரண்டு நபர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 29-ம் திகதி தனது வீட்டின் முன் பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார உருவப் படமொன்றை வைக்க முயன்ற நபர்களுக்கு தான் எதிர்ப்பு தெரிவித்ததாக துசித வீரசிங்க தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் தனது வீட்டுக்கு வந்த திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் இந்திக்க அனுருத்த உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த 15 ஆதரவாளர்கள் தன்னை மிரட்டியதாக துசித்த வீரசிங்க தெரிவித்தார். 23ஆம் பக்கம் பார்க்க....

## பெருமளவு ஆயுதங்கள்

### முல்லையில் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூங்கிலாறு பகுதியில் இராணுவத்தினரால் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் துப்பாக்கிகள் இரண்டும், துப்பாக்கி ரவைகளும், விமானத்தைத் தாக்கியழிக்கும் ஏவுகணைகள் 23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலை முன்னிட்டு

### பாடசாலைகளுக்கு விடுமுறை


(கொழும்பு)

பாப்பரசர் முதலாம் பிரான்ஸிசின் இலங்கை வருகை மற்றும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜனவரி 8-ம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை 23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலில் மகிந்த போட்டியிடக் கூடாது !

### உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக போட்டியிடுவதை தடைசெய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை 24ஆம் பக்கம் பார்க்க....

## நெடுங்கேணி எல்லைப் பகுதியில் கொல்லப்பட்டோர் தொடர்பில் ஆய்வு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாக கூறப்படும் முன்னாள் பொலிஸ மற்றும் படை அதிகாரிகள் உட்பட 80 பேர் எரிக்கப்பட்ட இடம் தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து 2-ம் நாளான நேற்றும் நடைபெற்றுள்ளது.

மேற்படி ஆய்வுகள் நேற்று முன தினம் 9 அமைப்புக்கள் இணைப்பில் தொடக்கப்பட்ட நிலையில் நேற்றையதினம் 2-ம் பகுதி ஆய்வுகள் நெடுங்கேணியின் எல்லைப் பகுதியில் உள்ள வனத்தில் நடைபெற்றுள்ளது.

2006-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம கொழும்பு 23ஆம் பக்கம் பார்க்க....

## மாவீரர் தினமன்று யாழ்ப்பாணத்தில் விளக்கேற்றியோரை தேடும் ரி.ஐ.டி !

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மாவீரர் தினமன்று விளக்கேற்றியவர்களினை கண்டறிவதற்கான முயற்சிகளினை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு (ரி.ஐ.டி.) மேற்கொண்டுவருவதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் முதற்கட்டமாக நேற்றும், நேற்று முன்தினமும் கொக்குவில் பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்று படையினர் விசாரணைகளினை மேற்கொண்டுள்ளனர்.

நவம்பர் 27 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அன்பு வாசகர்களே !
உங்கள் வலம்புரியில் ......
இன்று 04.12.2014 முதல்
ஜோதிட கலாமணி
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
'சனி மாற்றம்'
வாசிக்கத் தவறாதீர்கள்

## இனப்பிரச்சினைக்கான தீர்வை தேர்தலின் பின் தேட வேண்டும்

### மனோ கணேசன் வலியுறுத்து



(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் உருவாகும் புதிய அரசு, ஜனாதிபதி முறைமையை அகற்றிவிட்டு, 18-ம் திருத்தத்தை ஒழித்து, 17-ம் திருத்தத்தை மீண்டும் அரசியலமைப்பில் சேர்த்த பின், முதல் பிரச்சினையாக தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு தேட வேண்டும். 24ஆம் பக்கம் பார்க்க....

## சீரற்ற காலநிலை தொடரும் 5 மாவட்டங்களில் மண்சரிவு

(கொழும்பு)

இலங்கையில் பல பாகங்களில் தொடர்ந்து நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஐந்து மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கண்டி, கேகாலை, இரத்தினபுரி, பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலேயே மண்சரிவு அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் மண்சரிவுகள் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கண்டி பஹிரவகந்த பகுதியில் மண்சரிவு ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக சுமார் 35 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமது குடியிருப்புகளில் இருந்து வெளியேறி நேற்று முன்தினம் இரவு முழுவதும் 23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையில் ஊழல் அதிகரிப்பு

(கொழும்பு)

டிரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பினால் விடுக்கப்பட்டுள்ள சர்வதேச ஊழல் தொடர்பான சுட்டெண்ணின் பிரகாரம் 177 நாடுகளில் இலங்கை 85 ஆம் இடத்திலுள்ளது.

கடந்த வருடம் இந்த பட்டியலில் இலங்கை 91 ஆம் இடத்திலிருந்தது. இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து உள்ளிட்ட 8 நாடுகள் 38 புள்ளிகளைப் பெற்று 85 ஆவது 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுவர், பெண்களுக்கென யாழில் பிரத்தியேக பொலிஸ் நிலையம்



யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக சிறுவர், பெண்கள் பிரிவுக்கென பிரத்தியேக பொலிஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இப் பொலிஸ் நிலையத்திற்கான அடிக்கல்லினை யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன நாட்டி வைத்தார்.

இவ் அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பண்ணையில் இடம்பெற்றிருந்தது.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் சிறுவர் பெண்கள் பிரிவுக்கென தனியானதொரு பிரிவு இயங்கி வருகின்றது.

இப்பிரிவில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள், துஷ்பிரயோக சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டு சிறுவர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு வருகின்றன.

இப்பிரிவு சில குறைபாடுகளுடன் காணப்படுகின்றமையினால் இதற்கென தனியான பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு பலரால் கோரிக்கை விடப்பட்டு வந்தது.

இந்நிலையில் சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் 5 மில்லியன் ரூபாய் செலவில் பண்ணையில் பொலிஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இப் பொலிஸ் நிலையம் மூலம் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளினை இலகுவில் கையாள முடியும்.

இதில் முழுவதும் பெண் பொலிஸாரினை கடமையில் அமர்த்த பெண்கள் தொடர்பிலான வன்முறைகளினை இலகுவில் கையாள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அடிக்கல் நாட்டு விழாவில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சூரிய ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முகாமைத்துவ நிறுவனத்திற்கு O/L, A/L படித்த 18-28 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் (Field Officer Management) வரவேற்கப்படுகின்றனர். பயிற்சியின் போது 10000/= -15000/=. பயிற்சியின் பின்னர் அடிப்படை சம்பளத்துடன் 60000/= பெறலாம்.
(பயிற்சிக்காலம் 03-06 மாதங்கள்)

0777274795 துசி (8530)


# மைத்திரி புலி என்று மகிந்த அடிப்பார் போஸ்டர்

## எனக்கு அடித்தது அநியாயமாகி விட்டது-ரணில்

(கொழும்பு)

எனக்காக 20 மில்லியன் ரூபாய் பணம் செலவு செய்து அடித்த சுவரொட்டிகள் அனைத்தும் அநியாயமாகப் போய் விட்டது. இப்போது மைத்திரி புலி என்று கூறி புதிய போஸ்டர்கள் அடிக்க வேண்டிய நிலை மகிந்த அரசுக்கு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. இது தொடர்பில் அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏகாதிபத்திய ஆட்சிக்கான கதவு மூடப்பட்டு, தோல்விக்கான கதவு திறந்துள்ளது. இதுதான் அவர் முகம்கொடுத்துள்ள பெரும் பிரச்சினையாகும். அமைச்சர் பஷில்தான் சிறந்த புத்திசாலி என்று அரசின் தேர்தல் பிரசாரப்பணிகளுக்கான பொறுப்பு அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எனக்கு எதிராக 20 மில்லியன் ரூபாய் பணம் செலவளித்து சுவரொட்டிகள் அடித்தனர். ஆனால்,. இன்று அனைத்தும் வீணாய்போயுள்ளன.

எனக்கு எதிராக "படலந்த" என்ற படத்தையும் அரசு எடுத்துள்ளது. இப்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக சுவரொட்டிகள் அடிக்க வேண்டிய நிலையில் அரசு உள்ளது.

அரசுக்கு மைத்திரியைப் புலியுடன் தொடர்புபடுத்தி சுவரொட்டிகள் அடிக்கவேண்டும் என ரணில் தெரிவித்தார். (செ-11)

# ஐரோ.ஒன்றியத்திற்கு இலங்கை பாராட்டு

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்திற்கு இலங்கை அரசாங்கம் பாராட்டு வெளியிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கும் ஐரோப்பிய நீதிமன்றின் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்யப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது.

நீதிமன்றின் தீர்ப்பானது புலிகளுக்கு ஆதரவான ஐரோப்பிய செயற்பாட்டாளர்களுக்கு உற்சாகமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறெனினும், நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்ய எடுத்த தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இணைந்து செயற்பட விரும்புகின்றோம். புலிகளுக்கு எதிராகவும், புலிச்செயற்பாட்டாளர்களுக்கு எதிராகவும் ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம 16-ம் திகதி புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதாக ஐரோப்பிய நீதிமன்றம் அறிவித்திருந்தமை தெரிந்ததே. (செ-11)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

### திரு.சாமிநாதன் சுரேஸ்குமார்

(முகாமைத்துவ உதவியாளர்- கட்டடங்கள் திணைக்களம்-கிளிநொச்சி)



அண்மையில் கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட எமது நண்பன் சாமிநாதன் சுரேஸ்குமார் அவர்களது பணி சிறக்க எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: நண்பர்கள். (சி-9251)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்



(இடமிருந்து வலமாக)
கு.கவிதாஸ்-164,
ச.தர்சிகன்-167,
ஜெ.சஜீபன்-179,
வை.டிசாந்-179,
ரு.கிருத்திகா-155,
பா.யதுஜா-172,
சி.வினுஜா-175,
லோ.துவாரகா-177,
ந.யதுர்ஷன்-159

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்:-

கெ.நிருஷன், ப.விதுஷா, ரா.காயத்திரி, இ.மேரிமிஷா, ஆ.அர்ச்சனா, ர.சஜீதா, பா.ஜதுசிகா, தெ.குகப்பிரியன், யோ.கோபிநாத், க.டிலாயினி, பி.கம்சாயினி, சி.ரேனோசன், சி.பிரவீனா, ஜெ.யானுசன், கு.கஜேந்திரன், க.கபிஷாளினி, க.அபிஷா, நி.நுஸ்ரத், இ.எமில்டா, அ.கேசிகா, பி.லக்சனா, சி.சஞ்சிகா, க.புகழரசி, ந.சரவிந்துஜன்.

பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களை பாராட்டி இவர்கள் மேலும் பல விருதுகளைப் பெற வேண்டும் என வாழ்த்துகின்றோம். மாணவர்கள் அனைவரையும் வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன். இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மேலதிகமாக ஆக்கமும் ஊக்கமும் அளித்த கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக்குழுவினர், யா/புரியோவான் கல்லூரியின் 87ஆம் ஆண்டு பழைய மாணவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அனுசரணையாளர்
"சிவா" பல்பொருள் வாணிபம் A9 வீதி, பளை. (8531)

பாடசாலைச் சமூகம்
கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலரிமாளிகையின் சமையலறையிலும் இராணுவம் உள்ளது- மைத்திரி ஆதங்கம்

(கொழும்பு)

நான் இந்த நாட்டின் தலைவரான பிறகு, மிகவும் பொறுப்புடன் கடமைகளை முன்னெடுப்பேன். அலரி மாளிகையின் சமையலறையில் உள்ள இராணுவத்தினரின் கௌரவத்தை பாதுகாப்பேன். பாதுகாப்பு தரப்பிலுள்ள அனைவரதும் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என்று பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க ஜாதிக ஹெல உறுமய கட்சி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு, கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அவர், அலரி மாளிகையில் இருந்த தேர்தல் இணைப்பு அதிகாரிகள், அங்கிருந்து விலகி தற்போது எம்மோடு இணைந்துள்ளனர். கடந்த சில தினங்களுக்குள், இந்த நாட்டில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமய என்பது, இந்த நாட்டுக்கு அன்பு செலுத்தும் கட்சியாகும். கடந்த காலங்களில், அக்கட்சி அதனை நிரூபித்துள்ளது" என்றார்.

இப்போது சிலர், பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

நான் இந்த நாட்டின் தலைவரான பிறகு, மிகவும் பொறுப்புடன் கடமைகளை முன்னெடுப்பேன். பாதுகாப்பு தரப்பிலுள்ள அனைவரதும் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்.

அலரி மாளிகையின் சமையலறையில் உள்ள இராணுவத்தினரின் கௌரவத்தை பாதுகாப் பேன்.

பாதுகாப்பு சீருடைக்கு ஏற்ற பணிகளை வழங்குவேன். அவர்களுக்கு, சமயலறை வேலைகளை வழங்கமாட்டேன். பாதுகாப்பு தரப்பினரிடையேயும் குழுக்களை உருவாக்க மாட்டேன். தேசிய பாதுகாப்பு தொடர்பில் சுயாதீனமான தீர்மானங்களை வழிசமைத்துக்கொடுப்பேன். அவர்களுக்கு அரசியல் அழுத்தங்கள் கொடுக்க இடமளிக்க மாட்டேன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஒரு வருட காலத்தை வெள்ளிவிழாக்காலமாக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று தொடக்கம் அடுத்தவருடம் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை வெள்ளிவிழா நிகழ்வுகளுக்குரிய காலமாக விவசாய பீட நிர்வாகம் பிரகடனப்படுத்தியுள்ளது.

இக்காலப்பகுதிகளில் பல்வேறு விதமான சமூக வேலைத்திட்டங்களையும் நிகழ்வுகளையும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களை ஊக்குவிக்கவும் விவசாய பீடம் திட்டமிட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தில் கைகோர்த்து செயற்பட குறித்த பீடத்தில் பயின்ற பழைய பட்டதாரிகளையும் இணையுமாறு விவசாயபீட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-5)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



## நிரந்தர வேலைவாய்ப்பு

புதுவருடத்தை இன்பமயமாக்க இன்றே நிரந்தர தொழில் ஒன்றினை பெற்றிடுங்கள். கொழும்பை அண்மித்த ஜேம்/டொபி/பிஸ்கட்/கோடியல்/பால்மா/கிளவுஸ்....போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/ பொதியிடல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண் பெண் தேவை. சம்பளம் 18000/=, 28000/=,30000/=, 32000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை அன்றே வேலை (விசேடம் நண்பர்கள் குழுக்கள் தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்)

(சி-9244 ) தொடர்புக்கு-0771116770/ 0776838231


## கோப்பாயில் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் வயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இரத்ததான நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் கல்லூரி பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இணைந்து இரத்ததானம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-134)

## நாற்பத்தைந்தாம் நாள் நினைவலைகள்

அமரர் குமாரசூரியராஜவடிவேல்
சந்திரகாசன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்-
மாவட்ட செயலகம், கிளிநொச்சி)



சந்திரகாசன் எனும் நாமம் -நாவில்
சஞ்சரிக்கும் வேளையிலே- எங்கள்
கண்ணோரம் கசிகின்ற
கண்ணீர்த்துளியாவும்
உந்தனது நினைவுகளால்
உருகித்தான் கசிகிறது
நாட்களோ நாற்பத்தைந்து
நாம் உமையிழந்து கரைந்தாலும்
நாழிகைதான் நாற்பத்தைந்தோ-என
நாமெண்ணத் தோன்றுதிப்போ
காலங்கள் கரைந்திடினும்
ஞாலத்தில் யார்தான் உமை
மறந்திடினும்
உற்ற பணி தன்னாலே எங்கள்
உளங்களிலே நிறைந்திருப்பீர்

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
மாவட்ட செயலகம், கிளிநொச்சி.
(சி-9241)


# விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com


## இராசி பலன்

04.12.2014
(கார்த்திகை 18, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.08 மணிக்கு
திரியோதசி முன்னிரவு- 7.16 மணிவரை
பரணி முன்னிரவு -11.57 மணிவரை
இராகுகாலம் 1.45-3.15 மணிவரை
சுபநேரம் 7.45-9.15 மணிவரை
பிரதோஷ விரதம், திருவண்ணாமலை தேர்.

வளவன்

**மேடம்** — சுப தகவல்கள் வந்துசேரும் நாள், யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட வெற்றி கிடைக்கும்,கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் உருவாகும்.

**இடபம்** — பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** — எடுத்த செயலை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், 'செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கடகம்** — பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**சிம்மம்** — சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**கன்னி** — தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பயணங்களால் பலனுண்டு,பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**துலாம்** — மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** — எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர். [illegible]

**தனுசு** — கடன்சுமை குறைந்து கவலைகள் குறையும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்

**மகரம்** — போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்** — நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வர லாம், சுப செலவுகளில் அக் கறை காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மீனம்** — தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், பகை விலகி பாசம் கூடும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், உற வினர் வருகையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மோடிக்கு வைகோ நன்றி சொல்லியிருக்க வேண்டும்"



"பிரதமர் நரேந்திர மோடியை இனியும் விமர்சித்துப் பேசினால் வைகோ இந்த நாட்டில் எங்கும் நடமாட முடியாது" பி.ஜே.பியின் தேசியச் செயலாளர் ஹெச்.ராஜாவின இந்த மிரட்டல் வாக்குமூலத்தை கட்சி எல்லைகளைத் தாண்டி, பல தலைவர்களும் கண்டிததுள்ளனர். இந்நிலையில் கும்பகோணம் வந்திருந்த ஹெச்.ராஜாவை சந்தித்து சில கேள்விகளை முன் வைததோம்.

**"வைகோ பாதுகாப்பாகத் திரும்பி போகக் முடியாது என்று நீங்கள் பேசியிருப்பது, அரசியலில் விரோதப் போக்கைத் தூண்டுவதாக இருக்கிறதே. ஆனால், வைகோ ஒருவரிமும் உங்களை வமர்சித்து பேசவில்லையே?"**

"மானம் கெட்ட மத்திய அரசே என்றும், மோடி, ராஜ்நாத் சிங்கை தாறுமாறாக விமர்சித்தும் பேசியிருக்கிறார் வைகோ. நான் பேசியது எனனுடைய தலைவர்களை விமர்சித்துப் பேசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். அவர் விட்ட அறிக்கைக்குத்தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன். பிரதமரை அவன், இவன் என்று பேசுவதுதான் முறையா? எனக்கு எதிரான கண்டனத்தை அ.தி.மு.க., தி.மு.க போன்ற கட்சிகள்தான் தெரிவித்திருக்க வேண்டும். சிறு சிறு கட்சிகள் கண்டனம் தெரிவிப்பது அவரவர் விருப்பத்தைக் காட்டிக்கொள்வதற்காக.

100 ஆவது சுதந்திரதினம் கொண்டாட இந்தியாவே இருக்காது என்று வைகோ சொல்லியதறகு 125 கோடி மக்களும் கண்டனம் தெரிவிக்க வேண்டுமல்லவா? என் தலைவர் மோடியை பேசியதற்குத்தான் நான் பதில் பேசியிருக்கிறேன். என்னைப் பற்றி பேசியிருந்தால் நான் அமைதியாகத்தான் இருந்திருப்பேன்."



**"இதனால் ம.தி.மு.க தொணடர்கள் கொந்தளித்துப்போயிருக்கிறார்களே?"**

"என் வீட்டுக்கு சிவகங்கை மாவட்ட ம.தி.மு.க செயலாளர் செவ்வந்தியப்பன் போயிருக்கிறார். என வீட்டை தாக்கியிருக்கிறார்கள். பி.ஜே.பி அலுவலகத்தைத் தாக்கியி க்கிறார்கள். இது திராவிட கட்சிகளுக்கே இருக்கின்ற ஒரு குணாதிசயங்கள். இவர்களுக்கு எதிராக மாற்றுக் கருத்தை யாரும் சொல்லக் கூடாதா? எனக்கு வைகோ நண்பர்தான். ஆனால், நாகரிகமாக பேசுங்கள், இல்லையென்றால் எங்கள் ஆதரவை இழப்பீர்கள் என்று சொன்னேன். கூட்டணியிலருந்துகொண்டு இப்படி பேசுவது அழகல்ல. மாறிக்கொள்ளுங்கள் என்று வைகோவுக்கு வேண்டுகோளாக வைக்கிறேன்!"

**"வைகோ நாட்டில் நடமாட முடியாது என்று சொன்னதற்காக நீங்கள் சிறையில் இருக்க வேண்டும் என்று தமிழருவி மணியன் சொல்லியிருக்கிறாரே?"**

"ம.தி.மு.கவுக்கு அண்டர் ரைட்டர் தமிழருவி மணியன். அதனால் நான் பேசியதற்கு சிறையிலே இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். 100வது சுதந்திரதினத்தைக் கொண்டாட இந்தியாவே இருக்காது என்று சொன்னவர்கள், எங்கே இருக்க வேண்டுமென்று தமிழருவி மணியன் பதில் சொல்ல வேண்டும்.

மோடியை விமர்சித்தால் பெரிய மனுஷன் ஆகலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்கூட மோடியை அந்த ஆளு, இந்த ஆளு என்று பேசியதாகச் சொல்கிறார்கள். நான் இளங்கோவனிடம் அதுமாதிரி எ்திர்பார்க்கவில்லை!"

**"சட்டமன்றத் தேர்தலிலும் பி.ஜே.பி., ம.தி.மு.க., பா.ம.க கூட்டணி தொடர வேண்டும் என்று பி.ஜே.பியின் மாநில தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் சொல்லியிருக்கிறார். அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?"**

"கூட்டணியைப் பற்றி பேச எனக்கு உரிமை கிடையாது. கூட்டணியை முடிவுசெய்ய வேணடியது அகில இந்திய நாடாளுமன்றக் குழு."

**"2016 சட்டமன்றத் தேர்தல்?"**

"2016 தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கும், பி.ஜே.பிக்கும்தான் நேரடிப் போட்டி நடக்கும். அ.தி.மு.க பலவீனப்பட்டுக் கொண்டிருக்கிறது. மார்ச் 2ஆம் திகதி ஏர்டெல் மேக்சிஸ் வழக்கு வருகிறது. தி.மு.கவுக்கு 2ஜி வழக்கு இருப்பதால் மக்களைப் பார்த்து பேசக்கூட நேரம் கிடைக்குமா என்ற நிலையில், ஊழல் வழக்கில் சிக்கியிருக்கிறார்கள். அ.தி.மு.கவுக்கு ஒரே பலமாக இருந்தது எம்.ஜி.ஆரின் இமேஜ்தான். இப்போது அந்த இமேஜ் காணாமல் போய்விட்டது. நேர்மையான, திறமையான ஆட்சி என்று சொன்னால், மோடி தலைமையிலான ஆட்சிதான் என்ற எண்ணம் தமிழக மக்களிடையே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மோடி இளைஞர்களின் ஹீரோ."

*யூனியர் விகடன்*





### அசத்தும் சுட்டிப் பையன்

இப்போதெல்லாம் சிறுவயதிலேயே இயல்புத் தன்மையை மீறி செயற்பட்டு குழந்தைகள் வியக்க வைக்கின்றனர்.

இங்கிலாந்தின் பர்மிங்காம் பகுதியில் வசிப்பவர் ஹெல்தெர் தோர்பே (வயது 24) இவருக்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆண் குழந்தையொன்று பிறந்தது.

ஜோனாதன் என்ற பெயருடைய அந்த சிறுவன் பிறந்தபோது 21/2 எடை இருந்தான். பின்னர் அவனுடைய அனைத்து வளர்ச்சியும் மிகவும் அபரிமிதமாக மாறியது.






அதாவது, 7வது மாதத்திலேயே தானாக எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டானாம்.

மழலை மொழியில் பேசுவதுடன் மடிக்கணினியை இயக்கத் தொடங்கியுள்ளான். ரிமோட் கண்ட்ரோல் சாதனம் மூலம் டி.வி. சனல்களை மாற்றி தனக்கு விருப்பமான நிகழ்ச்சிகளை கண்டு ரசிக்கிறான். அத்துடன் விருப்பமான பாடல்களுக்கு ஏற்ப நடனமும் ஆடி அசத்துகிறான்.

மகனின் இந்த வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்துள்ள தாய், அவனுடைய விவேகம், வலிமை, அறிவுத்திறன் வியக்க வைக்கிறது. எதையும் விரைவாக கற்றுக்கொள்ள துடிக்கிறான். இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக்கிறது என மகிழ்ச்சி பொங்க தெரிவித்துள்ளார்.




### மிளகுப் பொங்கல்



**தேவையான பொருட்கள்:-**

பச்சை அரிசி- 200 கிராம், பயத்தம்பருப்பு- 50 கிராம், மிளகு, சீரகம்- தலா ஒரு டீஸ்பூன், முந்திரிப்பருப்பு-10, நெய்-2 டீஸ்பூன் கறிவேப்பிலை ஒரு ஆர்க்கு, உப்பு- தேவையான அளவு,

**செய்முறை:-**

பச்சை அரிசி, பயத்தம்பருப்பு இரண்டையும் வெறும் வாணலியில் வறுத்து, தண்ணீரில் களைந்து உப்பு சேர்த்து குழைய வேக வைக்கவும்.

நெய்யில் மிளகு, சீரகம், முந்திரி, கறிவேப்பிலை தாளித்து, அரிசி பருப்பு கலவையில் சேர்த்துக் கலக்கினால் சுவையான மிளகுப் பொங்கல் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் கேள்வி அறிவித்தல்-2015
# கரைச்சிப் பிரதேச சபை- கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 01.01.2015 தொடக்கம் 31.12.2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்வி பத்திரம் வழங்கும் காலம் : அலுவகை நாட்களில் மு.ப 8.30-பி.ப 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்: 04.12.2014 - 11.12.2014 வரை பி.ப 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி:12.12.2014 மு.ப 10.00 மணிவரை

**கேள்வி திறக்கும் திகதி : 12.12.2014 மு.ப 10.30 மணி**

**கேள்வி திறக்கும் இடம் : கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும் .இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளா அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேணடும் கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் சகலவிதமான கொள்வனவுக்கான சந்தை வரி 3% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **சேவைச் சந்தை – கிளிநொச்சி** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன் | 20,000.00 | 1,000.00 | 1,724,625.00 |
| 2. | தராசுக்கொட்டகை-மரக்கறி | 40,000.00 | 1,000.00 | 1,971,000.00 |
| 3. | தராசுக்கொட்டகை-பழம் | 10,000.00 | 1,000.00 | 344,925.00 |
| 4. | மாட்டிறைச்சிக்கடை | 40,000.00 | 1,000.00 | 1,971,000.00 |
| 5. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 307,890.00 |
| 6. | தேங்காய் | 10,000.00 | 1,000.00 | 985,500.00 |
| 7. | கருவாடு,முட்டை | 10,000.00 | 1,000.00 | 246,375.00 |
| 8. | உயிர் இறைச்சிக்கோழி | 10,000.00 | 1,000.00 | 432,000.00 |
| 9. | வெற்றிலை,பாக்கு,புகையிலை,இஞ்சி | 10,000.00 | 1,000.00 | 492,750.00 |
| | **சேவைச் சந்தை – பரந்தன்** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 344,925.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 585,000.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 199,890.00 |
| 4. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 90,450.00 |
| | **சேவைச் சந்தை – வட்டக்கச்சி** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 344,925.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை(இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 337,725.00 |
| 3. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 45,000.00 |
| | **சேவைச் சந்தை – இரணைமடு** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 344,925.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 1,093,599.00 |
| | **சேவைச் சந்தை – உருத்திரபுரம்** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 98,550.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை (D/8) | 10,000.00 | 1,000.00 | 279,000.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 126,000.00 |
| | **சேவைச் சந்தை – ஸ்கந்தபுரம்** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 344,925.00 |
| 2. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 45,000.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 45,000.00 |
| 4. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 342,000.00 |
| | **சேவைச் சந்தை – தர்மபுரம்** | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 344,925.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 429,300.00 |
| 3. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 45,000.00 |
| | **கல்மாறு** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 135,000.00 |
| | **ஊற்றுப்புலம்** | | | |
| 1. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 45,000.00 |
| | **வன்னேரி** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 90,000.00 |
| | **ஆனைவிழுந்தான்** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 90,000.00 |
| | **கண்டாவளை** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 121,050.00 |
| | **புன்னைநீராவி** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 234,000.00 |
| | **முரசுமோட்டை** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 220,320.00 |
| 2 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 45,000.00 |
| | **அக்கராயன்** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 90,000.00 |
| | **கல்மடு** | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 90,000.00 |

**நிபந்தனைகள்**

1.உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

2.கடந்தகால கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும்,குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்

3.கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

4.சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

5.மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

6.கேள்விசபையில்கேள்விதிறக்கப்படும்இடத்திற்கு கேள்விகோருபவர் அடையாள அட்டையுடன் வருகை தர வேண்டும். பிரதிநிதியாக சமுகமளிப்பவர் கேள்வி கோரும் உரிமையாளரின் சம்மத கடிதத்துடன் வருகை தர வேண்டும். ஏனையோர் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**வைத்திலிங்கம் குகராசா,**
**தவிசாளர்,கரைச்சிப் பிரதேச சபை,கிளிநொச்சி.**

# ஓம் ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்
# சுவாமி இராமதாசர் நிறுவகம்-இலங்கை

**கணனி பயிற்றுநர்/ ஆசிரியர் (Spoken English) தேவை**

அனலைதீவு கிராமத்தில். பாடசாலை விட்டு விலகிய வேலையற்ற இளைஞர், யுவதிகட்கு அவர்களது ஆளுமையை விருத்தி செய்து வேலை வாய்ப்புக்களுக்கு தயார் செய்யும் நோக்குடன் கணனி மற்றும் ஆங்கிலம் பேசும் திறன் ஆகியவற்றில் பயிற்சி வழங்க உத்தேசித்துள்ளோம்.

இப்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு இத்துறை சார் திறன் வாய்ந்த பயிற்றுனர் மற்றும் ஆசிரியரை மாதாந்த சம்பள அடிப்படையில் நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர் பணித்திறனும் சேவை மனப்பான்மையும் மற்றும் நல்ல பண்புகளையும் கொண்ட ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதியுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும். ஆங்கிலம் கற்பிக்கும் பணிக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் மிக விரைவில் பணியை பொறுப்பேற்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

தகைமை

**Computer Instructor 01 Post**

★Have followed at least a Computer Diploma Course or Microsoft Office Course and Graphic Designing Course

★Have Good Knowledge of Information Technology

★Working Experience in Similar Capacity

**English Teacher 01 Post**

Good Communication Skill in English With atleast Diploma in English qualification

Working Experience in Similar Capacity

**தொடர்பு :- T.P. 071 4471136**
**பணிப்பாளர்**
**பரந்தாம்**
**375,கோவில் வீதி,**
**நல்லூர்,யாழ்ப்பாணம்.** (8527)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 13 1/4
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
தொ.இ: B/3870

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா: 501/4 செவ் 2இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் O/L/ சொந்த தொழில்
எதிர்பார்ப்பு:சைவபோசனம்
தொ.இ: B/3872

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம் பூரம்
கி.பா: 39 1/4 செவ் 7இல்
உயரம்:5'11"
தகைமை/தொழில்: BSC/ கணிய அளவையாளர்
தொ.இ: B/3873

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 38 சூரிசெவ் 8இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: COMPUTER ENGINEERING (டுபாய்)
எதிரபார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/3875

**மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 42 செவ் 2இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில்
தொ.இ: G/3198

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 51
உயரம்: 158 cm
தகைமை/தொழில்: A/L/அரச தொழில்
தொ.இ: G/3199

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 36 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BED/ ஆசிரியர்
தொ.இ: G/172

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 34 1/4 செவ் 7இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்
தொ.இ: G/909

# கல்யாண மாலை

**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பாரவூர்தியைக் காணவில்லையென முறைப்பாடு

**300 சீனி மூடையுடன் வந்ததாம்**

(யாழ்ப்பாணம்)


கொழும்பிலிருந்து 300 சீனி மூடைகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த பாரவூர்தியொன்றை கடந்த 30ஆம் திகதி முதல் காணவில்லையென சீனி மூடைகளின் உரிமையாளர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதியை சேர்ந்த இரண்டு வர்த்தகர்கள் இணைந்து பாரவூர்தியொன்றில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சீனி மூடைகளை எடுத்து வந்துள்ளனர்.

பாரவூர்தியின் சாரதியும், உதவியாளரும் புத்தளம் வரை தொடர்பில் இருந்ததாகவும் அதன் பின்னர் அவர்களுடனான தொடர்பு அற்றுப்போனதாகவும் உரிமையாளர்கள் தங்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கொழும்பில் குறித்த பாரவூர்தியின் உரிமையாளரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிந்துள்ளது. (இ-5)




நன்றி-அததெரண

# இந்திய மீனவர்கள் 38 பேர் யாழில் உண்ணாவிரத போர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 38 பேரும் தம்மை விடுவிக்க கோரி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் உணவு. தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று யாழ். இந்திய துணைத்தூதரக பிரதித் துணைத் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தின் இராமேஸ்வரம், புதுக்கோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்த 38 மீனவர்கள் கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் இந்திய கடல் எல்லைக்குள் அத்து மீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விளக்கமறியலில் இருந்துவரும் மீனவர்களும் தம்மை விடுவிக்கக்கோரி உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமையிலிருந்து இவர்கள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மீனவர்களை நாம் நேற்றும் நேற்று முன்தினமும் சந்தித்துப் பேசினோம். ஆனால் அவர்கள் தங்கள் கோரிக்கையை கைவிடத் தயாரில்லை. தொடர்ந்து உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடப் போகின்றனர் என்று தெரிவித்துள்ளனர் என்றும் பிரதித் துணைத் தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 28 ஆம் திகதி யாழ். சுழிபுரம் சவுக்கடி கடற்கரையில் கரையொதுங்கிய மூன்று இந்திய மீனவர்களும் நேற்று புதன்கிழமை தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




## சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் இலட்சார்ச்சனைப் பெருவிழா

யாழ். சுன்னாகம் மருதனார் மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் இலட்சார்ச்சனைப் பெரு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

மேலும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 22 ஆம் திகதி திங்கட்கிழமை ஹனுமத் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு காலை 7 மணிக்கு 108 கலச அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு சந்தன அலங்கார பூஜையும் இடம் பெறவுள்ளது. (இ

## பணியாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான தீர்மானம் முதலமைச்சருக்கு அனுப்பி வைப்பு

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பள உயர்வு தொடர் பான கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானம் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கல்ந்துரையாடல் கடந்த 2 ஆம் திகதி வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் தலைவர் நா. கணேசன் தலைமையில் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள், உபதலைவர்கள், செயலாளர்கள் ஆகியோர் முன்னிலையில் ஆராயப்பட்டு பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது தொடர்பான தனிப்பட்ட கருத்துக்களும் பெறப்பட்டு கீழ்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் (2006 ஆம் ஆண்டு) நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சம்பள் திட்டத்தின் படி பணியாளர்கள் தற்போது சம்பளம் பெற்று வருகின்றனர். இவ்வடிப்படைச் சம்பளத்தின் முப்பது வீத சம்பள உயர்ச்சியை 01.01.2015 இல் இருந்து வழங்க வேண்டும் என்று தலைவர்கள், உபதலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரால் முன்வைத்த கருத்தை சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தலைவர் சி.நந்தகுமார் முன்மொழிய கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தலைவர் இ.உதயசூரியன் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேற்படி தீர்மானத்திற்கமை வாக பணியாளர்களுக்கு சம்பள உயர்ச்சி வழங்குவதற்கு தங்களது அனுமதியையும் வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கி உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் வடக்கு மாகாண கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ,யாழ்ப்பாண மாவட்ட தொழிற்திணைக்களம், வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கங்கள், யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், அனைத்து ப.தெ.வ.அ.கூ சங்கங்கள் /கொத்தணிகள்/ சி.வை.கூ. சங்கம் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## ஆசிரியர் சேவை உள்ளீர்ப்பு

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி 01.07.2008 இற்கு பின்னர் ஓய்வு பெற்ற சகல ஆசிரியர்களையும் ஆசிரியர் சேவை உள்ளீர்ப்பு தொடர்பான விண்ணப்பத்தினை ஆசிரிய நிர்வாக கிளையில் பெற்று 15.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார். (இ

## ஒரு நாள் வட்டார மாநாடு

சமாதானமாக இருக்க தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் என்ற தொனிப்பொருளுடைய ஒரு நாள் வட்டார மாநாடு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9.40 இற்கு இசையுடன் ஆரம்பமாகும்.

மு.ப 11.05 இற்கு கடவுள் தரும் சமாதானம் நம் சிந்தனையை விட உயர்வானது எப்படி என்ற பேச்சும் பி.ப 2.55 இற்கு சமாதானத்தை விரும்பும் மக்களையே யெகோவா ஏற்றுக் கொள்கிறார் என்ற முக்கிய பேச்சும் மேலும் பல பேச்சுக்களும் இடம் பெறும். (இ

## யாழ்ப்பாண பழையபூங்காவின் சமூக நல மேம்பாட்டுத் திட்டம்

வடமாகாண ஆளுநரின் பணிப்பிற்கமைய சேதமடையாத வெற்று குடிநீர் மற்றும் பழரச பிளாஸ்டிக் போத்தல்களை மூடியுடன் சேகரித்து அதனை பழைய பூங்காவில் அழகு படுத்திக் காட்சிப்படுத்தும் திட்டத்திற்காக இப் போத்தல்களை சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் சூழல் மாசடைதல் தடுக்கப்படுவதுடன் மாணவர்களுக்கும் சிறுவர்களுக்கும் சமூக அக்கறையுடன் செயற்படுவதற்கு வேண்டிய அறிவையும் அனுபவத்தையும் பெற்றுத்தரும் என நம்பப்படுகிறது.

வெற்றுப்போத்தல்கள் சூழலை மாசுபடுத்துவதோடு தொற்றுநோய் காவிகள் உருவாக்குவதற்கும் வழிவகுக்கின்றது. இன்றைய சூழலில் ஒவ்வொருவரும் சமூகநலனில் அக்கறையோடு செயற்பட வேண்டும் என்ற காரணத்தால் மேற்படி போத்தல்களை வைத்திருப்பவர்கள் உடனடியாக 072 9679872 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவித்தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

## நட்புறவைப் பேணுவதன் மூலமே குற்றங்களை கட்டுப்படுத்த முடியும்

**தெல்லிப்பழை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு**

பொதுமக்கள் பொலிஸாருடன் மிக நெருங்கிய நட்புறவை பேணுவதன் மூலம் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும் என தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜ.என்.எஸ்.கஸ்தூரியாராச்சி தெரிவித்தார். பிரதேசத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பொறுப்பதிகாரி தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது பொலிஸ் நிலையத்தில் கடந்த வருடத்தை (2013) விட இவ்வருடம் குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன. பொதுமக்களின் ஆதரவுடன் சமூகத்தில் நடமாடிய பல குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றங்கள் ஊடாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எமது பொலிஸ் பிரிவில் தற்போது, பெருங்குற்றங்கள், சிறு குற்றங்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள் ஆகியன குறைவடைந்து காணப்படுகின்றன. ஏனைய பொலிஸ் பிரிவுகளை விட குற்றச்செயல்கள் மிகக்குறைந்த பொலிஸ் பிரிவாக காணப்படுவதுடன், யாழ்.மாவட்டத்தில் முதற்தர பொலிஸ் நிலையமாக தெல்லிப்பழை தெரிவு செய்யப்பட்டுள்ளது.


தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் ஜனவரி மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையில் 6 சிறுவர் துஸ்பிரயோகங்களே இடம் பெற்றுள்ளதுடன், குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தால் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. சிறுவர் துஸ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதற்கு, பாடசாலை மட்டங்களில் விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், சிவில் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்களிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு, இரவு நேர பொலிஸ் ரோந்து பணிக்கு இராணுவத்தின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளதுடன், வீதிச்சோதனை நடவடிக்கை, சுற்றுகாவல் நடவடிக்கைகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரவு வேளைகளில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர் என பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கு கல்யாணம் ஆகிடுச்சாடா...

## பிரபா பிறந்தநாள் கொண்டாடியவரை தாக்கிய பொலிஸ்





விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த நாளை கொண்டாடிய குற்றத்துக்காக சென்னையில் திராவிட விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த உமாபதி என்பவர் பொலிஸாரால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

உடல் முழுவதும் பலத்த காயங்களுடன் ராஜீவ் காந்தி அரச வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வரும் உமாபதியை சந்தித்தோம். கடந்த 26ஆம் திகதி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் பிறந்தநாளுக்காக மந்தைவெளியில் விளம்பரப் பலகை வைத்திருந்தோம். அங்கே வந்த பொலிஸார் பனரை அகற்றுகிறோம் என்ற பெயரில் பிரபாகரன் படத்தைக் கிழித்துள்ளனர். இதற்கு அங்கிருந்த பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அவர்களிடம் அபிராமபுரம் எஸ்.ஐ. தரக் குறைவாகப் பேசியுள்ளார். அந்த சமயத்தில் அங்கே சென்ற நான் எஸ்.ஐயிடம், "எதற்காக இப்படி மோசமாக நடந்து கொள்கிறீர்கள்?' என்று கேட்டேன். "உன்னைத் தாண்டா முதல்ல அடிக்கணும்' என்று என்னை ஸ்டேஷனுக்கு கொண்டு சென்றார். அங்கே எஸ்.ஐ கலைச்செல்வி, கான்ஸ்டபிள் வடிவேல் ஆகியோர் என்னோட டிரெஸ்ஸை கழட்டிட்டு லத்தியால அடிச்சாங்க. எஸ்.ஐ. கலைச்செல்வி, "உனககு கல்யாணம் ஆகிடுச்சாடா...'னு கேட்டுட்டே என்னை உதைச்சாங்க. என்னால முடியலைங்க... அங்கேயே வலி தாங்க முடியாம சுருண்டு விழுந்துட்டேன்" என்றவரால் மேற் கொண்டு பேச முடிய வில்லை.

இதுகுறித்து அளிக்கப்பட்ட புகார் சென்னை உயர் நீதிமன்றத்தில் அவசர வழக்காக எடுத்துக் கொள்ளப் பட்டது. நீதிபதி ராமசுப்ரமணியம், "இப்படியா ஒரு மனிதரை மூர்க்கத்தனமாக அடிப்பார்கள்? ராஜீவ் காந்தி வைத்தியசாலை டீனை தலைவராகக்கொண்டு ஒரு மருத்துவக்குழு அமைக்கப் பட வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு தக்க சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யவும், இதற்கான அனைத்து செலவையும் அரசே ஏற்க வேண்டும்' என்று உத்தரவிட்டுள்ளார்.

எஸ்.ஐ.கலைச் செல்வியிடம் கேட்டபோது, சம்பவம் நடந்தபோது நான் ஸ்டேஷனில் இல்லை. சிலர் என்னை வேண்டும் என்றே இந்த விவகாரத்தில் சிக்க வைத்துள்ளனர். விசாரணையை எதிர் கொள்வேன்" என்றார.




கான்ஸ்டபிள் வடிவேல், "ஏதோ எமோஷனில் நடந்துவிட்டது. வருந்துகிறேன்" என்றார்.

மயிலாப்பூர் துணை கமிஷனர் பாலகிருஷ்ணன, "பொலிஸ் செய்தது சரிதான் என்று நான் நியாயப்படுத்த விரும்பவில்லை. ஆர்.டி.ஓ விசாரணைக்கு உத்தர விடப்பட்டு உள்ளது. தவறு செய்தவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

பார்க்கலாம்!

ஜூனியர் விகடன்

## மைத்திரிபால தனது பொறுப்பினை நிறைவேற்றும் வரை அவதானிப்பு



"நாம் இம்முறை நாடகம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். தமக்கு வழங்கப்பட்ட பொறுப்பை பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நிறைவேற்ற வேண்டும். அவர் தமது பொறுப்பை நிறைவேற்றும் வரை நாம் அவதானித்துக் கொண்டே இருப்போம்" என நீதியான சமூகத்துக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் கோட்டே நாக விகாராதிபதி மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு,

"எதிர்க்கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழித்து, ஜனநாயகத்தை மீள ஸ்தாபிக்க அனைவரும் கூடியுள்ளனர்.

18 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 17 ஆவது திருத்தச் சட்டத்தை மீள் நடைமுறைப்படுத்தி பொலிஸ், தேர்தல், நீதித்துறை ஆகியவை சுயாதீனப்படுத்தப்படும். புதிய தேர்தல் முறைமை உருவாக்கப்படும்.

இம்முறை நாம் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம்.

பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைத்து இந்த வேலைத்திட்டத்தை பொறுப்பளித்துள்ளோம்.

தமக்கு வழங்கப்பட்ட யொறுப்பை அவர் சரியாக செய்து முடிக்கும் வரை நாம் அவதானித்துக் கொண்டேயிருப்போம்.

அதற்கான திட்டத்தை வகுத்து செயற்பட அனைத்து கட்சிகளும் தமது ஆதரவை வழங்க வேண்டும். அதன் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலொன்றை நடத்துங்கள். தமக்குத் தேவையான அரசை மக்கள் தெரிவு செய்யட்டும்" - என சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (இ-5)

### 107 குடும்பங்களைச் சேர்ந்த 520 பேர் வெளியேற்றம்

மலையகத்தில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக அம்பகமுவை பிரதேச செயலகத்துக்குபட்ட பகுதிகளில் 107 குடும்பங்களைச் சேர்ந்த 520 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அம்பகமுவை பிரதேச செயலாளர் எச்.எம்.சி.கே.ஹேரத் தெரிவித்தார்.

அம்பகமுவை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மொக்கா, லொய்னோன் மற்றும் பொகவான ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மொக்கா தோட்டத்தில் 45 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேரும், லொய்னோன் தோட்டத்துக்குட்பட்ட பகுதியில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 210 பேரும் பொகவான தோட்டத்தில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள், கெம்பியன் தமிழ் வித்தியாலயம், லின்போர்ட் தமிழ் வித்தியாலயம், கார்மோட் தமிழ் வித்தியாலயம், லொய்னோன் தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான நிவாரண உதவிகளை அம்பகமுவை பிரதேசசெயலகம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மைத்திரிபால-ரணிலுடன் முதலில் பேச்சுவார்த்தை

### அப்புறம்தான் ஆதரவு-பொன்சேகா



பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் இடம்பெறும் பேச்சின் பின்னர் ஏற்படும் இணக்கப்பாட்டையடுத்தே ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கு எமது முழு ஆதரவை வழங்குவோம் என ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, தற்போதைய நிலையில், ஜனநாயக கட்சி பொது வேட்பாளருக்கு 80 சதவீத ஆதரவை வழங்கியுள்ளது. ஆனால், பொது வேட்பாளராகக் களமிறங்கியுள்ள மைத்திரிபால சிறிசேனவுடன் இன்னும் எந்த விதப் பேச்சையும் நாம் நடத்தவில்லை.

பொது வேட்பாளராகக் களமிறங்கிய பின்னர் திங்கட்கிழமைதான் நான் அவரை முதன்முறையாக சந்தித்தேன். அவருடன் ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலயம் பேசுவதற்கு கால அவகாசம் கோரியுள்ளேன்.

அவருடனும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சு நடத்தியதன் பின்னரே மேலதிகமாகவுள்ள 20 வீத ஆதரவை வழங்குவது குறித்து தீர்மானிப்போம்.

மேலும் எதிரணியின் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் நாம் எமது ஆதரவினை தெரிவிக்கும் வகையில் கலந்து கொண்டிருந்தோம். மகிந்த அரசாங்கத்தின் ஊழல் நிறைந்த ஆட்சிக்கு எதிராக பொது எதிரணி ஒன்றிணைந்துள்ளது வரவேற்கத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உந்துருளிகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலக பிரிவுகளில் கடமையாற்றுகின்ற வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான உந்துருளிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வைத்து கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் 180 ஆண் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான உந்துருளிகள் வழங்கி வைக்கப்பட்டன. பெண் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான உந்துருளிகள் மிக விரைவில் வழங்கப்படுமெனஅறி விக்கப்பட்டது. (2-263)




# வெள்ளத்தால் அழிந்த வீடுகளில் குடியேற வசதி செய்து தாருங்கள்

## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

(மன்னார்)

மன்னார்,வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைககலநாதன்,எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டதோடு அம்மக்களுக்கு மேற்கொள்ள வேண்டிய அவசிய தேவைகள் குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையின் காரணமாக சௌதபார், சாந்திபுரம், ஜிம்ரோன் நகர், பள்ளிமுனை, விடத்தல் தீவு ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் மகிழங்குளம், விளக்கு வைத்த குளம் ஆகிய கிராமங்களிலும் மக்கள் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த மக்களுக்கு போதிய அளவு உதவிகளை செய்ய அதிகாரிகள் முன்வரவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மன்னார் சௌத்பார் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் கடல் நீர் உட்சென்றுள்ளமையால் குறித்த வீடுகளில் உள்ள மலசலகூடங்கள் நிறைந்து அப்பகுதியில் சுகாதார பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த மக்களுக்கு மூன்று நாட்களுக்கான உலர் உணவுகள் மாத்திரமே மன்னார் பிரதேச செயலகத்தினால் வழுங்கப்பட்டுள்ளதாகவும் இனி வரும் நாட்களில் தாம் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடத்தல் தீவு கிராமத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் பொது மண்டபங்களிலும், ஆலயங்களிலும் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கு ஒரு வாரத்திற்கான உலர் உணவுகளை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் வழங்கி வருகின்றார்.

எனினும் ஒரு சில தினங்களில் மீண்டும் வீடு செல்லும் தாம் பாதிக்கப்பட்ட தமது வீடுகளில் எவ்வித பிரச்சினைகளும் இன்றி குடியமர வேண்டிய ஏற்பாடுகளை செய்யுமாறு அம்மக்கள் பிரதேச செயலாளர்களிடம் கோரியுள்ளனர்.

தற்போது மழை காரணமாக நுளம்பின் பெருக்கம் அதிகரிததுள்ளமையினாலும் தாம் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ-2-250)

## பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார் து.ரவிகரன்

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட தண்டுவான், பழம்பாசி, பெரிய இத்திமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை சந்தித்து அவர்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளை வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் கேட்டறிந்துள்ளார்.

குறித்த பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் சந்திப்பொன்றை நடத்துமாறு து.ரவிகரனிடம் கேட்டமைக்கு அமையவே தண்டுவான் பொது நோக்கு மண்டபத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இதன்போது பொதுமக்கள் தமது குறைகள் மற்றும் கோரிக்கைகளை அவரிடம் முன் வைத்தனர். எழுத்து மூலமும் வாய்மொழி மூல மும் தெரிவிக்கப்பட்ட குறைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களையும் தொடர்புகொள்வதாக அம்மக்களுக்கு உறுதியளித்தார்.

அதனை தொடர்ந்து பெரிய இத்திமடு, தட்டாமலை, தண்டுவான், பழம்பாசி, கரடிப்பிலவு, 17 ஆம் கட்டை, மாமடுச்சந்தி ஆகியகிராமங்களில் உள்ள வீதிகள், குளங்கள், பாடசாலை, விளையாட்டு மைதானம் என பல இடங்களையும் மக்கள் பிரதிநிதிகளுடன் சென்று பார்வையிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட பிரதேச மக்களின் சுகாதார நலன்கருதி, வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடம் ஏற்கனவே இப்பகுதி மக்களால்கேட்டுக்கொண்டதற்கமையவைத்திய நடமாடும் சேவை ஒன்றை தண்டுவான் பகுதி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்பாடு செய்தமை தொடர்பில் அப்பகுதி மக்கள் நன்றிகளையும் தெரிவித்திருந்தனர். (அ-2)

# வீதி புனரமைப்பை விரைவில் முன்னெடுக்க கோரிக்கை

(முள்ளியவளை)



நெடுங்கேணி பிரதேச சபைக்குட்பட்ட நெடுங்கேணி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வில்லையடி விநாயகர் கோவில் வீதியின் நடுவில் கிரவல் மண் குவிக்கப்பட்டு அவை பரவப்படாமையால் அப்பாதையூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி திருத்தப்பணிக்கென ஒப்பந்தகாரரினால் ஒப்பந்த அடிப்படையில் எடுக்கப்பட்ட நிலையில் கிரவல் மண் வீதி நெடுங்கிலும் குவிக்கப்பட்டது.

குவிக்கப்பட்ட கிரவல் மண் 15 நாட்கள் கடந்த நிலையிலும் இன்று வரை வீதியில் பரவப்படாமையால் பயணிப்போர் இடறிவிழும் நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவ்வீதியூடாக தினமும் வாகனங்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் என பல தரப்பினர் தமது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பயணித்து வருகின்றனர்.

கிரவல் மண் வீதிக்கு நடுவே குவிக்கப்பட்டுள்ளமையால் இரவு நேரங்களில் இதனூடாகப் பயணிப்போர் பெரும் சிரமப்படுவதுடன் எதிரே வரும் வாகனங்களுக்கு வழி விட முடியாது உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் காலம் தாழ்த்தாது ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள் ஊடாக குவிக்கப்பட்டுள்ள கிரவல் மண்ணை வீதிக்கு பரவி மக்கள் சீரான போக்குவரத்தை மேற்கொள்ள உதவ வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(அ-2-300)

## கட்டாக்காலி மாடுகளால் வீதியில் பயணிப்பதில் சிரமம்



நெடுங்கேணி பிரதேச சபைக்குட்பட்ட ஒட்டுசுட்டான் நெடுங்கேணி பிரதான வீதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி மாடுகள் வீதிக்கு நடுவே குறுக்காக படுத்துக் கிடப்பதால் வாகனங்களில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இந்த பிரதான வீதி வழியாக தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் மற்றும் பேருந்துகள் பயணித்து வருகின்ற நிலையில் இரவு வேளைகளில் வீதி விபத்துக்களும் அதிகமாக இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதேபோன்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட மாங்குளம், முல்லைத்தீவு பிரதான வீதியிலும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை கட்டுக்கடங்காத நிலை காணப்படுவதாக பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக்காட்டாலி மாடுகள் வீதியில் படுத்துறங்குவதால் அவ்விடம் அசுத்தமடைவதுடன் மழை நேரங்களில் வாகனங்கள் செல்லும் போதும் பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் மீது இக்கழிவு தெறிக்கப்படுவதால் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே வீதியில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை நீக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-300)

# மாதிரிக் கிராம வேலைத்திட்டம் குறித்து மக்களுக்கு விளக்கம்

## வருகிறார் அமைச்சர் டளஸ்



(சிவநகர்)

இளைஞர் அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கிளி நொச்சிக்கு வருகை தரவுள்ளார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான மாதிரிக் கிராம அபிவிருத்தி தொடர்பில் விளக்கவே அவர் வருகை தரவுள்ளார்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைச்சர் கலந்து கொள்ளும் செயலமர்வு ஒன்று நடைபெற உள்ளது.இந்த செயலமர்வில் கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தி யோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள அம்பாள்நகர் கிராமத்தில் மாலை 4.30 மணிக்கு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை கிராம மக்களுடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ள கலை கலாசார நிகழவிலும் அமைச்சர் கலந்து கொள்ள உள்ளார்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமை புரியும் அமைச்சின் உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இவ் அமைச்சின் தேசிய மனித வள அபிவிருத் திப் பேரவையின் மாதிரிக் கிராம அபிவிருத்தி வேலைத் திட்டம் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைபபள்ளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை நாட்டின் நலனுக்காகப் பிரயோகித்தார்

## அமைச்சர் பந்துல புகழாரம்

(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஏனைய ஜனாதிபதிகளை விடவும் இந்நாட்டிற்கு அதிக ளவில் துரோகம் இழைக்கப்பட்டுள்ளதா? என கேள்வியெழுப்பிய கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை கொண்டு அதிகாரத்தை நாட்டின் நலனுக்காக பிர யோகித்த ஒரே தலைவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவாகும் எனவும் சுட்டிக்காட்டியு ள்ளார்.**



கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலு வலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்,இத் தேர்தலின் மூலம் 21 மிலலியன்மக்கள்வாழும்இந்நாட்டை ஆட்சி புரிய பொருத்தமானவர் யார் என்பதை நாட்டு மக்களே தீர்மா னிக்க வேண்டும்

இலங்கையை இதுவரை ஆண்ட ஜனாதிபதிகளில் தற்போ தைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால ஏனைய ஜனாதிபதிகளை விடவும் இநநாட்டிற்கு துரோகம் இழைக் கப்பட் டுள்ளதா?

ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதி பதியின் ஆட்சியின் போதே நாட்டில் கறுப்பு ஜூலை ஏற்பட்டது. விடுதலை புலிகளின் தோற்றத்திற்கும் தமிழர் களின் வைராக்கியமும் அதிகரிப்ப த ற்கும் கறுப்பு ஜூலையே பிரதான காரணமாகும். அதேபோன்று நாட்டின பாரிய போராட்டமான ஜூன் வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது தொழிலாலர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதே போன்று ஆர்.பிரேமதா ஸவின் ஆட்சியின் போது விடு தலை புலிகளுடன் ஒப்பந்தம் கைச் சாத்திட்டு ஆயுதங்களை வழங்கிய துடன் இந்நாட்டை இரண்டாக பிளவு படுத்த முனைந்தனர். அத்தோடு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் போது இனவாதம் போதிக்கப்பட்டது நாடு இரண்டாக பிளவுபடுத்த முனை ந்தனர்.

இருப்பினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்தினார். அதேபோன்று பல அபிவிருதகி பணிகளை முன்னெடுததார்.

எனவே மூன்றாவது முறை யும் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றி உறுதியானது என அவர் மேலும் தெரிவித்தா. (இ-5)

## பந்துல நாட்டைவிட்டு வெளியேற ஆயத்தம்

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த போட்டியிடும் இந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் குழுவின் முக்கியஸ்தரான அமைச்சர் பந்துல குணவர்த்தன திடீரென வெளிநாட்டு விஜயத்தை மேறகொள்ள தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இதனால் அரசின் முக்கிய அமை சசர்கள் சிலர் வேதனையுடன இரு ப்பதாகவும், இவரின் விஜயத்தை ஒத்திவைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 300 | 240 | 250 | 250 |
| தக்காளி | 300 | 200 | 240 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 50 |
| கோவா | 140 | 100 | 90 | 120 |
| கரட் | 300 | 200 | 180 | 240 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 50 | 100 | 90 | 80 |
| வாழைக்காய் | 50 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 160 | 150 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 200 | 260 | 200 | 160 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 240 |
| பீற்றூட் | 200 | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 300 | 250 | 240 | 240 |
| முருங்கைக்காய் | — | 350 | — | 160 |
| போஞ்சி | — | 200 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 100 | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 60 | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 35-45 |
| இராசவள்ளி | 150 | 140 | 150 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 212

டொறின் மன்மதநாயகம்




சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிம





ராஜமணி சுப்ரமணி




சுஜன் மகேந்திரன்




கனகரத்தினம் கீர்த்தனா




துஷ்யந்தி துஷி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1001

## மீனா கொடுத்த நிலக்கடலை!



வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து, வறுத்த நிலக்கடலைகளை அம்மா உடைத்துக் கொடுக்க, ஐந்து வயது மீனா, அவைகளை ரசித்து ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். திடீரென ஒரு சந்தேகம் எழுந்தது.

அம்மா, அணில்களுக்கு நிலக்கடலை ரொம்பப் பிடிக்கும்னு எங்க மிஸ் சொன்னாங்க. அதுக்கு யாருமா கடலையை உடைச்சுக் கொடுப்பாங்க? என்று கேட்டாள்.

அதுவே, ரெண்டு முன்னங்கால்களில் பிடிச்சுக்கிட்டு பல்லால கடிச்சு உறிக்கும் என்றார் அம்மா.

மீனா, கைக்குழந்தையாக இருக்கும் போது, அம்மாவின் இடுப்பில் அமர்ந்தவாறு மொட்டைமாடியில் சாப்பிடுவாள். அப்போது, எங்கிருந்தோ திடீரென ஓர் அணில்கள் வரும். மீனா கையை நீட்டி, "உ....உ...' என்று குதிப்பாள்.

அம்மா, சில பருக்கைகளை சுவர் மீது வைக்க, அணில்கள் அதைச் சாப்பிடும். தனது எல்கேஜி புத்தகத்தில் அணில் படத்தைப் பார்த்ததுமே, மீனாவுக்கு ரொம்ப சந்தோஷம்.

நம்ம வீட்டு மாடியில் வர்ற அணில்களும் வேர்க்கடலையை உடைச்சுத்தான் சாப்பிடுமா? என்று கேட்டாள் மீனா.

"ஆமாம் மீனுக்குட்டி" என்றார் அம்மா.

உடனே, சில கடலை மணிகளை எடுத்துக்கொண்டு மொட்டைமாடிக்குச் சென்ற மீனா, கைப்பிடிச் சுவரில் வைத்துவிட்டு, குடுகுடுவென கீழே வந்தாள். "பாவம் அணிலுங்க! பல்லால கடலைத் தோலை கஷ்டப்பட்டுக் கடிக்கிறதாலதான், அதுங்க பல்லு பெருசா வெளியே தெரியுது.

நம்ம வீட்டு அணிலும் அப்படி கஷ்டப்பட வேணாம்னு, உரிச்ச கடலையை வெச்சிட்டு வந்திருக்கேன என்றவளை, அன்போடு அணைத்துக் கொண்டார் அம்மா.

## ஸ்ருதி!

ஸ்ருதி, குட்டிப் பெண்.

அவள் வரையத் தொடங்கினால், நாள் முழுக்க வரைந்து கொண்டே இருப்பாள்.

அவள் பிஞ்சு விரல்களில் க்ரெயான்கள் உயிர்பெறும்.

உனக்கு எத்தனை ஃப்ரெண்ட்ஸ்? என்று



கேட்டால், மயில், யானை, குயில், மான்... என்று சொல்லிக்கொண்டேபோவாள்.

ஆனால், பல்லி மட்டும் பிடிக்காது.

அம்மா அவளை சாப்பிடவைக்க, பல்லியைக் காட்டி பயமுறுத்துவார். பல்லியைப் பார்த்துவிட்டால், கைகளால் முகத்தை மூடி, ஓடிப்போ என்பாள்.

ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டால், ஊரிலிருந்து அப்பாவின் அம்மா பேசுவார். தாத்தாவும் பாட்டியும் தனியா இருக்காங்க.

நடக்க முடியலையாம், சோறு சமைக்க முடியலையாம்.

அங்கதான் ரெண்டு மகன்கள் இருக்கிறாங்கள்ல, அவங்க பார்க்க மாட்டாங்களா என்று அம்மா கோபமாகிவிடுவாள்.



அந்த நேரத்தில், பூனைக்குட்டி, நாய்க்குட்டியோடு ஸ்ருதி பேசிக்கொண்டிருப்பாள்.

அன்று காகத்தோடு பேசிக் கொண்டிருந்தபோது, அந்தக் காட்சியைப் பார்த்தாள்.

மூன்று மாதங்களுக்கு முன் கட்டப்பட்ட கோயில் சுவரை ஒட்டி இருந்தது, ஒரு பலகை.

அதிலிருந்த ஒரு பள்ளத்தில் ஒரு பல்லி.

அதன் ஒரு காலில் சிறிய ஆணி தைத்திருந்தது.

அம்மா, அம்மா... என்று பதறியபடி வீட்டுக்கு ஓடிய ஸ்ருதி, அம்மா, உன் ஃப்ரெண்டைக் காப்பாத்துமா என்றாள்.

அம்மா அங்கே வந்தார்.

சிக்கியிருந்த பல்லிக்கு, இன்னொரு பல்லி உணவு ஊட்டியதையும் பார்த்தார்.

சிறிய குச்சியை எடுத்து, பல்லியின் கால் இடைவெளியில் செருகித் தள்ளினார். தோல் சற்று பிய்ந்து, ஆணியிலிருந்து விடுபட்டது பல்லி.

வீட்டுக்கு வந்த அம்மா, அப்பாவுக்கு போன் போட்டு உங்க அப்பா, அம்மாவை இங்கே கூட்டி வரலாம்ங்க" என்றார்.

நல்ல அம்மா என்று அம்மாவை கட்டிக் கொண்டாள் ஸ்ருதி.

## கீரியும் கோழிக்குஞ்சும்!

அந்தக் கோழிக்குஞ்சு தனியாக இரை தேடிச்சென்றது. அப்போது, புதர் மறைவிலிருந்து ஒரு கீரிப் பிள்ளை பாய்ந்து வந்தது.

ஆஹா...ஹா... குட்டிப் பயலே உன்னை நான் சாப்பிடப்போறேன் என்றது.

கோழிக்குஞ்சு பயப்படவில்லை. மரியாதையா போயிடு. இதுக்கு மேலே ஒரு அடி முன்னாடி வெச்சாலும், நான் என் பிரதர்ஸைக் கூப்பிடுவேன் என்றது.

கீரிப்பிள்ளைக்குச் சந்தோஷம். அட்ரா சக்கை... உனக்கு பிரதர்ஸ் இருக்காங்களா... தாராளமா கூப்பிடு. ஒண்ணுக்கு மூணு கிடைச்சா, கசக்குமா? என்றது கீரிப்பிள்ளை.

சொன்னாக் கேளு. என் அம்மாவையும் கூப்பிடுவேன் என்றது கோழிக்குஞ்சு. என்ன மிரட்டுறியா? உன் அம்மாவால என்னை எதுவும் செய்யமுடியாது. குஞ்சுகளோடு தாயும் கிடைச்சா, பயங்கர விருந்துதான்.

கூப்பிடு பார்ப்போம் என்றது கீரிப்பிள்ளை. உன் விதியை மாத்த முடியாது என்ற கோழிக்குஞ்சு, அம்மா, அண்ணா எல்லோரும்



வாங்க என்று கத்தியது. அடுத்த சில நொடிகளில்... அங்கே வந்த ஒரு நாயையும் அதன் குட்டிகளையும் பார்த்த கீரிப்பிள்ளை. மிரண்டுபோனது. நான் தத்துப்பிள்ளை. இவங்கதான் என் அம்மா, பிரதர்ஸ் என்று கோழிக்குஞ்சு சொல்லிமுடிக்கவில்லை... கீரிப்பிள்ளை பிடித்தது ஓட்டம்

12.2014
04

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1259 - பிரான்சின் ஒன்பதாம் லூயி இங்கிலாந்தின் மூன்றாம் ஹென்றியும் பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன் படி நோர்மண்டி உட்பட ஐரோப்பாவில் உள்ள பிரெஞ்சுப் பகுதிகளுக்கு ஹென்றி உரிமை கொண்டாடுவதில்லை எனவும் ஆங்கில புரட்சியாளர்களுக்கு லூயி ஆதரவு வழங்குவதில்லை எனவும் முடிவாகியது.
- 1639 - ஜெரிமையா ஹொரொக்ஸ் முதன் முதலாக வெள்ளிக் கோள் சூரியனுக்கும் பூமிக்குமிடையில் செல்வதை அவதானித்தார்.
- 1791 - உலகின் முதலாவது ஞாயிறு இதழ் தி ஒப்சேர்வரின் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1829 - ஆங்கிலேய ஆட்சியின் கீழிருந்த இந்தியாவில் சதி முறையை ஒழிக்க ஆளுநர் வில்லியம் பெண்டிங்க் பிரபுவால் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1918 - முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய அமெரிக்க அதிபர் வூட்ரோ வில்சன் பிரான்ஸ் சென்றார். பதவியில் உள்ள அமெரிக்க அதிபர் ஒருவர் ஐரோப்பா சென்றது இதுவே முதற் தடவையாகும்.
- 1945 - ஐக்கிய அமெரிக்கா ஐ.நாவில் இணைவதற்கு ஒப்புதல் அளித்து செனட் அவை வாக்களித்தது.
- 1958 - பிரெஞ்சு அதிகாரத்தின் கீழ் டொஹெமி சுயாட்சி உரிமை பெற்றது.
- 1959 - ஐக்கிய அமெரிக்காவின் மேர்க்குரித் திட்டத்தின்கீழ் சாம் என்ற குரங்கு 55 மைல்கள் உயரம் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாகப் பூமி திரும்பியது.
- 1967 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்கா, மற்றும் தெற்கு வியட்நாம் படைகள் மேக்கொங் டெல்ட்டா பகுதியில் வியட்கொங் படைகளுடன் மோதினர்.
- 1971 - இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைமையை ஆராய ஐ.நா பாதுகாப்பு அவை அவசரமாகக் கூடியது.
- 1971 - பாகிஸ்தானின் கடற்படையினரையும் கராச்சி நகரையும் இந்தியக் கடற்படையினர் தாக்கினர்.
- 1976 - ஆச்சே விடுதலை இயக்கம் அமைக்கப்பட்டது.
- 1991 - ஐக்கிய அமெரிக்காவின் பான் ஆம் விமான சேவை தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.
- 1992 - ஐக்கிய அமெரிக்கா சோமாலியாவுக்கு 28,000 அமெரிக்கப் படைவீரர்களை அனுப்பியது.
- 2005 - ஹொங்கொங்கில் பல்லாயிரக்கணக்கானோர் ஜனநாயகம் வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிறப்புகள்

- 1919 - ஐ. கே. குஜரால், 15ஆவது இந்தியப் பிரதமர்
- 1969 - ஜெய்-சி, அமெரிக்காவின் ராப் இசைக் கலைஞர்
- 1977 - அஜித் அகர்கர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்

இறப்புகள்

- 1122 - ஓமர் கய்யாம், பாரசீகக் கவிஞர் (பி. 1048)
- 1976 - ந. பிச்சமூர்த்தி, தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் (பி. 1900)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து– 10

...கொல்லப்போறதுக்கு முன்னால் குல தெய்வத்துக்கிட்ட அருளு கிருளு கேப்பானோ என்னமோ இவன் வசதிக்குத் தக்கன பன்னி எப்பத் திரும்பி குடுக்குமோ அப்பபப் போடுவானய்யா கழுத்துல ஒரு போடு; ஒரே போடுதான் போடுவான். எத்தம் பெரிய பன்னியாயிருந்தாலும் மூள கலங்கித் தலசுத்தி விழுந்திரும். அதுக்கு பெறகுதான் நடக்கும் கட்டையன் கண்காட்சி.

அடி வாங்குன பன்னி சித்தம் தெளிஞ்சு சுதாரிக்கிறதுக்குள்ள மளார்ன்னு அதுமேல பாய்வான். பாஞ்சா வேகத்துல பொரட்டியும் போட்டுருவான் பன்னிய.

தன் ரெண்டு கால் கட்ட வெரலுக்கும் பெருவிரலுக்கும் மத்தியில பன்னியோட பின்னங்கால் ரெண்டையும் பின்னிக்கிருவான். பன்னிமேல விழுந்து இடது கைய சங்குல போட்டு ஆனமட்டும் அழுத்திக்கிருவான்.

கத்தவும் முடியாம மிசுங்குவும் முடியாம பண்றத பண்ணிக்கன்னு கெடக்கும் பன்னி. இடுப்புல வச்சிக்கிற சூரிய எடுப்பான் இப்ப. அள்ளையில குத்துவான் அங்கிட்டும் இங்கிட்டும்.

பிள்ள அழுகிற மாதிரி பெருங் கொண்ட குரலெடுத்துப் பன்னிகத்தும்; சத்தம் ஈரக் கொலய அறுக்கும்; ரத்தமா ஒழுகும்; ரத்தம் வெளியேற உயிரும் வெளியேறும்; செத்துப் போயிறும்.

சூரிய உருவி அதுல மண்ண அள்ளிப் போட்டு ரத்தம் போகத் துடைச்சு எறிஞ்சிட்டு இடுப்புல அதைச் சொருகிக்கிட்டு விலாக்கறி வீடு வந்து சேரணும்ன்னு சொல்லிட்டு உருமால அவுத்து ஒடம்பத் தொடச்சுக்கிட்டே போயிருவான் கட்டையன்.



இப்படியாப் பட்ட கட்டையனுக்கும் கருவாச்சிக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா? சொந்தம் வேணும்; ஆனா கல்யாணம் வேணாம்னு சொல்லுது ஒரு புத்தி.

கல்யாணம் பண்ணாம சொந்தம் கூடுமான்னு கேக்குது இன்னொரு புத்தி.

ஒண்ணு ரெண்டா யோசன பண்ணிக்க தாயின்னு கோளாறு சொல்லுது ஒரு கூட்டம். கட்டையன் மாதிரி ஒரு ஆம்பல எட்டு ஊர்லயும் உண்டுமா? கருவாச்சி போற நல்ல நேரம் கட்டையன் கொணத்தையே மாத்தலாமா இல்லையாங்குது இன்னொரு கூட்டம்.

இப்படியெல்லாம் யோசிச்சு யோசிச்சு மண்ட காஞ்சு போன பெரியமூக்கி எதுக்கும் பூக்கட்டிப் போட்டுப் பாத்துடறதுன்னு முடிவெடுத்தா.

சூடம் சாம்பிராணி கொளுத்தி சாமிகளேயெல்லாம் கும்பிட்டு கூப்பிட்டு நான் பெத்த மக நல்ல கதிக்கு வரணும்னா மஞ்சப் பூவக்குடுன்னு வெள்ளப்பூவு மஞ்சப் பூவு ரெண்டு பூவையும் கட்டிப்போட்டா. கருவாச்சியக் கூப்பிட்டு ரெண்டுல ஒண்ண எடுடீன்னா.

அவ காலுக்கு விழுகிறேன் சாமின்னு கதவுல ஒரு முட்டுமுட்டி தட்டுத்தடுமாறி ஒரு பூவ எடுத்தா.

பிரிச்சுப் பார்த்த–
மஞ்சப்பூவு–
சாமி வழி விட்ருச்சு.
கல்யாணமும் முடிஞ்சு போச்சு.

பஞ்சாயத்து முடிஞ்சன்னைக்கு ராத்திரி– சாணி மொழுகுன தரையில இத்த பாய விரிச்சு வாங்குன காலத்திலயிருந்து வண்ணாரு வீடு காணாத அழுக்குச் சமகாளத்துப் பொத்தி அனத்திக்கிட்டே படுத்துப் கெடக்கா கருவாச்சி.

தவுடு வறுத்து ஒத்தத் துணியில குடுத்தா சூடு தாங்கமாட்டான்னு ரெட்டத் துணியில போட்டுப் புடிச்சு அவ நெத்தியில வேது குடுத்துக்கிட்டேயிருக்கா பெரியமூக்கி.

(தொருடம்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

# கவலைகள் இன்றி வாழ்தல்!


...உங்களுடைய புரிந்து கொள்ளுதலுக்கு தடையாக இருக்கும் எதுவும் ஆன்மீகத்துடன் தொடர்புடையதல்ல என்பதில் தெளிவாக இருங்கள். ஆன்மீகம் என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கியது.

உங்களுடைய நான அது, மற்றும் நான் இது, என்கிற எல்லாக் கருத்துக்களையும் விட்டுவிடுங்கள்.

உங்கள் வாழ்க்கையை திறந்து வைத்துக் கொள்ளுங்கள். இதுவே ஆன்மீகத்துக்கு அடிப்படை. எது எப்படி இருக்கிற தென்றால்... எப்பொழுதும் பூட்டிய அறையிலேயே இருக்கும் ஒருவனுக்குத் திறந்த வெளியை பற்றியும் ஒன்றும் தெரியாது. அவன் எண்ணங்கள் மிகவும் குறுகியிருக்கும். இதுபோன்ற கட்டுப்பாடுகளை உங்கள் மீது சுமத்திக்கொள்ளும் பொழுது உங்களுக்குள் இருக்கும் எல்லையற்ற அன்பைப் பற்றியும் கருணையைப் பற்றியும் உங்களால் தெரிந்து கொள்ள முடியாது. நீங்கள் கவலைப்பட்டு குறை மட்டுமே கூறுவீர்கள். உங்களால் மலர முடியாது.

கருணையற்ற மக்களுக்கு எந்த விதமான நரகம் கிடைக்கும் என்று புத்தரிடம் ஒருமுறை கேட்கப்பட்டது. அவர் சொன்னார் உங்களால் அவர்களை நரகத்தில் போட முடியாது. ஏனெனில் ஏற்கனவே அவர்கள் நரகத்தில்தான் இருக்கிறார்கள்! நீங்கள் நரகத்தில் இருந்தால் மட்டுமே மற்றவர்களுக்கு நரகத்தை உருவாக்குவீர்கள். ஏனெனில் உங்களிடம் என்ன இருக்கிறதோ அதைத்தான் கொடுக்க முடியும்.

ஒரு சின்னக் கதை.......



ஒரு தாயும் மகனும் சூடான வாக்குவாதத்தில் இருந்தனர். தாய் மகனிடம் கேட்டாள் உனக்கு ஏதாவது மூளை இருக்கிறதா? மகன் சிரித்தான். தாய் அவளிடம் ஏன் சிரிக்கிறாய்? என்று கேட்டாள். அவன் சொன்னான் உங்களிடம் ஏதாவது இல்லை என்றால் மட்டுமே மற்றவர்களிடம் கேட்பீர்கள்! (சிரிப்பு)

நாம் அமைதியாக இல்லாத பொழுது மட்டுமே மற்றவர்களுடைய அமைதியைக் கெடுப்போம்.

நாம் மீண்டும் மீண்டும் நமது மனதை அலசி ஆராய்ந்து நமக்கு மகிழ்ச்சி அல்லது ஆனந்தத்தைத் தருவது எது என்று பார்க்க வேண்டும். மிகவும் தெளிவாக இருங்கள். மகிழ்ச்சியும் ஆனந்தமும் வேறு வேறாகும். ஆனந்தம் என்பது உங்களுள் எழும் ஒரு அற்புதமான ஆழ்ந்த உணர்வு;

## ஆன்மீகம் 94

அது உங்களை இந்த பிரபஞ்ச இருப்புத் தன்மையின் வேறொரு தளத்தில் இருப்பதான ஒரு உணர்வைக் கொடுக்கும். மகிழ்ச்சி அல்லது சந்தோஷம் என்பது வெளியுலக பொருள்களோடு தொடர்புடையது. அது நமக்கு தொடர்ந்து வலியையே தரும்.

மகிழ்ச்சி என்பது சார்புடையது; ஆனந்தமோ முழுமையானது. ஆனந்தத்திற்கு எதிர்ப்பதம் கிடையாது; நீங்கள் சந்தோஷமாக இருக்கும்பொழுது வருத்தம் கையருகில் காத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் மகிழ்ச்சியில் திளைக்கும் பொழுது அடுத்து வலியை எதிர்பார்க்கிறீர்கள். ஆனால் நீங்கள் ஆனந்தத்தில் இருக்கும் போது வெறுமனே இருக்கிறீர்கள். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப பாடசாலை பிள்ளைகள் மட்டத்தில் பெற்றோர்களின் பங்களிப்பு - ஓர் நோக்கு

உலகம் இருபத்தொறாம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. ஒரு நூற்றாண்டில் நின்ற மக்கள் அடுத்த நூற்றாண்டின் மலர்வை எதிர்நோக்கியுள்ளார்கள். புதிய நூற்றாண்டு என்றுமில்லாதவாறு நவீன தொழில் நுட்ப அறிவினைக் கொண்டதாக அமையப் போகின்றது. அதனை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும். அறிவும் வனப்பு முள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு சிறந்த முறையிலான ஆரம்பக் கல்வி அவசியமானதாகும். ஆரம்பக் கல்வியில் முறையான அபி விருத்தியைஏற்படுத்தவேண்டுமென்பது எல்லாக் கல்வி மான்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும்.

தேசிய ரீதியாகவும், வளர்முக நாடுகளின் மட்டத்திலும் சர்வதேச ரீதியாகவும் அதிக கவனயீர்ப்புக்குரிய அம்சமாக ஆரம்ப பாடசாலைக் கல்வி காணப்படுகிறது. அண்மைக்காலங்களில் குழந்தை உரிமை, குழந்தை நலன், குழந்தை பாதுகாப்பு, குழந்தை நேயம் போன்ற எண்ணக்கருக்கள் கல்வியுலகில் முனைப்புடன் கையாளப்படுகிறது. அந்த வகையில் ஆரம்பக்கல்வி



கல்வித் தரிசனம்

யினை வழங்குவதில் முதன்மையான அந்தஸ்தினை பெறக்கூடியவர்கள் பெற்றோர்கள் என்றால் அது மிகையாகாது. ஐக்கிய அமெரிக்காவினால் வெளியிடப்பட்ட கொல்மன்ஸ் (Cole mans Report-1964) அறிக்கையில் பிள்ளைக ளின் கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு மிக முக்கியமானது என வலியுறுத்தப்படுகிறது.

உலகம் முழுவதும் ஐம்பது மில்லியன் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது விருப்பத்திற்கு மாறாக அவர்களுக்கு தெரியாமலே அவர்கள் வாழும் சூழல் பாதிப்படைந்து வருகின்றது. இதனை ஆரம்ப பாடசாலைகளில் துலக்கமாக காண முடிகின்றது. ஐந்து வயதிலிருந்து பத்து வயதிற்கு உட்பட்டவர்களே ஆரம்ப பாடசாலை பிள்ளைகளாவர். இவர்கள் உடல், உள தொழிற்பாட்டு தரத்தில் இயங்குபவர்களாவர்.

உளவியலாளரான எரிக்ஸன் என்பவரின் கருத்துப்படி உள சமூக நிலைமையானது தன் முனைப்பு தாழ்வு மனப்பான்மைகொண்டதாக அமையும் என்பதாகும். அதாவது ஆரம்ப பருவ பிள்ளைகளின் உளநல மற்றும் உடல் நலம் இன்றியமையாத ஒன்றாகும் இப்பிள்ளைகளின் இவ்வாறான நலன்களில் செல்வாக்கு செலுத்துபவர்களே பெற்றோர்களாவர். ஓர் பிள்ளையின் முதற் பள்ளிக்கூடம் தாயின் கருவறையாகும். அதாவது இப்புவியினில் மலரும் ஒவ்வொரு மலரின் கற்றல் சூழலாக பெற்றோர்களே திகழ்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளையின் கற்றல் சூழல் அதாவது ஆரம்ப பருவ பாடசாலை பிள்ளைகளின் கற்றல் சிறப்பானதாகவும் வினைத்திறன் கொண்டதாகவும் அமையும் பட்சத்தில் அப்பிள்ளைகளின் எதிர்காலம் ஒளி பொருந்திய ஒன்றாக அமையும்

இன்றைய காலகட்டத்தினை பொறுத்தவரையில் வறுமை மற்றும் அனர்த்தங்கள், பொருளாதார நெருக்கீடுகள், போதை வஸ்துக்களுக்கு அடிமையாதல், தாய் தந்தையர்களின் வெளிநாட்டு மோகம் போன்ற பல காரணாங் களினால் சிறார்கள் ஆரம்ப கல்வியினை பெறக்கூடிய வசதிகள் இருந்தும் பெற முடியாதவர்களாக காணப்படுகிறார்கள். கூலி வேலைத் தொழிலாளிகளாகவும் விவசாயிகளாகவும் கடைக்காரர்களின் சில்லறை சிட்டுக்களாகவும் தெருவோர பயணிகளாகவும் அலைந்து திரியும் எத்தனையோ சிறார்களை நாம் காண்கின்றோம். அதுமட்டுமன்றி இன்று துஷ்பிரயோகத்தின் அடிநாதமாகவும் அலங்கார மாலையாகவும் கயவர்களின் பிடியில் சிக்கித் தவிப்பவர்கள் இவ்வாறான பிள்ளைகளேயாகும் என்பது யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத நிஜங்களாகும்.

கல்வியென்ற பாரிய விருட்சத்தின் பரந்து விரிந்த கிளைகளை இறுகப்பற்றிப்பிடித்து உயர மேலேற வேண்டியவர்களான இக்குழந்தைகள் கள்ளக் கடத்தல் மற்றும் போதை வஸ்து மற்றும் மது விற்பனையாளர்களாகவும் வலம்வரும்துரதிர்ஷ்டநிலைக்கு ஆளாகி விடுகின்றார்கள்.

பெற்றோர்களின் பலவீனங்களும் அக்கறையற்ற செயற்பாடுகளுமே இவ்வாறான நடத்தைகளுக்கு காரணங்களாகும். அதுமட்டுமன்றி பிள்ளைகளின் கற்றல் சூழலானது சிறப்பாக அமைவது பெற்றோர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது என்பதனை பெற்றோர்கள் நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும்.

படிப்பறிவு குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகள் மாத்திரமல்ல நல்ல படித்தவர்களின் பிள்ளைகள் கூட சில உள ரீதியிலான பிரச்சினைகளுக்கு ஆளாகும் நிலைமையினை நாம் சமூகத்தில் காண்கிறோம். அதாவது பெற்றோர்களான தாயும் தந்தையும் வேலைக்கு செல்பவர்களாக காணப்படுவார்கள். பிள்ளைகளை நல்ல புகழ் மிக்க வசதிகள் கொண்ட பாடசாலைகளில் சேர்ந்திருப்பார்கள். அப்படியிருந்தும் அப்பிள்ளைகளுக்கு சில நெருக்கீடுகளுக்கு ஆளாகியிருப்பர். அவ்வாறான பிள்ளைகளின் நடத்தை குண நலன்களை ஆராய்ந்து பார்த்தால் கற்றல் சூழலில் பெற்றோர்களின் பங்களிப்பானது மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதையும் மாலைநேர பிரத்தியேக வகுப்புகள் அநேகமாக கூடுதல் நெருக்கடிகளுக்குவழிவகுத்துவிடும் நிலைமைகளையும் காணக்கூடியதாயிருக்கும்.



பிள்ளைகள் அன்பான அரவணைப்பு மிக்க கற்றல் சூழலினையே பெரிதும் விரும்புகிறார்கள். தாயினதும் தந்தையினதும் வழி காட்டலுடன் பிள்ளைகள் கற்கும், எழுதும் அந்த அ என்ற ஆரம்ப எழுத்தானது பிள்ளையின் மனதில் எவ்விதம் ஆழமாக பதிந்து கொள்கிறதோ அதே விதம் அவர்களது நன் நெறி நடத்தைகளும் முன்னேற்ற கரமான நல்வாழ்வும் உறுதியோடு அமையும் என்பதே உண்மையுமாகும்.

ஆரம்பக்கல்வி அடைவுகள் பிள்ளைகளின் நுண்மதி சார்ந்ததாக இருப்பது யதார்த்தமானதொன்றாகும். ஆனால் அத்தகைய நுண்மதியினை வளர்ப்பதற்கான சூழலினையும் வசதிகளையும் பெற்றோர் வழங்கி வழிப்படுத்தாத விடத்து எதிர்காலத்தில் நுண்மதியினால் நுட்பமான குற்றங்களை செய்பவர்களைத் தான் சமூகம் கொண்டிருக்கும். பாடசாலையினை பொறுத்த வரை யில் ஆரம்ப பருவ பிள்ளைகளினது கற்றல் சூழலினை தீர்மானிக்கும் மற்றுமொரு முக்கியத்துவம் பொருந்திய காரணி அதுவாகும்.

ஆனால் இன்று எதிர்பாராத சில எதிர்மாறான நடவடிக்கைகள் இவ்வெண்ணக்கருக்களில் வடுக்களினை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது பாடசாலையானது அரசினால் நிர்வகிக்கப்படுகின்றது. ஆனாலும் நடைமுறையில் பாடப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், பேனை, பென்சில், பேருந்து கட்டணம், சீருடை போன்றவ ற்றிற்கும் பணம் ஒதுக்க வேண்டியுள்ளது. வசதி கட்டணங்களையும் வெவ்வேறு விழாக்களினையும் கொண்டமைந்த பாடசாலை சூழலானது மாணவர்களின் பங்களிப்பினை எதிர்பார்க்கும் நிலையினை நாம் சமூகத்தில் உருவாக்கியிருக்கிறோம்.

ஆனால் இவ்வாறான பண வசதி எல்லா பெற்றோர்களிடமும் இருப்பதில்லை.

ஆனால் இதற்கு மாறாக பாடசாலை கட்டாயப்படுத்தி பணம் செலுத்துமாறு கேட்கும் போது அம் மாணவர்கள் சிறு தொழில்களை நாடியும் சிறு களவுகளில் ஈடுபட்டும் பிச்சை எடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட இயல்பாகவே தூண்டப்படுகின்றனர். இது இப் பிள்ளைகளினது கண்ணோட்டங்களையும் வாழ்க்கை முறைகளையும் தவறான திசைக்கு திருப்பி விடுகின்றது.

இவ்வாறான செயற்பாடானது முற்றாக நிறுத்தப்படுமானால் அது வறுமைப்பிணியில் கற்கும் மாணவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி இலட்சியம் பொருந்திய எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டும் முதற்படியாக அமையும் என்பதே அன்றாடம் உழைத்து கஷ்ட நிலைமையிலும் தமது வயிற்றினை பசியோடு காய வைத்து உதிரா பூக்களான தமது பிள்ளைகளின் கல்விக்காக பாடுபடும் பெற்றோர்களின் உள்ளக்குமுறல்களாக இருக்கின்றதென்றால் அது மிகையாகாது.

பாடசாலையுடன் இணைந்து பெற்றோர்களும்தங்களது பங்களிப்புடன் கூடிய அர்ப்பணிப்பினை வழங்க வேண்டும். அதாவது பாடசாலை நிர்வாகம் பெற்றோர்கள் உறவானது உறுதியானதாக திகழ வேண்டும். அதேபோல ஆசிரியர்கள்-பெற்றோர்களது உறவும் அமையும் பட்சத்தில் பிள்ளைகளினது கற்றல் சூழல் மிகவும் வினைத்திறனுடன் வாண்மை பொருந்திய தொன்றாக காணப்படும். பிள்ளைகளுக்கு பொருந்தும் வகையில் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுகாதாரமும் நவீனமயமாகவும் அழகாகவும் காணப்படல் வேண்டும்.

ஆரம்ப பருவ பாடசாலை பிள்ளைகள் ஈடுபடுவதற்கு பெரிதும் விரும்பும் இணைபாடவிதான செயற்பாடுகளான விளையாட்டு, இசை, நடனம், மொழித்திறன் போன்றவற்றை கற்றுக் கொடுக்கும் சூழலினையும் பாடசாலை உருவாக்க வேண்டும்.

தரமான கல்வியே தரமான சமூகத்தினை உருவாக்கும். அந்த வகையில் தமக்கும் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், தேசத்திற்கும் முழு மானிட குலத்திற்கும் நன்மை தரக்கூடியவற்றை உருவாக்குவதில் முதன்மையான எதிர்கால பங்கேற்பாளராக குழந்தைகளை மாற்ற வேண்டுமானால் அதிக அர்ப்பணிப்பினை வழங்க வேண்டியவர்கள் பெற்றோர்களே என்பது அடிக்கோடிட்டு காட்ட வேண்டியதொன்றாகும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது எமது ஆன்றோர் வாக்கு. இப் பரணி போற்றும் தெய்வங்களே பெற்றோர் கள் தான்.

இப் பெற்றோர்கள் தமது குழந்தைச் செல்வங்களுக்கு அளிக்கக்கூடிய அழிவில்லாச் செல்வமே கல்விச் செல்வமாகும். இச் செல்வத்தினை சிறப்பான முறையில் குறைகளற்ற விதத்தில் மலரவிருக்கும் ஆரம்ப பருவகால மொட்டுக்களுக்கு வழங்க வேண்டும் என்பதனையே ஒவ்வொரு பெற்றோர்களும் தமது மனத் திரையில் உள்வாங்க வேண்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

செல்வி:-நவாஸ் றிஸ்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள் - கிழக்குமாகாணம்


**கணிதம்** **மூன்று மணித்தியாலம்**

## பகுதி A
### எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக


1. சுருக்குக : 1.2 + 0.35
2. ரூ. 78 பெறுமானமுள்ள ஒரு புத்தகத்தை வாங்குவதற்கு ரூ. 100 தாளொன்றை வழங்கும் போது கிடைக்கும் மீதியைக் காண்க.
3. சுருக்குக : 3/5 - 2/5
4. உருவில் உள்ள X இன் பெறுமானத்தைக் காண்க.





5. தீர்க்க : 5+X =9 ,
6. கிராமில் எடுத்துரைக்க : 0.12 kg
7. வெண் வரிப்படத்தில் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு n (A′) ஐக் காண்க





8. ஒரு பக்கத்தின் நீளம் a ஆகவுள்ள ஓர் ஒழுங்கான ஐங்கோணியின் சுற்றளவை a யின் சார்பில் எடுத்துரைக்க.
9. 0-5 வகுப்பாயிடையின் பருமன் யாது?
10. உருவில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தின் பரப்பளவை முழு உருவத்தினதும் பரப்பளவின் ஒரு பின்னமாக எழுதுக.



11. சுருக்கு : $110_{இரண்டு} + 11_{இரண்டு}$
12. சமனிலி $2x < 6$ இன் நேர் முழுவெண் தீர்வுகளைத் தரப்பட்டுள்ள எண் கோட்டின் மீது வகை குறிக்க.




13. 12 = 2 x 2 x 3
    15 = 3 x 5
    24 = 2 x 2 x 2 x 3 ஆகும்.
    12,15,24 ஆகியவற்றின் i. பொதுக் காரணிகளுட் பெரியதை.
    ii. பொது மடங்குகளுட் சிறியதைக் காண்க.
14. உருவில் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு X இன் பெறுமானத்தைக் காண்க.





15. சுருக்குக. $\frac{2x}{x-1} + \frac{2}{1-x}$
16. ஒரு வீட்டுக்கு ஆண்டுதோறும் 5 % இறைவரியை அறவிடும் ஓர் உள்ளூராட்சி அதிகார சபைக்கு மதிப்பீட்டு வரியாக ஒரு காலாண்டுக்கு ரூ. 500 கொடுபடும் வீடு ஒன்றின் மதிப்பிட்ட ஆண்டுப் பெறுமானம் யாது?
17. சூத்திரம் x = a + x / t இல் x ஐ வழுவாயாக்குக.
18. y = 2x - 1, x = 3 என்னும் சமன்பாடுகளினால் தரப்படும் இரு நேர்கோடுகளின் வெட்டுப் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.
19. ஒரு பக்கத்தின் நீளம் 2 a ஆகவுள்ள ஒரு சமபக்க முக்கோணியின் பரப்பளவை a யின் சார்பிற் பெறுக (விடையை ஒரு சேடாகத் தருக)
20. தீர்க்க : $\log_2 x = 5 - \log_3 81$
21. சுருக்குக : $3\sqrt{2} + \sqrt{8}$
22. ஒவ்வோர் அட்டையிலும் ஓர் எண்ணாக 1 தொடக்கம் 10 வரைக்கும் எண்கள் எழுதப்பட்ட 10 சர்வசம அட்டைகளின் தொகுதி ஒன்றிலிருந்து எழுமாற்றாக ஓர் அட்டை தெரிந்தெடுக்கப்படும் போது அவ்வட்டையின் எண்.

    A - 10 இலும் குறைந்த ஒரு முதன்மை எண்ணாக இருத்தல்.
    B - 10 இலும் குறைந்த ஒரு இரட்டை எண்ணாக இருத்தல்.
    C - 10 இலும் குறைந்த ஒரு நிறை வர்க்க எண்ணாக இருத்தல்.


    என்னும் நிகழ்ச்சிகளைக் கருதுக. அதற்கேற்பப் பின்வரும் கூற்றுகள் ஒவ்வொன்றும்சரியாயின் ✓ ஐ யும் பிழையாயின் × ஐ யும் எதிரே உள்ள அடைப்பினுள்ளே இடுக.

| | |
|---|---|
| A யும் B யும் தம்முள் புறநீக்குகின்றன. | |
| B யும் C யும் தம்முள் புறநீக்குகின்றன. | |
| A யும் C யும் தம்முள் புறநீக்குகின்றன. | |

23. AB ஆனது வட்டத்திற்குப் புள்ளி P யில் வரையப்பட்டுள்ள தொடலியாகும். a யின் பெறுமானத்தைக் காண்க.





24. உருவில் உள்ள தகவலை அடிப்படையாகக் கொண்டு.
    i. விகிதம் AD : BA யிற்குச் சமவலுவான ஒரு விகிதத்தை முக்கோணிகளின் பக்கங்களின் சார்பில் எழுதுக.
    ii. AB யின் நீளத்தைக் கணிக்க.
25. ஒரு குறித்த ஒழுங்கான பல்கோணியின் ஓர் அகக் கோணத்தின் பருமன் ஒரு புறக் கோணத்தின் பருமன் மூன்று மடங்காகும். இப் பல்கோணியின்
    i. ஒரு புறக் கோணத்தின் பருமன்,
    ii. பக்கங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காண்க.
26. ஒரு குறித்த நெல் வயலில் நெல்லை அறுவடை செய்வதற்கு 3 பொறிகள் 6 மணித்தியாலங்கள் எடுக்கின்றன. தொடக்க வயலின் இருமடங்கான வயல் ஒன்றில் நெல்லை 4 மணித்தியாலத்தில் அறுவடை செய்வதற்கு அத்தகைய எத்தனை பொறிகள் தேவை?
27. 3, 12, 8, 15, 20, 12, 4, 22, 10, 24, 19 என்னும் எண் பரம்பலின்
    i. இடையம்,
    ii. காலணையிடை வீச்சு ஆகியவற்றைக் காண்க.
28. ABCD ஓர் இணைகரம். பின்வருவனவற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.




△ CBE யின் பரப்பரளவு = △.................. இன்பரப்பளவு
..........................................
..........................................

∴இணைகரம் ABCD யின் பரப்பளவு = △................. இன் பரப்பளவு

29. ஒரு குறித்த காணித் துண்டின் இரு எல்லைகள் PQ,PR ஆகும். அவ்வெல்லைகளிலிருந்து சம தூரத்திலும் மூலை P யிலிருந்து 5m இலும் ஒரு தாவரத்தை வளர்க்க வேண்டியுள்ளது. ஒழுக்குகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தித் தகுந்த இடம் குறிக்கப்படும் விதத்தைத் தரப்பட்டுள்ள பரும்படிப் படத்தில் எடுத்துக்காட்டுக.




30. ஒரு குறித்த வினாத்தாள் குறுகிய விடைகள் தேவைப்படும் 50 வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சரியான விடைக்கும் 1 புள்ளி வழங்கப்படும் அதேவேளை ஒவ்வொரு பிழையான விடைக்கும் 1 புள்ளி கழிக்கப்படுகின்றது. விடை எழுதப்படாத வினாக்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படுவதோ, கழிக்கப்படுவதோ இல்லை. இவ்வினாத்தாளில் 40 வினாக்களுக்கு விடை எழுதிய மாணவன் ஒருவன் 28 புள்ளிகளை மாத்திரம் பெற்றால் அவன் எத்தனை வினாக்களுக்குச் சரியாக விடை எழுதியிருந்தான்.?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாதகால அசுர சாதனை!

உற்பத்தித்திறன், முதலீடுகளை ஈர்ப்பதற்கான சூழல், ஏற்றுமதி ஆகியவற்றில் மற்ற நாடுகளைவிட இந்தியா பின்தங்கியுள்ளது. இந்நிலை மாற வேண்டுமானால், வெளிப்படைத்தன்மை கொண்ட திறமையான மத்திய அரசு வேண்டும்.

திறமை, வெளிப்படையான நிர்வாகம் மூலமே நாட்டு மக்கள் ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான சூழலை உருவாக்க முடியும்.

நெடுஞ்சாலைகள், மேம்பாலங்கள், அதிவேக ரயில்கள், மருத்துவ வசதிகள், தடையில்லா மின்சாரம், மனிதவளம், விவசாயத்தில் வளர்ச்சி ஆகிய அடிப்படை கட்டமைப்புகள் வலுவாக இருந்தால்தான், ஒரு நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிபெறும்.

விண்வெளி ஆராய்ச்சியிலும், இராணுவத்திலும் இந்தியா வளர்ச்சி பெற வேண்டும். எவ்வளவுதான் முன்னேறிய நாடாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தால் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது.

நரேந்திர மோடி, பிரதமர் பதவியில் ஆறு மாதங்களை நிறைவு செய்துவிட்டார். இந்த ஆறு மாதங்களில் அவரது செயறபாடுகள் ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்படும் விதத்தில் அமைந்துள்ளன. பதவியேற்பு விழாவுக்கு பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை உள்ளிட்ட சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்ததில் அவரது ராஜதந்திரம் வெளிப்பட்டது.

அண்டை நாடுகளுடன் மட்டுமல்ல, உலக நாடுகளுடனும் உறவை மேம்படுத்த பிரதமர் நரேந்தி மோடி எடுத்துவரும் முயற்சிகள் நம்மை வியக்கவைக்கின்றன.

கடந்த ஆறு மாதங்களில் பூட்டான், நேபாளம், பிரேசில், அமெரிக்கா, ஜப்பான், மியான்மர், ஆஸ்திரேலியா என பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து, உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பை உயரச் செய்துள்ளார்.

வெளிநாட்டுப் பயணங்களின்போது அந்தந்த நாட்டுத் தலைவர்களை மட்டுமே சந்திக்காமல், தொழிலதிபர்கள், இந்திய வம்சாவளியினர் என பல தரப்பினரையும் சந்தித்து அவர்களுக்கு இந்தியாவின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தி வருகிறார்.

பல நாடுகளின் நாடாளுமன்றங்கள், கூட்டங்களில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவில் குவிந்துள்ள வாய்ப்புகளை எடுத்துக் கூறி முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தது உலகத் தலைவர்களை வியக்க வைத்துள்ளது.

நரேந்திர மோடியின் பேச்சிலிருந்த அடக்கமும், எளிமையும் இந்தியாவின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தின.

பிரதமர் எதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும்? பதவியேற்றது முதல் வெளிநாட்டுப் பயணத்திலேயே பிரதமர் இருக்கிறார் என்றெல்லாம் முழு விவரங்களையும் அறியாதவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

125 கோடி மக்களைக் கொண்ட அந்நாட்டில் அடிப்படைக் கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அவர்களால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு முதலீடு தேவைப்படுகிறது.

கிராம ஊராட்சி முதல் மத்திய அரசு வரை பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் அந்நாட்டில் தேவையான நிதியை ஒதுக்க முடியாது. உள்நாட்டுவரிகள், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதியங்களிடம் கடன் பெறுவது, உள்நாட்டில் தனியார் முதலீடுகளை ஈர்ப்பது, அன்னிய முதலீடு ஆகிய நான்கு வழிகளில் தேவையான நிதியைப் பெறலாம்.

சுமார் 60 கோடி இளைஞர்களைக் கொண்ட அந்நாட்டில், அனைவருக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேணடியது மத்திய அரசின் தலையாய கடமையாகும். இந்த இக்கட்டான நேரத்தில் அன்னிய முதலீடு இல. லாமல் அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்பது சாத்தியமல்ல.



இதனை உணர்ந்துதான் "மேக் இன் இந்தியா" (இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள்) என்ற திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கொண்டுவந்துள்ளார். பிரதமரின் முயற்சிக்கு பலன் கிடைக்கத் தொடங்கியுள்ளது. இந்தியப் பயணம் மேற்கொண்ட சீன அதிபர் ஜீ ஜின்பிங், நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்துக்குச் சென்று ரூ. 2.42 லட்சம் கோடி முதலீடு செய்ய உறுதி அளித்துள்ளார்.

ஜப்பான் வரலாற்றில் முதல் முறையாக தலைநகர் டோக்கியாவுக்கு வெளியே பழமையான கியாட்டோ நகரில் பிரதமர் நரேந்திர மோடிக்கு விருந்தளித்தார் அந்நாட்டு அதிபர். இப்படிப்பட்ட மரியாதை இதுவரை எந்த ஒரு இந்தியப் பிரதமருக்கும் கிடைத்ததில்லை. ஜப்பானும் நமது நாட்டில் லட்சக்கணக்கான கோடி ரூபாயை முதலீடு செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.

அதுபோல, பிரதமர் தனது வெளிநாட்டுப் பயணங்களின்போது ரஷயா, மலேசியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா என பல நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து இந்தியாவிலுள்ள வாய்ப்புகளை எடுத்துக்கூறி முதலீடு செய்ய அழைப்பு விடுத்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இந்தியர்களிடம் நரேந்திர மோடி ஆற்றிய உரை அவருக்கு நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுத் தந்துள்ளது. அவரை அமெரிக்கப் பத்திரிகைகள் "தி வேர்ல்ட் ராக் ஸ்டார்" என வர்ணித்து எழுதின.

பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து நாடு முழுவதும் ஊடகங்களிலும், பொதுத் தளங்களிலும் விவாதங்கள் நடந்து வருகின்றன. கடுமையான எதிர் விமர்சனங்களும் வந்துள்ளன. பல்வேறு அரசியல் கட்சிகள், கொள்கைகள் இருக்கும் அந்நாட்டில், மாறுபட்ட கருத்துகள் இருப்பது இயல்பானதுதான்.

மாறுபட்ட கருத்துகள் இருப்பதை தவறு எனக் கூற முடியாது.

அதேநேரத்தில், ஒரு உண்மையை அனைவரும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். நரேந்திர மோடி நமது பிரதமர் என்பதை மறுக்கவோ, ஒதுக்கவோ முடியாது. நரேந்திர மோடியை பா.ஜ.கவின் பிரதமராக பார்க்கக்கூடாது.

அவர் இந்தியாவின் பிரதமர். அரசியல் என்பது தேர்தல் நேரத்தில் மட்டுமே இருக்க வேண்டும். தவறுகள், கொள்கை முரண்பாடுகள் இருந்தால் மட்டுமே விமர்சிக்க வேண்டும்.

கடந்த ஆறு மாதகால ஆட்சியில், "தூய்மை இந்தியா", "மேக் இன் இந்தியா", "100 நவீன நகரங்கள்", "அனைவருக்கும் வங்கிக் கணக்கு" உள்ளிட்ட திட்டங்கள் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

தூய்மை இந்தியா திட்டம் அனைத்துத் தரப்பினரிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக உள்ளது.

தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கு இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்டது தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. மீனவர்களும், பொதுமக்களும் போராட, வழக்கு செலவுக்காக தமிழக அரசு ரூ.20 லட்சம் கொடுத்தது.

பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷவுடன் பேசினார். இதனைத் தொடர்ந்து ஐந்து மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வளவும் செய்துவிட்டு, இதற்கு நான்தான் காரணம் என ஆர்ப்பாட்ட அரசியல் செய்யாமல் தனது கடமை என அமைதியாக இருக்கிறார் நரேந்திர மோடி.

நமது முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு இந்தியாவின் ஏழ்மையைப் போக்க நீர்ப் பாசனத் திட்டங்கள், அணைக்கட்டுகள், இரும்பு உருக்காலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள், ரயில் பெட்டி தொழிற்சாலை, ஆயுதத் தொழிற்சாலை என அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கினார்.

இரண்டாவது பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி "ஜெய் ஜவான்", "ஜெய் கிசான" என முழக்கமிட்டு ராணுவ வீரருக்கு நிகராக விவசாயிக்கு மரியாதை அளித்தார்.

வங்கிகளை தேசியமயமாக்கி, பாகிஸ்தான் போரில் வென்று வங்கதேசத்தை உருவாக்கி, முதல் அணுகுண்டை சோதனை செய்து இரும்புப் பெண்மணியாகத் திகழ்ந்தார் மூன்றாவது பிரதமர் இந்திரா காந்தி.

இந்திராவுக்கு அடுத்து பிரதமரான ராஜீவ் காந்தி, இன்றைய நவீன தொலைத் தொடர்பு, கணினி யுகத்துக்கு அடித்தளமிட்டார்.

தங்கத்தை அடகு வைக்கும் அளவுக்கு பாதாளத்திலிருந்த இந்தியப் பொருளாதாரத்தை மீட்டெடுத்தவர் நரசிம்ம ராவ்.

"தங்க நாற்கரச் சாலை" திட்டத்தின் மூலம் இந்தியாவை இணைத்து தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்தியா சாதனைப் படைக்க வித்திட்டார் வாஜ்பாய்.

இவர்களின் வரிசையில் 15 ஆவது பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடியும் தனது சாதனைப் பயணத்தை தொடங்கியுள்ளார். எல்லைப் பிரச்சினை இருந்தாலும் சீனாவுடன் நல்லுறவு, அதிவேக ரயில் திட்டத்துக்கு தொழில்நுட்ப உதவியைப் பெறுதல் என தயக்கமின்றி இந்தியாவின் நலன் ஒன்றையே இலக்காகக் கொண்டு பயணத்தை தொடங்கியுள்ள நரேந்திர மோடிக்கு நாட்டு மக்கள் அனைவரும் தோள் கொடுக்க வேண்டும் துணை நிற்க வேண்டும். அப்போதுதான் நாடு வல்லரசாக மாறும்.

இன்று உலக நாடுகள் மத்தியில் இந்தியாவுக்கு ஒரு தனி மரியாதை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடியின் செயறபாடுகளே காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

-ஆர். வீரமணி-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மைத்திரி மீது மக்கள் ஒருபோதும் நம்பிக்கை கொள்ளப்போவதில்லை



## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**பொது எதிரணியின் ஒப்பந்த கைச்சாத்து அடிப்படை தகைமை அற்றவை. கட்சி யாப்போ அரசியல் கொள்கையோ இன்றியே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. மேலும் பரஸ்பர விரோத கருத்துக்களையும் வாக்கு வங்கியையும் கொண்டிராத பொது எதிரணியின் வேட்பாளர் மீது நாட்டு மக்கள் ஒருபோதும் நம்பிக்கை கொள்ள போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

இம்முறை தேர்தலில் ஏனைய ஜனாதிபதி போலன்றி அதிக விருப்பு வாக்குகளின் வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவார். மேலும் மைத்திரிபால சிறிசேன கட்சியை விட்டு நீங்கியமை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதான காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஆரம்பத்தில் சட்ட விரோதம் என குறிப்பிட்டது. தற்போது அந்த நிலைப்பாட்டினை மாற்றி பொது எதிரணி மீது ஆதரவு நல்கியுள்ளது.

ஜே.வி.பி. தனது பாராளுமன்ற மூன்று ஆசனங்களையும் பாதுகாக்கவே பொது எதிரணியுடன் இணைந்துள்ளது. 32 ஆக இருந்த ஆசனம் படிப்படியாக குறைந்து சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்த பின்பு அது மூன்றாக குறைவடைந்துள்ளது. இம்முறை அந்த எண்ணிக்கையும் இல்லாமல் போகப் போகிறது. தனது மூன்று ஆசனத்தை தக்க வைக்கவே இந்த முடிவினை எடுத்துள்ளது.

பொது எதிரணியின் ஒப்பந்தம்

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு தற்போது எந்த கட்சிக்கும் தற்போது உரித்துடையவராக இல்லை. பொது எதிரணியின் ஒப்பந்த கைச்சாத்திட்டுள்ள கட்சிகள் வாக்கு வங்கி அற்ற கடசிகளாகும். பொது எதிரணி மேற்கொண்ட ஒப்பந்த கைச்சாத்து எந்த அடிப்படை தகைமையும் அற்றவை. பொது வேட்பாளருக்கு கட்சியோ யாப்போ கொள்கையோ இல்லை.

பொது எதிரணி கட்சிகளிடையே பரஸ்பர கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனவே பொது எதிர ணியை மக்கள் நம்பப்போவ தில்லை.

எனது வேட்பாளர் மைத்திரிபால சிறசேன ஜனாதிபதி முறை மையை நூறு நாட்களுக்குள் ஒழிப்பதாக கூறினார். ஆனால் ஐ.தே.க. பொது செயலாளர் திஸ்ஸ அத்தநா யக்க 24 மணிநேரத்திற்குள்ஒழிக்க வேண்டும் என கோருகிறார். நூறு நாட்களுக்குள் நிறை வேற்ற முடியாத வாக்குறுதிக ளையே எதிரணியினர் மக்களுக்கு வழங்குகின்றனர்.

அதேபோன்று தேர்தல் முறைமையை மாற்ற வேண்டுமாயின் முழு அரசியலமைப்பையும் மாற்ற வேண்டும். அல்லாவிடின் கருத்து கணிப்பையே நடத்த வேண்டும். ஏனெனில் நூறு நாட்களுக்குள் இவற்றை செய்து முடிக்க இயலாது.

எனவே ஏனைய ஜனாதிபதி தேர்தலை விடவும் இம்முறை அதிகபடியான விருப்பு வாக்கினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவது உறுதியாகும். ஆகவே பொது எதிரணியின் வாக்குறுதிகள் நியாயமற்றவை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சீனக்கப்பல்கள் அந்நியச் செலாவணியை இலங்கைக்கு இதுவரை செலுத்தவில்லை

## அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

இலங்கைக் கொடியுடன் சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் எட்டு (8) சீனக் கப்பல்களிடமிருந்து பெருந்தொகை அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டிருப்பதாக பொய்யுரைக்கப்பட்டுள்ளதாக பதில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சரத்குமார குணரட்ன தெரிவித்தார்.

இந்த 8 சீனக் கப்பல்களில் மூன்று கப்பல்கள் மாத்திரம் இரண்டு தடவைகள் பணம் செலுத்தியுள்ளன. ஏனைய கப்பல்கள் எதுவித பணத்தையும் செலுத்தவில்லை. அந்த ஐந்து கப்பல்களும் எதுவித மீன்களும் இன்றியே கரையை வந்தடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடற்றொழில் நீரியல்வளத் துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

இலங்கைக் கொடியுடன் மீன்பிடியில் ஈடுபடும் கப்பல்கள் வருமானத்தில் 10 வீதத்தை நாட்டுக்குச் செலுத்தும். அவ்வாறு பிடிக்கப்படும் மீன்கள் இலங்கை கரைக்குக் கொண்டு வந்தே விற்பனை செய்யப்படவேண்டும். இதனூடாக பாரிய அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் என முன்னாள் அமைச்சர் கூறிவந்தார். அவர் கூறியதைப் போன்று பாரியளவு வருமானம் எதுவும் ஈட்டப்படவில்லை.

மூன்று கப்பல்கள் இரண்டு தடவைகள் மாத்திரம் பணம் செலுத்தியுள்ளன. எஞ்சிய 5 கப்பல்கள் எதுவித மீன்களும் இன்றியே கரையை வந்தடைந்தன. அவை பணம் எதனையும் செலுத்தவும் இல்லை. முன்னாள் அமைச்சர் கூறியதைப் போன்று இந்தக் கப்பல்கள் பணத்தைச் செலுத்தியிருந்தால் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் உள்ள அனைவருக்கும் இதன் வருமானத்தைக் கொண்டே சம்பளத்தைக் கொடுத்திருக்க முடியும்.

இதில் ஏதோ பொய்யுள்ளது. இரகசியமொன்று மறைந்துள்ளது. அந்தக் கப்பல்களில் பிடிக்கப்பட்ட மீன்கள் நடுக்கடலிலேயே வேறு நாடுகளுக்கு விற்கப்பட்டு விட்டன. இது விடயம் தொடர்பில் ஆராய்வதற்கும், குறித்த கப்பல்களைக் கண்காணிப்பதற்கும் தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கப்பல்கள் இலங்கைக் கொடியுடன் மீன்பிடிப்பதே உள்நாட்டு மீனவர்களுக்குப் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கு அபகீர்த்தியை மாத்திரமன்றி, பிரச்சினையை ஏற்படுத்துமாயின் அவற்றின் ஒப்பந்தங்களை இரத்துச் செய்து கப்பல்களின் மீன்பிடியை நிறுத்துமாறு ஜனாதிபதி கூறியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## ஞானிகள்

ஒருவர் தனியாக ஓரிடத்தில் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா... தியானம் செய்து கொண்டிருக்கிறாரா... என்பதை எப்படி கண்டு பிடிப்பது?

நமக்குத் தெரிந்த வரையில் தூக்கம் என்றால் தலை அடிக்கடி சாயும். பின் நிமிரும். தியானம் என்றால் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும்.

தூக்கத்திற்கும் தியானத்திற்கும் அதிக வித்தியாசம் உண்டு. ஒரு முட்டாள் தூங்கப்போனால் முட்டாளாகவே திரும்பி வருகிறான். அதே முட்டாள் தியானம் செய்தால் ஞானியாகத் திரும்பி வருகிறான்.

அது இருக்கட்டும்... ஞானிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

இப்பொழுது நாம் ஒரு அழகான ரோஜாவைப் பூவைப் பார்க்கிறோம். "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று வியக்கிறோம்.

ஒரு ஞானி அதே ரோஜாவைப் பூவைப் பார்க்கிறார். அவரும் "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று நினைக்கிறார்.

உலகப் பொருட்களை நாம் எப்படி ஐம்புலன்கள் மூலமாக உணர்கிறோமோ அப்படித்தான் அவர்களும் உணர்கிறார்கள். அதில் ஒன்றும் வித்தியாசமில்லை.

அல்வா சாப்பிடுகிறோம். அது நமக்கு மட்டும்தான் இனிக்கும். ஞானிகளுக்கெல்லாம் கசக்கும் என்றா சொல்வோம்? அப்படியில்லை. அவர்க்ளுக்கும் அதே நிலமைதான்.

அப்படியானால் ஞானிகளுக்கும் நமக்கும் என்னதான் வித்தியாசம்? அந்த வேறுபாடு எந்தக்கட்டத்தில் ஆரம்பமாகிறது? அதை இப்பொழுது பார்ப்போம்.

இப்பொழுது மறுபடியும் அந்த ரோஜாப்பூவின் பக்கம் போவோம். ஞானி அதைப் பார்க்கிறார்.

ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது! என்று நினைக்கிறார். அதன் பின் அதையே நினைப்பதில்லை. வேறு வேலை பார்க்கப் போய் விடுவார். அல்லது இயற்கையின் ஆற்றலைப்பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார். அவ்வளவுதான்! ஆனால் நாம் அப்படிச் செய்ய மாட்டோம்.

நாம் என்ன செய்வோம் தெரியுமா? முதலில் அந்த ரோஜாப் பூவைப் பார்ப்போம்.

ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது என்று நினைப்போம். அந்த அழகை ரசிப்போம். அதன்பின் அந்த மலர் நமக்கு வேண்டும் என்று நினைப்போம்.

அதற்கு அடுத்த கட்டம்... அந்த மலர் இல்லையென்றால் நம்மால் வாழ முடியாது என்ற நிலைமைக்கு வந்து விடுவோம்! உடனே அந்த மலரை அடைவதற்கு முயற்சி செய்வோம்!

அதற்கு யாராவது தடையாக இருந்தால் அவர்கள் மேல் நமக்குக் கோபம் வரும். அந்தக் கோபத்தின் காரணமாக நமது விவேக புத்தியை இழப்போம்! யாரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை மறந்து விடுவோம்.

அதன் காரணமாக ஞாபகமறதி ஏற்படும். அதாவது முன்பு விவேக புத்தி மழுங்கியிருந்தால் அது இப்போழுது அடியோடு இல்லை என்ற நிலை ஏற்படும்.

அதன் காரணமாக நம் புத்தியை இழப்போம். கடைசியில் அழிவோம். இந்த நிலைமை நமக்கு வந்துவிடக் கூடாது என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

நமக்கு கெடுதல் செய்யக்கூடிய ஆசைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். ஒரு விடயம் தெரியுமா? எந்த ஆசைக்குமே முதலில் வலு கிடையாது.

அதைப்பற்றி நாம் நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலு உண்டாகிறது. இளம் தளிராக இருந்தது இப்பொழுது பெரிய மரமாகி விடுகிறது.

ஞானிகள் இந்தளவுக்கு அதை வளர விடுவதில்லை. அதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு இளைஞன் கையில் தடியொன்றை வைத்துக் கொண்டு நடந்து போய்க்கொண்டிருந்தான். அதே நேரம் வயதான ஒருவரும் ஒரு தடியை வைத்துக் கொண்டு நடந்து போகிறார். அது அவருக்கு ஊன்றுகோல். அது இல்லையெனில் அவரால் நடக்க முடியாது. அது தவறி கீழே விழுந்தால் அவரும் விழுந்து விடுவார்.

ஆனால், அந்த இளைஞன் அப்படியல்ல. அவனுடைய கைத்தடியை யாராவது எடுத்துக் கொண்டுபோனால் கூட அவன் கவலைப்படமாட்டான். அவன் அந்தக் கைத்தடியைப் பயன்படுத்துவதுபோல்தான் ஞானிகள் உலகப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள்.

ஆனால், நம்மைப் போன்றவர்கள் அந்த வயதானவர் கைத்தடியை பயன்படுத்துவது போல் உலகப் பொருட்களைப் பயன்படுத்துகிறோம். இதுதான் ஞானிகளுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்.

ஞானி என்பவர் பொருட்களைத் துறக்கமாட்டார். அதன் மீதுள்ள பற்றுதலைத்தான் துறப்பார். எனக்குத் தெரிந்த ஞானி ஒருவர் இருந்தார். அவர் சொன்னார்.

"1988 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதியை என்னால் மறக்க முடியாது" என்றார்.

"ஏன்" என்று கேட்டேன்.

"அதுதான் எனக்கு ஞானம் வந்த நாள்" என்றார்.

"அப்படியா?" என்றேன்.

"ஆமாம், அன்று தான் எனக்கு திருமணமானது என் மனைவி பெயர் ஞானம்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36பேர் மர்மநபர்களினால் துடிதுடிக்க சுட்டுக்கொலை



(நைரோபி)
ஆபிரிக்க கண்டத்திலுள்ள நாடுகளில் ஒன்றான கென்யாவிலுள்ள கல்குவாரியில் பணியாற்றி வந்த 36 பேர் மர்ம நபர் களினால் சரமாரியாக சுட்டுப்படு கொலை செய்யப்பட்டுள்ள அதேவேளை பலர் கழுத்து அரிந்து படுகொலை செய்யப்பட்டுள் ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் தொடா பாக மேலும் தெரிய வருவதாவது,

கென்யாவின் மேன் டிரா கவுண்டியில் இருந்து 10 மைல் தொலைவில் கல்கு வாரி உள்ளது.

இந்த குவாரியில் பணியாற்றிய தொழிலாளர்கள் அங்கு அமைக்கப்பட்டு உள்ள கூடாரத்தில் நேற்று முன்தினம் இரவு தூங்கிக் கொண்டு இருந்தனர்.

அங்கு துப்பாக்கியுடன் புகுந்த மர்ம நபர்களினால் நள் ளிரவில் அங்கிருந்தவர் களை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டு வீழ்த்தினான். மேலும் 4 பேரின் தலையை துண்டித்து படுகொலை செய்து விட்டு தப்பி ஓடி விட்டான்.

இந்த சம்பவத்தில் மொத்தம் 36 பேர் பரிதா பமாக உயிரிழந்தனர்.




இதனைமேன டிரா கவுண்டியின் ஆளுநர் அலி ரோபா உறுதி செய்துள்ளார்.

## கென்யாவில் பயங்கரம்



கென்யாவின் அண்டை நாடான சோமாலியாவில் அல் சஹாப் தீவிரவாதிகள் நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அவர்களை ஒடுக்கும் வகையில் கென்யா கடந்த 2011ஆம் ஆண்டு தனது படையை அனுப்பி உள் ளது.

இதில் இருந்து கென்யா நாட்டில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

கடந்த மாதம் பேருந்தில் சென்ற 28 பேரை தீவிரவாதிகள் கொலை செய்ததுகுறிப்பிடத்தக்கது. (இ-5)

# 11 பொலிஸார் கொலை வழக்கில் 188பேருக்கு தூக்குத்தண்டனை

எகிப்தில் 11 பொலிஸார் கொல்லப்பட்ட வழக்கில் 188 பேருக்கு மரண தண்டனை விதித்த நீதிமன்றம், நாட்டின் உயர்மட்ட மத அதிகாரத்திடம் கருத்து கேட்டுக் கொண்டுள்ளது.

எகிப்து நாட்டின் ஜனாதிபதியாகயிருந்த முகமது முர்சி கடந்த ஆண்டு ஜுலை 3ஆம் திகதி இராணுவத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களில் வன்முறை வெடித்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இராணுவ தளபதி அப்டெல் பத்தாவுக்கு எதிராக கோஷங்களை முழங்கினர். முகமது முர்சி ஆதரவாளர்களின் நாடு தழுவிய போராட்டம் இடைக்கால ஆட்சியாளருக்கு தலைவலியை ஏற்படுத்தியது.

இதனை அடுத்து முர்சியின் ஆதரவு பெற்ற சகோதரத்துவ கட்சியை வன்முறை இயக்கம் என்று அரசாங்கம் அறிவித்தது.

சகோதரத்துவ கட்சியின் தலைவர்கள் உட்பட 22 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். முகமது முர்சியின் ஆதரவாளர்களின் இரண்டு முகாம்களை இராணுவம் கொடூரமான முறையில் அகற்றியது. அப்போது 100 இக்கும் மேற்பட்ட சகோதரத்துவ கட்சியினர் கொல்லப்பட்டனர்.


அன்றைய தினம் கெய்ரோவிற்கு மேற்கே உள்ள கேர்தாசாவில் 11 பொலிஸார் கொலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் 188 பேர் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டது. கேர்தாசா பகுதி தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதியாக கருதப்படுகிறது.

கொலை செய்யப்பட்ட பொலிஸாரது உடல்கள் சிதைக்கப்பட்டு இருந்தன. பாதுகாப்பு படையினரின் மீதான இந்த தாக்குதல் நாட்டின் கோரமான தாக்குதலாக கருதப்படுகிறது. இவர்கள் 10 பொலிஸாரை கொலை செயய முயற்சி செய்ததிலும் பொலிஸ் நிலையத்தை சூறையாடியதிலும் குற்றவாளிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் கொல்லப்பட்ட வழக்கில் 188 பேருக்கு அந்நாட்டு நீதிமன்று மரண தண்டனை விதித்துள்ளது. மரண தண்டனை விதித்த நீதிமன்றம் நாட்டின் உயர்மட்ட மத அதிகாரத்திடம் கருத்து கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வழக்கை ஜனவரி 24ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதிமன்றம் அன்றைய தினம் இறுதி தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது. பின்னர் குற்றவாளிகள் மேல் முறையீடு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 188 பேரில் 143 பேர் தற்போது காவலில் உள்ளனர் என்று பாதுகாப்புத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருட தொடக்கத்தில் நாட்டின் தெற்கு சிட்டியான மின்யாவில் ஆயிரத்து 200பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எகிப்தில் அண்மையில் விதிக்கப்பட்ட இந்த மரண தண்டனை விதிப்புக்கு பரவலாக சர்வ தேச அளவில் விமர்சனம் இருந்த போதிலும் எகிப்து நீதிமன்று வழி வழியாக தொட ர்ந்து தண்ட னையை நிறை வேற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சர்வமத தலைவர்கள் கூட்டம்



சர்வமத தலைவர்களின் கூட்டம் வாடிகன் நகரில் நேற்று முன்தினம் நடந்தது. அதில் போப் பாண்டவர் பிரான்சிசுடன் மாதா அமிர்தானந்தமயி கலந்து கொண்டார்.


இவர்கள் தவிர வியட்நாம, ஆர்ஜென்டீனா, கிரீஸ், ஈராக், இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த 12 மத தலைவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாதா அமிர்தானந்தமயி பேசினார். அப்போது அவர் கூறியதாவது,


ஆள் கடத்தல், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் மனித குலத்தின் மிகப்பெரிய குற்றமாக கருதப்படுகிறது. அது மனிதாபிமானமற்ற செயலாகும். கொத்தடிமைகளாக பயன்படுத்த 10 அல்லது 20 டொலர்களுக்கு குழந்தைகள் விற்கப்படுகின்றனர்.

இதுபோன்ற செயல்களை தடுக்க வேண்டும். இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் தப்பிக்க முடியாதபடி சட்டத்தை கடுமையாக்கி தண்டனை வழங்க வேண்டும். இந்த விடயத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். அடிமைத்தனத்தையும், குற்றச் செயல்களையும் ஒழிக்க உறுதிமொழி ஏற்போம் என்றார்.

போப் ஆண்டவர் பிரான்சிஸ் பேசும்போது, அடிமைத் தனத்தை ஒழிப்பதற்காக நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது ஈராக்கில் ஈரான் குண்டு வீச்சு



(பக்தாத்)

ஈராக்-சிரியாவின் பல நகரங்களை பிடித்து வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அவற்றை இணைத்து இஸ்லாமிய அரசாக அறிவித்துள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது கடந்த சில மாதங்களாக அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் வான்வழி தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஆனால் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற ஈரான மறுத்து விட்டது. 1979 முதல் அமெரிக்கா - ஈரான் இடையிலான உறவில் பிரச்சினைகள் உள்ளன. இஸ்ரேல் அணு ஆயுத தயாரிப்பு மற்றும் சமீபத்திய ஈரான் மீதான பொருளாதார தடை ஆகியவற்றினால் ஒரு கடினமான உறவாக இருந்தது. ஆனால் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை இரு நாடுகளும் பொதுவான எதிரியாக கருதினார்கள்.

இந்த நிலையில் ஈராக்கின் கிழக்கு பகுதியில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது ஈரான் வான்வழி தாக்குதலை தொடுத்து உள்ளது 1979 இல் அமெரிக்காவிடம் வாங்கிய எப்-4 போர் விமானமூலம் குண்டுகளை வீசி வருகிறது. இதற்கு அமெரிக்கா எந்த ஒத்துழைப்பும் வழங்கவில்லை.

இது குறித்து பாதுகாப்பு துறை பென்டகன் செய்தி தொடர்பாளர் அட்மிரல் ஜான் கெர்பி தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களாக ஈரான் ஈராக்கின் கிழக்கு பகுதியில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ. தீவிரவாதிகள் முகாம் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.1979 ஆம் ஆண்டு ஈரான் புரட்சியின் போது அந்த நாட்டு அரசு அமெரிக்காவிடம் வாங்கிய பாணடம் எப்.-4 ஜெட் விமானங்கள் மூலம் இந்த தாக்குதலை நடத்தி வருகிறது.

எங்கள் வான்வழி தாக்குதல்கள் ஈராக்கில் முடிவடைந்து விட்டன. ஏனைய நாடுகளின் தாக்குதலுக்காக ஈராக் அரசுக்காக ஒருங்கிணைத்து வருகிறோம். நாங்கள் எங்கள் நடவடிக்கையை மாற்றி கொள்ளப்போவது இல்லை. ஈரான் உடனான இராணுவ நடவடிக்கையை ஒருங்கிணைக்கபோவது இல்லை.

ஈரான் நாட்டின் ஆயுத படை மூத்த அதிகாரி பிரிகேடியர ஜெனரல் மசூத் ஜஷயிரி கூறும்போது ,ஈராக்கில் அமைதி இன்மை மற்றும் பிரச்சினைகள் அமெரிக்காவால் தான் ஏற்பட்டது. கண்டிப்பாக நாட்டின் எதிர்காலத்தை அமெரிக்கா கெடுத்துவிடும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் ஊடுருவல் முயற்சி தடுத்துநிறுத்தம்

## 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை


(சென்னை)

காஷ்மீரில் குப்வாரா மாவட்டத்தில், தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சி இராணுவத்தால் முறியடிக்கப்பட்டது. இருதரப்பு மோதலில் இரண்டு நாட்களில் 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

குப்வாரா உட்பட 5 மாவட்டங்களில் உள்ள 18 பேரவைத் தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் 2ஆம் கட்ட தேர்தல் நடைபெற்ற போது ஊடுருவல் முயற்சி நடந்தது. அப்போது நடந்த மோதலில் 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதேபோல், நவ்காம் பகுதியில் ஊடுருவ முயன்ற 2 தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் நேற்றுக்காலை சுட்டு வீழ்த்தினர். துப்பாக்கிச் சண்டையில் இரண்டு இராணுவ வீரர்களும் காயமடைந்தனர்.

ஜம்மு பிராந்தியத்தின் ஆர்னியா பகுதியில் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 3 இராணுவ வீரர்களும் 5 அப்பாவி மக்களும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## தொழிற்சாலையில் திடீரென தீ விபத்து

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ளது எட்டக்காபட்டி கிராமம். இங்கு அதே பகுதியை சேர்ந்த உறவினர்கள் வெங்கடேஷ்பிரபு (வயது30), ஞானசேகரன் (வயது40) ஆகியோர் சேர்ந்து அலுமினிய பவுடர் தொழிற்சாலையை நடத்தி வந்தனர். இங்கு அரைவை செய்யப்படும் மக்னீசியம் (அலுமினிய பவுடர்) பேன்சி ரக பட்டாசுகளில் உபயோகப்படுத்தப்படும். நேற்று மாலை உரிமையாளர்கள் வெங்கடேஷ்பிரபு, ஞானசேகரன் மற்றும் எட்டக்காபட்டியை சேர்ந்த காளிமுத்து (வயது35), சரவணன் (வயது30), பெருமாளசாமி (வயது35), சொக்கலிங்கபுரத்தை சேர்ந்த மணிகண்டன் ஆகியோர் வேலை பார்த்து கொண்டிருந்தனர். அப்போது அதே பகுதியை சேர்ந்த ராஜேஷ்கண்ணா (வயது 23) என்பவரும் ஆலைக்கு வந்துள்ளார்.

ஆலையில் மக்னீசியம் அரைகப்பட்டு கொண்டிருந்தப்போது ஏற்பட்ட அதிக உராய்வினால் வெப்பம் மிகுதியாகி திடீரென தீப்பிடித்தது. சிறிது நேரத்தில் தீ மளமளவென அறை முழுவதும் பரவியது. இந்த விபத்தில் சிக்கிய 7 பேரும் உடல் கருகினர்.


தீ விபத்து குறித்து அப்பகுதி மக்கள் சிவகாசி தீயணைப்பு அலுவலகத்துக்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்பு நிலைய அலுவலர் சண்முகராஜன் மற்றும் வீரர்கள் விரைந்து சென்று உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 7 பேரை மீட்டு சிவகாசி அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (இ-5)

# வரம்பு மீறினால் கடும்நடவடிக்கை

## பிரதமர் மோடி பா.ஜ.கவினருக்கு கடும் எச்சரிக்கை

(சென்னை)

**பொது இடங்களில் வரம்பு மீறிப் பேசினால் அதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. அவ்வாறு பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாஜகவைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள், அக்கட்சியின் எம்.பிக்கள் ஆகியோரை பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக எச்சரித்துள்ளார்.**



மத்திய இணை அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதியின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பாக டில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாஜக எம்.பி.க்கள் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அதில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவிக்கையில், "பொது இடங்களில் பேசும் போது எப்படிப் பேசுகிறோம்? என்ன பேசுகிறோம்? என்பதை மத்திய அமைச்சர்களும், பாஜக எம்.பி.க்களும் புரிந்து கொண்டு பேச வேண்டும். பொது மக்களிடையே உரையாற்ற சில தகுதிகளும், வரம்பும் உள்ளன. இதைப் பொருட்படுத்தாமல் முந்திக் கொண்டு வரம்பு மீறிப் பேசினால் அதை என்னால் ஒரு போதும் சகித்துக் கொள்ள முடியாது. அவ்வாறு பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார் பிரதமர் மோடி.

டில்லியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பொதுககூட்டத்தில் மத்திய இணை அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி பேசுகையில், "இந்த நாட்டில் இஸ் லாமியர்கள், கிறிஸ்தவர்கள் உட்பட அனைவரும் ராமரின் பிள்ளைகள். இந்தச் சித்தாந்தத்தில் நமபிக்கை இல்லாதவர்களுக்கு இந்தியாவில் இடமில்லை. டில்லியில் ராமரைப் பின்பற்றுபவர்கள் ஆட்சி அமைய வேண்டுமா? அல் லது சட்ட விரோதமான வழியில் வந்தவ ர்கள் ஆட்சிஅமைய வேண்டுமா? என பதை மக்கள் தீரமா ணிக்க வேண்டும" என்ற பொருள்பட பேசியிருந்தார்.

இதேவேளை, எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி எச்சரிக்கை விடுத்தபோது நிரஞ்சன் ஜோதியின் பெயரைக் குறிப்பிடாமல் பொதுவாகவே பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

பாரதச் செய்தி

# தகாத வார்த்தைகளைக் கூறியதாக மத்திய இணை அமைச்சர் மீது புகார்

## நாடாளுமன்றில் அமளி

(சென்னை)

இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சி அரசாங்கத்தில் துணை அமைச்சராகவுள்ள சாத்வி நிரஞ்சன் ஜோதி அண்மையில் தேர்தல் கூட்டமொன்றில் பேசியிருந்த சர்ச்சைக்குரிய வார்த்தைகளைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்ய நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பலமுறை ஒத்தி போடப்பட வேண்டி வந்தது.

தான் கூறிய கருத்துக்காக நாடாளுமன்றத்தில் அமைச்சர் மன்னிப்புக்கோரிய பின்னரும் பிரச்சினை நீடித்தது.

சென்ற மாதம்தான் மத்திய அரசாங்கத்தில் உணவு பதனீடு தொழிற்துறைக்கான துணை அமைச்சராக பதவிக்கு வந்திருந்த சாத்வி நிரஞ்சன் ஜோதி, டில்லியில் தேர்தல் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது, ராமரைப் பின்பற்றுபவர்களின் அரசாங்கம் தங்களுக்கு வேண்டுமா? அல்லது தவறான வழியில் பிறந்தவர்கள் என்ற அர்த்தம் தொனிக்கின்ற கெட்ட வார்த்தை ஒன்றைக் கூறி அப்படியானவர்களின் அரசாங்கம் வேண்டும்ா என்பதை டில்லி மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

முஸ்லிம்களானாலும் சரி, கிறிஸதவர்களானாலும் சரி அவர்களெல்லாம் ராமரின் பிள்ளைகளே, அதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இந்த நாட்டை நம்பாதவர்கள் என்றும், தனது உரையில் அவர் களைத் தான் தான் குறிப்பிட்டிருந்ததாகவும் சாத்வி பின்னர் விளக்கமும் அளித்திருந்தார்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைச்சரின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வாதிட்டனர்.

துணை அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி பதவி விலக வேண்டும் என்றும், பிரதமர் நரேந்திர மோடி அவரது பேச்சுக்காக மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

பெரும் அமளி ஏற்பட நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட வேண்டிவந்தது. நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் தான் பேசியிருந்த அந்த வார்த்தைகளுக்காக துணையமைச்சர் சாத்வி மன்னிப்பு கேட்டிருந்தார்.

ஆனால் அமைச்சரின் மன்னிப்பால் மட்டும் தாங்கள் திருப்தி அடைந்துவிடவில்லை என்றும், அவர் பதவி விலக வேண்டும் என்றும் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளின் உறுப்பினர்கள் கோரியிருந்தனர்.

தவிர துவேஷத்தை தூண்டும் விதமாக அவர் சொன்ன கருத்துக்காக அவருக்கு எதிராக பொலிஸ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள்



**கவனத்துடன் செயற்பட்டால் காரியங்களில் வெற்றி கிடைக்கும்!**

**45/100**

**தளராத மனதோடு பணியாற்றி வரலாறு படைக்கும் மேட ராசி நேயர்களே!**

திட்டம் போட்டு செயலாற்றுவதில் கெடடிக்காரர்களாக விளங்கும் உங்களுக்கு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் வந்துவிட்டது. இதுவரை சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான், இப்பொழுது எட்டாமிடத்தில் சஞ்சரித்து உங்களுக்கு ஏராளமான மாற்றங்களை வழங்கப் போகிறார்.

உங்கள் ராசியைப் பொறுத்தவரை 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குபவர் சனிபகவான். தொழில் மறறும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனிபகவான், எட்டில் சஞ்சரிக்கும்பொழுது தொழில்மாற்றச் சிந்தனைகள், இடமாற்றச் சிந்தனைகள், வீடு மாற்றச் சிந்தனைகள் மற்றும் நாடுமாற்றச் சிந்தனைகள் போன்றவை ஏற்படுவது இயல்புதான்.

வலிமை வாய்ந்த சனியால் நாம் வளர்ச்சியைக் காணவும், தளர்ச்சியிலிருந்து அகலவும் செலுத்த வேண்டியது பக்தியும், யுக்தியும்தான். நீங்கள் தினந்தோறும் பக்தி செலுத்தி பாராயணமாக, "கருநிறக் காகம் ஏறிக் காசினி தன்னைக் காக்கும" என்ற கவசத்தைப் பாடுவதன் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். யுக்தி என்பது அஷ்டமத்துச் சனியின் ஆதிக்க காலத்தில் நீங்கள் எதையும் யோசித்து நுணுக்கமாக செய்வதாகும்.

மூன்றாண்டு காலங்கள் எட்டாமிடத்தில் முற்றுகையிடும் சனியால், வேண்டிய நற்பலன்களைப் பெற வேண்டுமானால் தன்னம்பிக்கையும், தைரியமும்தான் உங்களுக்கு அவசியம் தேவை. உங்கள ராசிநாதன் செவ்வாய், "தைரிய காரகன" தானே!. எனவே, தாக்குதல்களைச் சமாளித்து முன்னேறும் தன்மை இயல்பாகவே உங்களுக்கு உண்டு.

இருப்பினும் உங்கள் சுய ஜாதகத்தில் சனி இருக்கும் நிலை அறிந்து, நவாம்சத்திலும் அது இருக்கும் இடம், பார்க்கும் கிரகம், அதோடு இணைந்திருக்கும் கிரகம் ஆகியவற்றை ஆராய்ந்து, அதன் தாராபலம் பார்க்க வேண்டும். பின்னர் உங்களுக்குரிய யோகபலம் பெற்ற நாளில் சிறப்பு வழிபாடுகளையும், தசாபுத்திக்கேற்ப அனுகூலம் தரும் தெய்வத்தைக் கண்டறிந்து அதற்குரிய வழிபாடுகளையும் முறையாக மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் முன்னேற்றத்தின் முதற்படிக்கு நீங்கள் செல்லலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வந்த துயரங்கள் வாயிலோடு நின்றுவிட, இனி டிசம்பர் 16 முதல். காக வாகனத்தானை கைகூப்பித் தொழ வேண்டியது அவசியமாகும்.

**அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம்!**

மாபெரும் கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் சனிபகவான். இதுவரை உங்களுக்கு கண்டகச் சனியாக இருந்தது. இனி மார்கழி 1 ஆம் தகதி முதல் அஷ்டமத்துச் சனியாக அடியெடுத்து வைக்கிறது. அஷ்டமத்துச் சனி எல்லோருக்கும் பாதிப்பை கொடுத்தாலும், உங்களைப் பொறுத்த வரை உற்சாகத்தோடு பணிபுரிய வைக்கப் போகிறார். காரணம் சனிப்பெயர்ச்சியான சில நாட்களிலேயே குருபகவான் கடக ராசிக்கு வக்ரமாக சென்று, அஷ்டமத்தில் அடியெடுத்து வைத்துள்ள சனியை தனது அருள பார்வையால் பார்க்கப் போகிறார். எனவே ஆச்சரியப்படும் விதத்தில் உங்களுக்கு முன்னேற்றம் கிடைக்கப் போகின்றது.


உங்களுக்கோ அல்லது குடும்பத்தினருககோ ஆரோக்கியத்தில் மட்டும் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். எனவே, சனியையும், குருவையும் வாரந்தோறும் வழிபட்டு வருவது நல்லது. அதே நேரத்தில சுக்ரன் மற்றும் புதனின் ஆதிக்க திசாபுத்தி நடப்பவர்கள், எதற்கும் கவலைப்பட வேணடியதில்லை. குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு நல்ல திசாபுத்தி நடைபெற்றால், சனியால் ஏற்படும் சோதனைகளை வெல்லக் கூடிய வாய்ப்பு உருவாகும். நல்ல தெசாபுத்திகள் நடைபெறுமானால் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு வந்து சேரும். குடும்பத்தில் வீண் விரயங்களை தடுக்க, சுபவிரயங்களைச் செய்யலாம்.




**மந்தனின் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்!**

உங்கள் ராசிக்கு 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனிபகவான் எட்டாமிடத்தில் சஞ்சரிக்கின்றார். அதன் பார்வை 2, 5, 10 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே, குடும்ப ஸ்தானத்தைப் பார்க்கும் சனியால், குடும்பச் செலவுகள் கூடும். இரவு, பகலாக கடுமையாக உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். குடும்ப உறுப்பினர்களை திருப்திபபடுத்த பலவித போராட்டங்களைச் சந்திக்க நேரிடும். படபடப்பு, கோபம் போன்றவை வந்திணையும்.

நிதானத்தோடு செயறபடுவதாலும், கோபத்தைக் குறைத்துக் கொண்டு குணத்தோடு நடந்து கொள்வதாலும், சண்டை சச்சரவுகளிலிருந்து விடுபட இயலும். சனியின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால், பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். அவர்களுக்குத் தேவையான ஆடை, ஆபரணங்களை அதிகம் வாங்கிக் கொடுப்பீர்கள். கல்யாணக் கனவுகளை நனவாக்கத் திட்டமிடுவீர்கள்.



எந்தக் காரியத்தையும் உங்கள் நேரடிப் பார்வையில் வைத்துக் கொள்வதே நல்லது. பூர்வீக சொத்துக்களிலுள்ள பிரச்சினையை, பேச்சுவார்த்தையிலேயே சுமுகமாக முடித்துக் கொள்ளுங்கள்.

சனியின் பார்வை 10ஆம் இடத்தில் பதிவதால், குடும்ப பெரியவர்களின் உடல் நலனில் கவனம் தேவை. முதல் ஆறு மாதங்களும், கடைசி 6 மாதங்களும், நடுவில் 6 மாதங்களும் சனியின் வலிமை அதிகரிக்கும். அக்காலத்தில் விநாயகர் மற்றும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ள வேணடும். யோகபலம் பெற்ற நட்சத்திரம், உங்கள் ராசிநாதனுக்குரிய கிழமையோடும், பாக்யாதிபதிக்குரிய கிழமையோடும் இணையும் நாளில் சிறப்பு வழிபாடுகளை செய்தால், உத்தியோகம் மேன்மையடையும். தெசாபுத்தி பலம் இழந்திருப்பவர்களுக்கு, செய்யும் வேலையைவிட்டுவிட்டுப் புதிய வேலை தேடும் சூழ்நிலை உருவாகும். ஒரு சிலர் விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு, தனித்து இயங்க முற்படுவார்கள். அனுசரித்துச் செல்வதன் மூலமே நன்மைகளைப் பெற முடியும்.

**குதூகலம் தரும் குருப் பெயர்ச்சி காலம்!**

விருச்சிக ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது, மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறப் போகின்றது. 5.7.2015 இல் சிம்ம ராசியிலும், 2.8.2016 இல் கன்னி ராசியிலும், 2.9.2017 இல் துலாம் ராசியிலும் குரு சஞ்சரிக்கப் போகின்றார்.

சிம்மத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை பலத்தால் 1, 9, 11 ஆகிய இடங்கள் 'புனிதமடைகின்றன. எனவே, உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். தந்தை வழி உறவிலிருந்த விரிசல்கள் அகலும். பங்காளிப் பகை மாறும். குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக குறையும். மதிப்பு, மரியாதை உயரும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது உங்கள் ராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைக் குரு பார்க்கப் போகின்றார். எனவே, குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும். தொழில் பங்குதாரர்களாக புதியவர்களைச் சேர்த்துக் கொள்வீர்கள். வியாபார இழப்புகளை ஈடுசெய்வீர்கள். அந்நிய தேசம் அல்லது பிற மாநிலங்களில் பணிபுரிய செய்த ஏற்பாடுகளில் வெற்றி கிடைக்கும. வீடு கட்டும் முயற்சி அனுகூலமாக இருக்கும்.

துலாம் ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் நேரடிப் பார்வை உங்கள் ராசியிலும், 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகிறது. எனவே, நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். வசதி, வாய்ப்புகள் பெருகும். எதிர்காலத்திற்கான திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவார்கள். வழக்குகள் சாதகமாகும். வங்கிச் சேமிப்பு உயரும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

8.1.2016 இல் சிம்மத்தில் ராகுவும், கும்பத்தில் கேதுவும் சஞ்சரிக்கும்பொழுது, பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழிலுக்கு மாற்றினத்தவர்கள் கைகொடுத்து உதவுவர். கோவில் திருப்பணிக்கு செலவிட்டு மகிழ்வீர்கள். சர்ப்பசாந்தி செய்தால் சந்தோஷ வாய்ப்பு தேடிவரும்.

27.7.2017இல் கடகத்தில் ராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கும்பொழுது, தாயின் உடல்நலத்தில் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்திலிருப்பவர்கள் அனுசரித்துச் செல்வது நல்லது. பணத்தேவைகள கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு செய்வது கடினம். உத்தியோகத்தில் இருப்பவர்களுககு

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

பதவியுயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். ராகு-கேது பரிகாரம் நலம் தரும்.

சனியின் வக்ர காலம் பொறகாலமாக மாற உங்கள் ராசிக்கு அஷ்டமத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, மூன்று முறை வக்ரம் பெறுகிறார். 2015, 2016, 2017 ஆகிய மூன்று ஆண்டிலும் மூன்று முறை வக்ரம் பெறும்பொழுது, வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறியே வந்து கொண்டிருக்கும். குடும்பச் சுமை கூடும். தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. கடுமையாக முயற்சித்தும் காரியம் நடைபெறுவதில் தாமதம் ஏற்படும். அந்நிய தேசத்தில் இருப்பவர்கள் அரைகுறையாகப் பணியை முடித்துக் கொண்டு வர நேரிடலாம். இல்லத்தில் உள்ளவர்கள் எல்லாம் எதிரியாக இருக்கிறாரகளே! என்று நினைப்பீர்கள். ஆயினும அஷ்டமத்துச் சனி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது, விஸ்வரூபம் எடுத்த பிரச்சினைகள் விரைவில் சுமுகமாக முடியும். அதற்கு அடித்தளமாக காலையில் கணபதியையும், மாலையில் சனி பகவானையும், அதன்பிறகு அனுமனையும் வழிபட்டு வந்தால் துயரங்கள் விலகி ஓடும். தொடர்கதையாய் வந்த கடன் சுமை குறையும்.


**தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!**

சனி பகவான் சன்னிதியில் எள்தீபம் ஏற்றி வழிபடுங்கள். சனி உங்களுக்கு சகல யோகமும் வழங்குவார். சிறப்பு வழிபாடாக யோகபலம் பெற்ற நாளில், விநாயகர் மற்றும் நவக்கிரகம் அனைத்தையும் வழிபட்டு வந்தால, மகிழ்ச்சியான வாழ்க்கையைக் கொடுக்கும்

*நாளை இடபம்*

## எட்டாமிடத்திற்கு சனிபகவான் வருவதால் தன்னம்பிக்கையும், தைரியமும் தேவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டை பிளவுபடுத்த மைத்திரிபால முயற்சி

## துணைபோகின்றார் சந்திரிகா-குற்றம் சாட்டுகிறது பலசேனா

(கொழும்பு)

**பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் நாட்டை பிளவுபடுத்த முயற்சிப்பதாக பொதுபல சேனா அமைப்பின பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜனாதிபதி தேர்தல் மிகவும் தீர்மானம் மிக்கது. மக்கள் மதிநுட்பத்துடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

யார் தேர்தலில் தோற்றாலும் அது பௌத்த பிக்குகளை பாதிக்காது. எனினும் நாட்டை பிளவுபடுத்தும் சதித் திட்டத்தை முறியடிக்க வேண்டும்.

நாட்டில் நிலவும் அரசியல் குழப்ப நிலைமையைப் பயன்படுத்தி சிலர் தங்களது நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்த முயற்சிக்கின்றனர்.

சந்திரிகா குமாரதுங்க மைத்திரி என்ற பெயரைப் பயன்படுத்தி அகே வைரய திரைப்படத்தின் மூன்றாம் பாகத்தை அரங்கேற்ற முயற்சிக்கின்றார். (அகே வைரய என்ற திரைப்படம் வயது வந்தர்வகளுக்கு மட்டுமான ஓர் திரைப்படமாகும். பாலியல் ரீதியாக வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட பெண் ஒருவர் ஆண்களை பழிவாங்குவதே இந்த திரைப்படத்தின் கதைப் பின்னணியாகும். இந்த திரைப்படம் பற்றியே கலகொட அத்தே ஞானசார தேரர் செய்தியாளர் சந்தப்பில் உதாரணம் காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டை பாதுகாத்த தலைவரை சிறைப்படுத்தி வெளிநாட்டு சக்திகளின் தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சிக்கப்படுகின்றது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தீர்மானம் அரசியல் ரீதியானது.

ஜனாதிபதி தேர்தலை கருத்திற் கொள்ளாது நாடாளுமன்றத் தேர்தலை கருத்திற் கொண்டு தீர்மானம் எடுத்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பற்றி நல்லதோ கெட்டதோ தெரிவிக்கக் கூடிய காலம் இதுவல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## 28 குடும்பங்கள் இடப்பெயர்வு



இரத்தினபுரி கஹவத்தை 3 ஆம் இலக்கத் தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை மண்சரிவு இடம் பெற்றுள்ளதாகவும் இந்நிலையில் அப்பகுதியில் -அமைந்துள்ள 28 வீடுகளில் இருந்த 28 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 100 இற்கும் அதிகமானோர் ஒபாத்த விக்கினேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் மண்சரிவு அபாயம் உள்ளதாக 20 வருடங்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# காரைநகர் உவர்நீர் தடுப்பணை இனந்தெரியாதோரால் உடைப்பு

## புனரமைப்பு பணியில் வடக்கு விவசாய அமைச்சு தீவிரம்; பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது

யாழ்.காரைநகர் வேணன் உவர் நீர்த் தடுப்பணை விசமிகளால் உடைக்கப்பட்டதால் அங்கு தேக்கி வைக்கப்பட்டிருந்த மழைநீர் கடலினுள் பாயத் தொடங்கியுள்ளது. இது வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து உடைக்கப்பட்ட அணைப்பகுதியைத் தற்காலிகமாகப் புனரமைக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன் மற்றும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் க.கருணாநிதி ஆகியோருடன் அங்கு சென்றிருந்த அமைச்சரின் பணிப்பின்பேரில் மணல் மூட்டைகளைப் பயன்படுத்தி அணை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளதோடு, விசமிகளைக் கண்டறியக்கோரி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடும் குடிநீர்ப்புற்றாக்குறைவு நிலவும் காரைநகரில் கடல்நீர் உள்ளே வராமல் தடுத்து, நிலத்தடிநீரை மேம்படுத்தும் நோக்கில் வேணான் உவர்நீர்த் தடுப்பணை அமரர் ஆ.தியாகராஜா 70களில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவரது முயற்சியால் உருவாக்கப்பட்டது. இதனால் பல உவா நீர்க்கிணறுகள் நன்னீராக மாறியுள்ளன. ஆனால், போர் காரணமாக பராமரிப்புப் பணிகள் இல்லாததால் அணை பல வருடங்களாகச் சேதமடைந்து காணப்பட்டது. கடந்த ஆண்டே ஆசிய அபிவிருத்தி வங்கியின் 23 மில்லியன் ரூபா நிதி உதவியோடு ஏறத்தாழ 5 கிலோ மீற்றர் நீளமான இந்தத் தடுப்பணை புனரமைக்கப்பட்டது.

கடந்த ஒரு வாரமாகப் பெய்த பெருமழையினால் இந்த அணைக்கட்டில் பாரிய நீர்த்தேக்கம் போல மழைநீர் தேங்கிக் காணப்பட்டது. இதனால் காரைநகர் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தமது நன்னீர்வளம் மேம்படும் என்று நம்பியிருந்த நிலையிலேயே சில விசமிகளால் அணைக்கட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் ஒன்றரை அடி அகலத்தில் உடைக்கப்பட்டிருந்த பகுதி, மழைநீர் பேராறு போல கடலை நோக்கிப் பாயத் தொடங்கியதால் அரிக்கப்பட்டுச் சில மணித்தியாலங்களுக்குள்ளாகவே 100 அடி அகலத்துக்கு உடைப்பெடுத்துள்ளது.

இதனைப் பார்வையிடுவதற்காகக் காரைநகருக்குச் சென்றிருந்த அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இது தொடர்பாகத் தெரிவித்த போது,

யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்கொண்டிருக்கும் குடிநீர்ப் பிரச்சினை எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதுவும் காரைநகர் அபிவிருத்திச்சபையினதும் பிரதேச சபையினதும் தண்ணீர்த்தாங்கி வாகனங்களைத் தினமும் எதிர்பார்த்து நிற்கும் காரைநகர் மக்களுக்கு இந்தப் பிரச்சினை இன்னும் அதிகமாகவே புரியும். எமது அமைச்சும் காரைநகர் ஊரிப் பகுதக்குத்தினமும் இரண்டு வேளை குடிதண்ணீரை வழங்கி வந்துள்ளது. இந்த நிலையிலேயே, சில விசமிகள் அணைக்கட்டை உடைக்கும் நாசகாரச் செயலில் ஈடுபட்டுள்ளார்கள்.

கடும் வரட்சிக்குப் பின்னர் மழை இப்போதுதான் பெய்ய ஆரம்பித்துள்ளது. சொட்டு மழை நீரையும் வீணாகக் கடலுக்குள் செல்வதற்கு அனுமதிக்க முடியாத சூழ்நிலையே வடக்கில் நிலவுகிறது. இதைப்புரிந்துகொண்டு, மழைநீர் தேங்குவதால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைப் பொதுமக்கள் ஒரு சில நாட்களுக்குப் பொறுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில், குடிநீருக்கு இப்போது அலைவதை விட வருங்காலங்களில் அதிகமாகவே அலையவேண்டிய நிலை ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நீர்ப்பாசனத்திணைக்களம் உடைக்கப்பட்ட அணைக்கட்டுப் பகுதியைப் புனரமைக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கும் நிலையில், காரைநகர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரின் அழைப்பின்பேரில் அப்பகுதிக்குச் சில இராணுவத்தினர் மண்வெட்டிகளுடன் சமுகமளித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (இ-5)

### கறுப்புப் பண விவகாரம்

# ஆதாரங்களை தராவிட்டால் விபரங்களைத் தரமுடியாது

## சுவீடன் அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் இந்தியப் பணக்காரர்கள் பல இலட்சம் கோடி ரூபாய் கறுப்பு பணத்தை பதுக்கி வைத்துள்ளனர். அந்த கறுப்பு பணத்தை மீட்க பா.ஜ.க. அரசு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. கறுப்பு பணம் வைதது இருப்பவர்கள் பட்டியலை வெளியிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்திய பணக்காரர்களில் பெரும்பாலானவர்கள் சுவீடன் நாட்டில் உள்ள வங்கிகளில்தான் இரகசிய கணக்கு வைத்துள்ளனர். எனவே இந்தியா, சுவீடனுடன் தொடர்பு கொண்டு பேசி வருகிறது.

முதலில் இந்தியர்களின் இரகசிய வங்கி கணக்கு விபரங்களை தர இயலாது என்று சுவீடன் அரசு கூறியது. பிறகு அந்த விபரங்களை சில நிபந்தனைக்குட்பட்டு தர சம்மதித்தது.

இந்த நிலையில் இந்தியாவுக்கான சுவீடன் நாட்டுத் தூதர் சான்ஸ்வோன் கஸ்டெல்மர் அளித்துள்ள பேட்டியில் தெரிவிக்கையில்,

சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் இந்தியர்கள், மோசடி, ஏமாற்றுதல் போன்ற குற்றங்களை செய்து இருப்பதாக இந்திய அரசு எங்களிடம் ஆதாரம் தர வேண்டும். அவர்களிடம் விசாரணை நடத்தியதற்கான ஆதாரங்களையும் காட்ட வேண்டும்.

இல்லையெனில் கறுப்பு பணம் மீட்பு தொடர்பாக இந்தியா கேட்கும் தகவல்களை சுவீடனால் கொடுக்க முடியாது.

சிலரிடம் இந்திய அரசு விசாரணை நடத்தியுள்ளது. அப்படி விசாரணை நடத்தப்பட்டவர்கள் வைத்துள்ள வங்கி கணக்குகளை இந்தியாவுக்கு கொடுத்து ஒத்துழைப்போம்.

மற்றபடி எச்.எஸ்.பி.சி. வங்கி கணக்கு இருப்பதாக திருடி வெளியிடப்பட்ட பட்டியலின் அடிப்படையில் இந்தியா, எங்களை அணுகினால் நாங்கள் எந்த உதவியும் செய்ய முடியாது. அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு கொடுக்க முடியாது.

கறுப்பு பணம் என்று சொன்னதுமே, எல்லாரும் சுவீடன் நாடடையே பார்க்கிறார்கள். ஆனால் இந்தியாவுக்குள்ளேயே நிறைய பேர் கறுப்பு பணம் வைத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அபிவிருத்தி தேவைகளுக்காக ஜப்பான் 240மில்லியன் உதவி

(கொழும்பு)

நாட்டின் சமூக பொருளாதார துறைகளை அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்லும் பொருட்டும், ஜப்பானில் உற்பத்தி செய்யப்படும் சிறிய நடுத்தர வர்த்தக உற்பத்தி பொருட்களை கொள்முதல் செய்யும் பொருட்டும், இலங்கைக்கு 200 மில்லியன் ஜப்பானிய ஜென் பணத்தினை ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

இத்தொகை 240 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியாகும். இரு நாடுகளுக்குமிடையில் காணப்படுகின்ற பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தினை முன்னிட்டே இவ்வாறான நிதியொதுக்கீட்டினை ஜப்பானிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பானிய வியாபார தயாரிப்பு திட்ட மானியம் உதவி வழங்குதல் (2014)" எனும் திட்டத்தின் கீழ் இத்தொகை வழங்கப்பட்டுள்ளது. சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு இலத்திரனியல் உபகரணங்களை கொள்முதல் செய்தல், நாட்டு மக்களின் சுகாதார நிலைமைகளை தரமான முறையில் வைத்திருத்தல், வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிவாரணங்கள் என அனைத்துக்கும் இத்தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதமும் 200 மில்லியன் பணத்தொகை ஜப்பான் அரசினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நோபுகிற்றோ ஹோபோ, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டாக்டர். பி.பி. ஜயசுந்தர, ஆகியோர் நிகழ்வில் கலந்து கொணடு கருத்துக்களை பரிமாறியமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகளும் நஷ்டஈட்டு கொடுப்பனவு பட்டியலில் இணைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 2014-2015 காலபோக பயிர் அழிவிற்கான நட்ட ஈட்டுக்கொடுப்பனவிற்கு மகிந்த சிந்தனையின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு 50 மில்லியன் ரூபாய் கிடைக்கப் பெற்றுள்ளதாக நம்பகத்தகுந்த வட்பாரத்தகவல் தெரிவிக்கின்றன.

இந்த நட்டஈட்டுக் கொடுப்பனவு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை கிளிநொச்சி மாவட்ட கமநலசேவை திணைக்களம் மேற்கொண்டது.




இதன் பிரகாரம் முழங்காவில், பளை, உருத்திரபுரம், இராமநாதபுரம், புளியம் பொக்கணை, பூநகரி, கிளிநொச்சி, அக்கராயன் ஆகிய கமநலசேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவிற்குரிய பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தப்பட்டியலில் 50 ஆயிரத்து 126 ஏக்கர் காணியும் 14 ஆயிரத்து 862 விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக பட்டியல் தயாரிக்கப்பட்டு மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நட்டஈடு கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி 50 மில்லியனாக இருக்கும் போது பாதிக்கப்பட்ட பயனாளிகள் விபரம் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளதால்இதற்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்கு இன்னும் 93 மில்லியன் ரூபா மேலதிகமாக தேவைப்படுகின்றது என்பதை சுட்டிக்காட்டி இதற்கான மேலதிக நிதியை வழங்க முடியுமா என அரச திறைசேரிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை

இதேநேரம் கமநலசேவைதிணைக்களத்திற்கு கமநல சேவை நிலையங்களால் வழங்கப்பட்ட பெயர் பட்டியலில் பெரிய நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் காலபோக விதைப்பு செய்து அறுவடை செய்தவர்களின் பெயர்களும் இப்பட்டியல் இணைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களாக காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய குளறுபடியான பட்டியல் தயாரிப்பை கமநலசேவை திணைக்களம் மேற்கொண்டுள்ளமையால், உண்மையிலேயே பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளும் உரிய நட்டஈட்டை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகளால் கவலைதெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் உடனடி கவனமெடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டுத் தொகை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகளால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (2-254)

## கஞ்சாவுடன் கைதான 4 பேர் நீதிமன்றில்

வவுனியா மாவட்டத்தில் கஞ்சா வைத்திருந்த நான்கு பேர் கடந்த நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ரி.ரகுநாதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியில் அண்மைகாலமாக கஞ்சா பாவனை அதிகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்த எமது மதுவரித் திணைக்களம் துரித நடவடிக்கை எடுத்துவருகிறது. அதன் ஒரு கட்டமாக எமக்கு கிடைத்த தகவல்களையடுத்து வவுனியா மாவட்டத்தில் மேற்கொண்ட திடீர் தேடுதல்களின் போது கடந்த நவ ம்பர் மாதம் கஞ்சா வைத்திருந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டு நீதிமனறில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி 40 கிராம் கஞ்சாவுடன் புளியங்குளத்தில் ஒருவரும், கடந்த 27 ஆம் திகதி 100 கிராம் கஞ்சாவுடன் செட்டி குளத்தில் ஒருவரும் 50 கிராம் கஞ்சாவுடன் கனகராயன்குளத்தில் ஒருவரும் 10 கிராம் கஞ்சாவுடன் புளியங்குளத்தில் ஒருவருமாக கைது செய்யப்பட்ட னர்.

இவர்கள் நால்வரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டப்பணம்நீதிமன்றால் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வைப்பக அடைவு நகைகள் மக்களிடம் இன்று கையளிப்பு

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கி வைப்பார்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழீழ வைப்பகத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளின் ஒரு பகுதி இன்று வியாழக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அலரிமாளிகையில் வைத்து உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தமிழீழ வைப்பகத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளின் ஆவணங்களை சமர்ப்பித்த நபர்கள் நேற்றைய தினம் இராணுவத்தினரின் பேருந்துகளிலும் இ.போ.ச. பேருந்துகளிலும் ஏற்றப்பட்டு கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதில் கிளிநொச்சி, புதுமுறிப்பு, செல்வாநகர், பாரதிபுரம், கிருஷ்ணபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்து மக்களும் பேருந்துகளில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கிளிநொச்சிமாவட்டத்திற்குஅண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருகை தந்த போது ஒரு தொகுதி தமிழீழ வைப்பக அடைவு நகைகள் மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-277)

# மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு




வவுனியா மாவட்ட செயலகம், மாவட்ட சமூகசேவை அலுவலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் வவுனியா பேருந்து நிலைய பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஆசனம் ஒதுக்கும் நடவடிக்கைகளுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. பன்னர், அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி, வவுனியா நகரசபை மண்டபம்வரை சென்றது. அங்கு மாற்றுத்திறனாளிகளின் கலை நிகழ்வுகளும் விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர பிரதம விருந்தினராகவும் மேலதிக அரசாங்க அதிபர் சரஸ்வதி மோக நாதன், வடமாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நளாயினி இன்பராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.(2)

# பெய்து வந்த மழையையடுத்து குளங்களின் நீர்மட்டம் உயர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்துக்கு கீழுள்ள குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும்மழை காரணமாக குளங்களின் நீர் மட்டங்கள் அதிகரித்துள்ளன.

ஏற் கனவே வவுனிக்குளத்துக்கு கீழுள்ள 3 குளங்கள் வான் பாய்கின் றன.

இந்நிலையில் முத்தையன்கட்டு நீர்ப்பாசன குளத்துக்கு கீழான குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது.

முத்தையன்கட்டு குளத்தில் 13 அடி 6 அங்குலமும், கணுக்கேணி குளத்தில் 12 அடி 6 அங்குலமும், உடையார்கட்டு குளத்தில் 23 அடி 4 அங்குலமும், தட்டையன்மலை குளத்தில் 13 அடி 9 அங்குலமும், தண்ணி முறிப்பு குளத்தில் 13 அடியும், விசுவமடு குளத்தில் 20 அடி 3 அங்குலமும், மருதமடு குளத்தில் 14 அடி 2 அங்குலமும், மடவாளசிங்கன் குளத்தில் 16 அடி 6 அங்குலமும் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

தொடர்ந்து வரும் நாட்களிலும் மழை பெய்யும் சந்தர்ப்பத்தில் குளங்களில் வான் பாயும் நிலையேற்படும் என பொறியியலாளர் தெரிவித்தார். (அ-2)

# வரட்சியால் வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் 51,871 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஒக்டோபர் மாதம வரையான காலப்பகுதியில் நிலவிய வரட்சி காரணமாக 51 ஆயிரத்து 871 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய வவுனியா மாவட்டதில் 30ஆயிரத்து 527 குடும்பங்களைச் சேர் ந்த ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 655 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவ ட்ட அன ர்த்த முகாமைத்துவ பிரிவு நில்லயத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா பிரதேச செயலகம், வவுனியா வடக்கு பிரதேச செயலகம், வவுனியா தெற்கு பிரதேச செயலகம் மற்றும் வெண்கலச்செட்டி குளம பிரதேச செயலகம் ஆகியவற்றிலேயே கடும் வரட்சி நிலவியதாக அத தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தில் 22 ஆயிரத்து 371 குடும்பங்களும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் 2ஆயிரத்து 750 குடும்பங்களும் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் 2ஆயிரத்து 726 குடும்பங்களும் மற்றும் வெண் கலச் செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் 2 ஆயிரத்து 680 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

வரட்சி நிவாரணமாக குடிநீர் விநியோகத்துக்காக 6 மில்லியன் ரூபாய் நிதியுதவியும் குடிநீர்த்தாங்கி வாங்குவதற்காக ஒரு மில்லியன் ரூபாய் நிதியுதவியும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு இந்த வருடம் வழங்கியது.

அத்துடன், 3 பவுசர்களையும் அனர்த்த முகாமைத் துவ அமைச்சு வழங்கியதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலை யில், 95 நீர்த் தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டு மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மேலும், வவுனியா பிரதேச செயலகத்துக்கு மாத்திரம் சராசரியாக நாளாந்தம் 55 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிப்படுவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் வரட்சியால் 21 ஆயிரத்து 344 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 761 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் 8ஆயிரத்து 491 குடும்பங்களும் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் 5 ஆயிரத்து 757 குடும்பங்களும் பூநகரி பிர தேச செயலகப் பிரிவில் 4 ஆயிரத்து 706 குடும்பங்களும் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் 2ஆயிரத்து 391 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அத்தகவலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வரட்சி நிவாரணமாக கிளிநொச்சி மாவட்டத்துக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு 13 மல்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கிய துடன், 3 பவுசர்களையும் வழங்கியது. ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் சராசரியாக 16 ஆயிரம் முதல் 20 ஆயிரம் லீற்றர் வரை நாளாந்தம் குடிநீர் விநியோகிப்பதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தை பிறரை அவலத்துக்கு உள்ளாக்குதில் கழிக்கிறார்கள்.
- லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாணிக்கவாசகரைச் சிறை மீட்ட சிவன்- சரத்துக்குப் பிணை கொடுத்த அமெரிக்கா- ஐவரை விடுவித்த இந்தியப் பிரதமர் மோடி

மந்திரியாக இருந்து அரசனால் சிறை வைக்கப்பட்டவர் மாணிக்கவாசகர். மந்திரியை, படைத்தளபதியை, எதிர்த்தரப்பு அரசியல்வாதியை, தோற்றுப் போன ஜனாதிபதி வேட்பாளரை சிறை வைக்கும் கலாசாரம் அந்தக் காலத்திலேயே தோன்றிவிட்டது என்பது இதில் இருந்து தெரியவருகிறது.

மாணிக்கவாசகரை பாண்டிய மன்னன் சிறை வைத்தமைக்குக் காரணம் அரச பணத்தை மணிவாசகர் துஷ்பிரயோகம் செய்துவிட்டார் என்பதாலாகும். அரச பணத்தை துஷ்பிரயோகம் செய்தால் சிறைதான் என்பதை மாணிக்கவாசகர் பிறந்த தமிழ்நாடு இப்போதும் நடைமுறைப்படுத்தி வருவது பெருமைக்குரியது.

எனினும், எங்கள் நாட்டில் அரச பணத்தை துஷ்பிரயோகம் செய்தவர்கள் தப்பித்தாலும் அரசை கடுமையாக விமர்சிப்பவர்களுக்கு; தேர்தலில் போட்டியிட்டு தோற்றவர்களுக்கு சிறைக்கதவுகள் திறந்தே இருக்கிறது. இவர்கள் தட்டாமல் கதவு திறக்கப்படும். கேட்காமல் சிறைவாழ்வு தரப்படும். தேடாமலே குற்றச்சாட்டுக்கள் தாராளமாகக் கிடைக்கும்.

எனவே மணிவாசகர் காலம் தொட்டு மகிந்த காலம் வரை சிறைப்படுத்தல் என்ற பண்பாடு தொடர்வே செய்கிறது.

அப்படியானால் அதில் வித்தியாசம் என்ன? என்று நீங்கள் கேட்கலாம். அந்தக் கேள்விக்கான விடை மாணிக்கவாசகர் சிறையில் இருந்த போது சிவனே நேரில் வந்து அவரை பிணை எடுத்தார்.

நம் நாட்டில் அமெரிக்கா அல்லது இந்தியா தலையிட்டு பிணை எடுக்கும். உதாரணத்திற்கு முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா சிறையில் இருந்தபோது அவரை விடுவிப்பதற்காக அமெரிக்கா கடும் பிரயத்தனம் செய்தது.

குறிப்பிட்ட கால வரையறைக்குள் சரத் பொன்சேகாவிற்கு விடுதலை வழங்கவேண்டும் என இலங்கை அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்தான தகவல்களும் உண்டு. அதனால் அவருக்கு விடுதலை கிடைத்தது.

இதேபோல் போதைவஸ்துக் கடத்தல் தொடர்பில் மரணதண்டனை விதிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த ஐவரை விடுதலை செய்வதற்கு இந்தியப் பிரதமர் மோடி தலையிட்டு ஜனாதிபதி மகிந்தவுடன் தொடர்பு கொண்டு ஐவரையும் விடுதலை பெற வைத்தார்.

மணிவாசகரை மீட்க வந்த சிவன் தனித்து அவரைப் பிணை எடுப்பதை மட்டும் நோக்காகக் கொள்ளாமல், பொது நீதியை நிலைநாட்டுவதற்காகவும் வந்தார். சிவன் வந்த நோக்கங்களில் ஒன்று மாணிக்கவாசகர் குற்றம் அற்றவர் என்பதை மன்னனுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்துவது.

இரண்டாவது; யாருமற்ற செம்மனச்செல்விக்கு அணை கட்ட உதவி செய்ததன் ஊடாக திக்கற்றவருக்கு தெய்வமே துணை என்பதை உலக மக்களுக்கு தெளிவுபடுத்துவது.

மூன்றாவது; ஏதுமற்றவர்களும் இந்த நாட்டில் இருக்கும் போது, குதிரை வாங்கும் பணத்தை ஏழை மக்களுக்காக மந்திரி மாணிக்கவாசகர் செலவிட்டதில் எந்தத் தவறும் இல்லை என்பதை வெளிப்படுத்துவது உள்ளிட்ட பல நோக்கங்களைக் கொண்டதாக இருந்தது.

ஆனால், வல்லமை பொருந்திய நாடுகள் தலையிட்டு சிறை மீட்புச் செய்யும் போது சரத் பொன்சேகாவுக்கு பிணை கிடைக்கும். முன்னதாக இனத்தின் பெயரால் சரத் பொன்சேகாவால் சிறையில் அடைபட்ட தமிழ் இளைஞர்களுக்கு விடுதலையில்லை.

இந்தியப்பிரதமர் மோடி தலையிட்டால் அவரின் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு விடுதலை. அதே குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று இலங்கை தமிழர்களுக்கும் உரிய தண்டனை.

ஓ! இறைவா! நீதியை நிலைநாட்ட ஒவ்வொரு தடவையும் நதிகளைப் பெருக்கெடுக்கச் செய்ய உனக்கு எங்கு நேரம்?

ஆனாலும் அவருக்கு விடுதலை என்றால் இவருக்கும் விடுதலை என்ற தர்மத்தை நாடாளுவோருக்குப் புரிய வைக்க நீ தயங்குவது ஏன்? என்பதுதான் புரியாமல் உள்ளது.

# ‘தமிழர்கள் வந்தேறு குடிகளல்ல’

## மாகாண சபையில் பிரேரணை இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் வந்தேறு குடிகளல்ல என தமிழர்களின் வரலாற்றினை உறுதி செய்யும் பிரேரணையொன்று வடக்கு மாகாண சபையில் இன்றைய தினம் கொண்டு வரப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 20 ஆவது அமர்வு கைதடியில் உள்ள பேரவைச் செயலகக் கட்டிடத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இவ் அமர்வில் மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதியினால் இப் பிரேரணை முன்மொழியப்படவுள்ளது. தமிழர்களின் வரலாறு தற்போதைய புதிய பாடத் திட்டங்களில் மறைக்கடிக்கப்பட்டு வருவதோடு திரிபுபடுத்தப்பட்டும் வருகிறது. இந் நிலையில் தமிழர்களின் வரலாற்றினை 7-ம் நூற்றாண்டில் இருந்து உற்று நோக்குவதாக இப் பிரேரணை அமையவுள்ளது.

தமிழர்களின் வரலாறு சிங்களவர்களுக்கு முன்பிருந்தே இலங்கையில் ஆரம்பமாகியது என்பதனை பல சான்றாதாரங்களுடன் நிரூபிக்கும் பிரேரணையாக இது அமையவுள்ளது.

வடக்கு மாகாண சபையில் இன்றைய தினம் கொண்டு வரப்படவுள்ள இப் பிரேரணை ஆளுங்கட்சியின் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபையில் தமிழர்களின் வரலாற்றினை உறுதி செய்கின்ற இப் பிரேரணையில் உள்ளடங்கப்படுகின்ற விடயங்களினை பாடத்திட்டத்தில் உள்ளடக்குமாறு மாகாண அரசு, மத்திய அரசினை பரிந்துரை செய்யவுள்ளது எனவும் அறிய முடிகின்றது. (செ-4)

## பெற்றோல் நிரப்பிய மோ.சைக்கிள் வெடித்து தீப்பற்றியதில் இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் பெற்றோல் நிரப்பிய மோட்டார் சைக்கிள் வெடித்து தீப் பற்றி எரிந்ததில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்பிய பெல்லி ரக மோட்டர் சைக்கிள் வெடித்து தீப்பற்றியது. இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ் விபத்தில் மோட்டர் சைக்கிள் எரிந்து நாசமாகியுள்ளதுடன் அதன் சாரதியும் பெற்றோல் நிரப்பிய ஊழியரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## ஆற்றைக் கடக்க முயன்றவர் நீரில் மூழ்கி மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியா கிரான் பகுதியிலுள்ள சாவாற்றில் மூழ்கி காணாமற்போனவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் ஓட்டிச் சென்ற மாட்டுவண்டி, நேற்று முன்தினம் சாவாற்றில் விழுந்திருந்தது.

ஆற்றைக் கடக்க முற்பட்ட வேளையில், இரண்டு மாடுகளுடன் வண்டி நீரில் அடித்துச் செல்லப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நீரில் அடித்துச்செல்லப்பட்ட வண்டியையும், மாடுகளையும் காப்பாற்ற முற்பட்ட இருவரில் ஒருவர் தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் மகாமாறுக் கிராமத்தைச சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். மாட்டு வண்டி நீரில மூழ்கிய இடத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலிருந்து நேற்று முற்பகல் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணைகள் நேற்று நடைபெற்றன. வண்டியில் கட்டப்பட்டிருந்த மாடுகள் இரண்டினது உடல்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (செ-11)

## 9 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட 8 அரசியல் கட்சிகளும் ஒரு சுயேட்சை குழுவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

ஜனசெத பெரமுன சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன, ஒக்கொம ரஜவரு கட்சியின் சார்பில் எம்.பீ.தெமினி முல்லே, சமாஜவாதி சமனதா கட்சியின் சார்பில் பானி விஜேசிங்க ,எக்சத் சமாஜவாதி கட்சியின் சார்பில் விஜேசிங்க சிறிதுங்கவும் , ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் ராஜபக்ஷ பர்ஸி மஹேந்திரவும் , ஐக்கிய மக்கள் மகாசபா கட்சியின் சார்பில் கலாநிதி நாத் அமரநாத்தும், இலங்கை தேசிய முன்னணியின் சார்பில் விமல் கீகனகே ,புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் பள்ளேவத்தே கமராலகே மைத்திரிபால, சுயேட்சையாக ஐ.எம். இல்யாஸ் ஆகியோரே இத்தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதன்படி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இதுவரை 9 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர். இந்த தேர்தலுக்காக 5 ஆம் திகதி வரை மட்டுமே கட்டுப்பணம் செலுத்த முடியுமென தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (செ-11)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
16
2014
அடுப்படியில் ஒதுங்கிடும் பெண்களாய்
அல்லாமல் தம் சுய விருப்புடனே அவர்கள் முன்னேற நலிவுற்ற பெண்களுக்காய் நாம் நல்ல பல திட்டங்கள் வகுத்திடுவோம்.

## சத்திய தரிசனம்



### நிமிர்ந்து நில் தொடர்ந்து செல்

- ஒருமுறை கோபம் கொண்டால் ஒருவனுக்கு மூன்று மாத ஆரோக்கியம் காணாமல் போய் விடும்.
- தெய்வத்தன்மை உனக்குள்ளே இருக்கிறது. ஆனால், அதை உணராமல் புறவுலகில் தேடிக் கொண்டிருக்கிறாய்.
- வாழ்வில் தடை குறுக்கிடும் போது தான், மனிதன் தைரியத்தை இழக்காமல் துணிந்து நிற்க வேண்டும்.
- குற்றம் குறையில்லாத மனிதன் யாருமில்லை. நல்லதும் கெட்டதும் கலந்ததே இந்த உலகம்.
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். உடலைப் பாதுகாக்க வேண்டியது மனிதனின் கடமை.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ருத்ராட்சமும் அதன் பலன்களும்

ருத்ராட்சம் என்ற பெயர் சிவபெருமானின் மற்றொரு பெயரான "ருத்திரன்" என்ற பெயரிலிருந்து வந்ததாகும். சிவபெருமானின் மூன்று கண்களில் இருந்து விழுந்த ஆனந்தக் கண்ணீரில் இருந்து முப்பத்திஎட்டு விதமான ருத்ராட்சம் தோன்றியதாக புராண வரலாறுகள் தெரிவிக்கின்றன.

சிவனின் வலது கண்ணில் இருந்து மஞ்சள் நிற 12 விதமான ருத்ராட்சமும், இடது கண்ணில் இருந்து வெண்மை நிறத்துடன் 16 விதமான ருத்ரட்சமும், நெற்றிக் கண்ணில் இருந்து 10 விதமான கறுப்பு நிற ருத்ராட்சமும் தோன்றியதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.


ருத்ராட்சம் ஒரு முகம் முதல் பதினாறு முகங்கள் கொண்டதாக இருக்கும். அதன் மீது உள்ள கோடுகளைக் கொண்டுதான் எத்தனை முகங்கள் உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

ருத்ராட்சத்தை சாணைக்கல்லில் உரைத்தால் அது மஞ்சள் நிறத்தில் தங்கம் போல் பிரகாசிக்கும். நல்ல வர்ணமுள்ள ருத்ராட்சத்தை அவற்றிற்கு என்று உள்ள இடங்களில் மட்டுமே தரிக்க வேண்டும். நீரில் போட்டால் மிதக்காமல் மூழ்கிவிடும், மேலும் இரண்டு செப்பு தகடுகளுக்கு இடையில் வைத்து சோதனை செய்தால் சுற்றக்கூடியதுமான ருத்ராட்சங்கள் மிகவும் விசேஷமானவையாக கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப் ஹியூக்ஸ் உடல் அடக்கம்; ரசிகர்கள் கண்ணீர் அஞ்சலி





'பவுன்சர்' பந்து தாக்கி மரணமடைந்த அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்சின் உடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. வீரர்கள், ரசிகர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.


சிட்னியில் நடந்த உள்ளூர் போட்டியில், சியான் அபாட் வீசிய 'பவுன்சர்' பந்து தாக்கியதில் காயமடைந்த அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ், சிகிச்சை பலனின்றி கடந்த நவம்பர் 27இல் மரணமடைந்தார். இவரது உடல், சொந்த ஊரான மேக்ஸ்விலியில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. இதற்கான இறுதி அஞ்சலி இங்குள்ள உயர்நிலை பள்ளியில் நடந்தது. இங்கு ஹியூக்ஸின் சவப்பெட்டி வைகக்கப்பட்டிருந்தது.

கூட்டத்தில் அவுஸ்திரேலிய அணி கப்டன் கிளார்க், பின்ச் உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்றனர். இந்திய அணியின் விராத் கோலி, ரோகித், ரவி சாஸ்திரி, பிளட்சர் கலந்து கொண்டனர். வெஸ்ட் மேற்கிந்தியத்தீவு லாரா, நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹாட்லீயும் பங்கேற்றனர். தவிர, அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட் மற்றும ஹியூக்ஸின் நெருங்கிய நண்பர்களும்வந்தனர் இறுதி அஞ்சலியில் சுமார் 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அமர்ந்திருந்த ஹியூக்ஸின் தந்தை கிரெய்க், தாயார்விர்ஜினியா அழுதே கொண்டே இருந்தனர். வார்னர், மிட்சல் ஜான்சன், பின்ச் உள்ளிட்டவர்களும் கண்ணீர் வழியும் முகத்துடன் அமர்ந்திருந்தனர். பேசுவதற்காக வந்த ஹியூக்ஸின் சகோதரர் ஜேசன், சகோதரி மேகன் அழுதனர். இதன் பின் பேசிய கப்டன் கிளார்க், ஹியூக்ஸ், உடனானதனதுநினைவுகளை பகிர்ந்து கொண்டார். ஒரு கட்டத்தில் துக்கம் தாங்காமல் உணர்ச்சிவசப்பட்டு அழுதார்.

இதன் பின் ஹியூக்ஸின சவப்பெட்டியை தந்தை கிரெய்க, அவுஸ்திரேலிய கப்டன் கிளாரக், ஆரோன் பின்ச் உள்ளிட்டோர் தூக்கி சென்றனர். பின், வெளியில் இருந்த வாகனத்தில் வைக்கப்பட்ட ஹியூக்ஸின சவப்பெட்டிக்கு பலர் அஞ்சலி செலுத்தினர். இதன்பின், சாலையில் ஊர்வல மாக எடுத்து செல்லப்பட்டது. வீரர்கள், ரசிகர்கள பின் தொடர்ந்தனர். வீதியின் இரு புறமும நின்று மக்கள் அஞ் சலி செலுத்தினர். இறுதியாக, ஹியூக்ஸின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதி அஞ்சலி கூட்டம் நடந்த இடத்தில் பிலிப் ஹியூக்ஸின் படங்கள் வைக்கப்பட்டிருநதன. தவிர, இவர் போட்டிகளில் பயன்படுத்திய மூன்று விதமான தொப்பிகளும் வைககப்பட்டிருந்தன. ஹியூக்ஸின் இறுதி அஞ்சலி கூட்டம், சிட்னி, அடி லெய்டு மைதானததில் பெரிய திரையில் நேரடி ஒளி பரப்பு செய்யப்பட்டது.




## ஹியூக்ஸ் ஆத்மா என்னுடன் இருக்கும் அவுஸ்திரேலிய கப்டன் கிளார்க் உருக்கம்


விளையாட்டுச் செய்திகள்

பிலிப் ஹியூக்ஸ் இறுதி சடங்கில் அவுஸ்திரேலிய கப்டன் மைக்கேல் கிளார்க் பேசியதாவது,

உனக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. உன்னை எதிர்பார்த்து காத்து கொண்டிருப்பேன். எனக்கு தெரியும் இது வித்தியாசமான எண்ணம என்று. இருந்தாலும் ஒவ்வொரு நிமிடமும் அவரது குரலை கேட்க அல்லது அவரது முகத்தை ஏதாவது மூலையில் பார்க்க காத்து இருக்கிறேன்.

இது அவரது ஆத்மாவை அழைக்க முயற்சிக்கிறோமா? அவரது ஆத்மா என்னுடன் இருக்கும், அது என்னை விட்டு விலகாது என்று நம்புகிறேன்.

ஹியூக்ஸ் கடைசியாக விளையாடிய மைதானத்துக்கு சென்றேன். அவர் கீழே விழுந்த இடத்தில் இருந்த புற்களை தொட்டேன். அப்போது அவர் எனக்குள் இருபதை உணர்ந்தேன். எனது கால்கள் மேலே செல்கிறதா என்று பார்த்தேன். ஆனால் நான் சரியாக இருந்தேன். ஹியூக்ஸ் ஆத்மா என்னை ஓட்டங்களை குவிக்க ஊக்குவிக்கும்.



அவரது ஆத்மா எங்களது ஒவ்வொரு ஆட்டத்திலும் பங்கேற்கும். அவர் என் னிடம் அடிக்கடி சொல்வார். நாம் தோண்டி எடுத்து விட்டு ஓட்டங்களை) 'டீ' குடிக்க செல்வோம் என்று. இப்போது சொல்கிறேன். நாம் தோண்டி எடுக்க... (இப்படி சொன்னதும் கிளார்க் அழுதார்).

நாம் கட்டாயம் தோண்டி எடுக்க செல்ல வேண்டும். அதன்பின் 'டீ' குடிக்க செல்ல வேண்டும். ஒன்றாக விளையாட வேண்டும் எனது இளைய சகோதரர், உனது ஆத்மா சாந்தி அடையட்டும்.

இவ்வாறு உருக்கமாக பேசினார். (க)

# சர்வதேச தரத்திலான உதைபந்தாட்ட பயிற்சி மைதானம் யாழில் திறப்பு





பீஃபா அமைப்பு மற்றும் ஜேர்மன் அரசாங்கம் ஆகியவை வழங்கிய 100 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் அரி யாலையில் அமைக்கப்பட்ட சர்வதேச தரத்திலான காற்பந்தாட்ட பயிற்சி மைதா னம், சர்வதேச காற்பந்தாட்ட சம்மேள னத்தின் தலைவர் ஜோசப் செப் பிளச்சரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மைதானம் அமைப்பது தொடர்பில் 2011ஆம் ஆண்டு, அடிக்கல் நாட்டப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 2012ஆம் ஆண்டு பணிகள் பூர்த்திடையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த நிர்மாணப் பணிகள் கடந்த மாதம் முடிவடைந்தன.

இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத்தின் 75ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்பதற்காக இலங்கை வருகை தந்த ஜோசப் பிளச்சர் இந்த மைதானத்தை திறந்து வைததுள்ளார்.

இந்த மைதானத்தை வடமாகாணத்திலுள்ள அனைத்து காற்பந்தாட்ட வீரர்களும் பயிற்சிகளுக்கான பயன்படுத்த முடியும். தற்போது திறந்து வைக்கப்பட்டாலும் 6 மாதங்களின் பின்னரே மைதானம், வீரர்கள் பயிற்சிகள் பெறுவதற்கு அனுமதியளிக்கப் படும் என இலங்கை காற்பந்தாடட சம்மேளனங்களின் தலைவர் றஞ்சித் றொட்ரிக்கோ தெரி வித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கம, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமை ச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸவரன், வடமாகாண அவைத் தலைவர்சி.வி.கே.சிவ ஞானம, வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, வடமாகாண எதிர்க்கட்சி தலைவர் சின்னத்துரை தவராசா உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்...

இவ் மாவீரர் தினம் தமிழர்களினால் உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இந்நிகழ்வுகளினை நடத்துவதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது.

இந்நிலையில் கடந்த மாதம் 27-ம் திகதி மாவீரர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் உணர்வுபூர்வமாக மட்டும் அனுஷ்டிக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுகள் அனைத்தும் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு தெரியாமல் மறைப்பான இடங்களில் பாதுகாப்பு கெடுபிடிகளிற்கு மத்தியில் அனுஷ்டிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அனுஷ்டிக்கப்பட்ட இடங்களினை இராணுவத்தரப்பு முற்றுகையிட்டிருந்ததோடு மாவீரர் நாள் தொடர்பிலான துண்டுப்பிரசுங்களினை வைத்திருந்த நபர்களும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மாவீரர் நாள் முடிவுற்று ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் அது தொடர்பிலான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி மாவீரர் தின சுடர் ஏற்றிய, ஏற்ற முயன்றவர்களினை சரணடையுமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

# தேர்தலை...

முன்னிட்டு அனைத்து அரசாங்கப் பாடசாலைகளையும் ஜனவரி 7-ம் திகதி முதல் 9-ம் திகதி வரை மூடத் தீர்மானிக்கப்ப ட்டுள்ளது.

அத்துடன் பாப்பரசர் வருகையை முன்னிட்டு கொழும்பிலுள்ள 43 பாடசாலைகள் ஜனவரி 11-ம் திகதி முதல் 15-ம் திகதி வரை மூடப்படவுள்ளன.

நாளை 5-ம் திகதி வெள்ளிக்கிழமை இவ்வருடம் மூன்றாம் தவணை விடுமுறைகாக பாடசாலைகள் மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றில் கல்விப் பொதுத்தராதர சாதாரண் தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட 83 பாடசாலைகளும், ஜனாதிபதித் தேர்தல் வாக்கெண்ணும் பணிகளுக்காக மத்திய நிலையமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளும் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஜனவரி 05-ம் திகதி மீளத் திறக்கப்படவுள்ளன. (செ-11)

## சீரற்ற காலநிலை...

கண்டி பேராதனிய வீதியில் தஞ்சமடைந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பஹிரவகந்த பகுதியில் மண் மேடொன்று சரிந்து வீதியில் விழுந்துள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய தமது அதிகாரிகள் நேற்று குறித்த பகுதிக்கு சென்று மண் சரிவு அபாயம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டனர் என நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை வடக்கில் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக பல மக்கள் இடம் பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இலங்கையில்...

இடத்திலுள்ளன.

92 புள்ளிகளைப் பெற்று ஊழல் குறைந்த நாடாக டென்மார்க் பதிவாகியுள்ளதுடன், ஊழல் தொடர்பான சுட்டெண் பட்டியலில் வட கொரியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் முதலிடத்தில் திகழ்கின்றன.

50 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், இலங்கையில் அரச துறையின் ஊழல்கள் குறித்து பாரிய பிரச்சினை நிலவுவதாக டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பின் இலங்கை விவகாரங்களுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.ரணுக்கே குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# இனப்பிரச்சினை...

சினை என்ற ஒன்றே இல்லை என்று நீங்கள் நினைத்து விடாதீர்கள். இதற்கான தீர்வு தேடல் தான் தமிழ், முஸ்லிம் மக்களின் முதன்மைத் தேவை என ஞாபகப்படுத்துகின்றேன்என்று அவருக்கு நான் தோழமையுடன் கூறுகிறேன்

குடும்ப ஆட்சி, நண்பர்- உறவினர்களுக்கான பொருளாதார கொள்கை, சட்ட ஆட்சியின் வீழ்ச்சி, ஊழல், வீண் விரயம், ஊடக ஒடுக்குமுறை, குற்றம் செய்யும் சிலருக்கு கிடைக்கும் பாதுகாப்பு ஆகியவை ஒழிக்கப்பட வேண்டுமென நாங்களும் விரும்புகிறோம். ஆகவே, அதற்கான தேசிய போராட்டத்தில் நாங்களும் இருக்கின்றோம். ஆனால், அதைவிட தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு எங்களுக்கு முக்கியம். எங்கள் பட்டியலில் அதற்குதான் முன்னுரிமை தருகிறோம்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். (செ-11)

# பெருமளவு...

இரண்டும், மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த பகுதியில் நேற்று முன்தினம் நடத்திய தேடுதலின்போது இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவத்தினர் நடத்திய தேடுதலின் போது ஆறு மிதிவெடிகளும அடையாளம் காணப்படாத எண்ணெய்த் தாங்கிகள் ஒன்பதும் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (செ-11)

# எதிர்த்தவர்...

இது தங்களது அரசாங்கம் என்றும், தாங்கள் விரும்பும் இடங்களில் ஜனாதிபதியின் கட் அவுட்களை வைக்க முடியுமென் றும் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் தன்னிடம் மிரட்டியதாக துசித்த வீரசிங்க கூறினார்.

இதற்கு யாருக்கும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாதென்று மேலும் எச்சரித்த அவரும் அவருடன் வந்தவர்களும், வீட்டில் இருந்து வெளியே வந்த தனது இரு சகோதரர்களை தாக்கியதாகவும் கூறினார் துசித்த வீரசிங்க.

இது சம்பந்தமாக பொலிஸாருக்கு முறைபாடு களை சமர்ப்பித்துள்ள போதிலும் சந்தேக நபர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

தாக்கப்பட்ட நபர்கள் திவுலப்பிட்டிய அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு பாதுகாப்பு கருதி தம்பதெனிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு பதிவு செய்யப்பட்ட ஒன்பதாவது தேரதல வன்முறை சம்பவம் இதுவென தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில்ஈடுபட்டு வரும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது. (செ-11)

# இங்கிலாந்து வெற்றி



இலங்கை எதிராக மூன்றாவது ஒருநாள் போட்டி இங்கிலாந்து அணி டக்வோர்த் லூயிஸ முறைப்படி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இலங்கை-இங்கிலாந்துக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டி நேற்று அம்பாந்தோட்டை, சூரிய வெவ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கை நேரப்படி நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமாகிய இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

அதன் பிரகாரம் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கையணி 2 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டினை இழந்து 6 ஓட்டங்களைப் பெற்றவேளை மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டி தொடர் 35 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து இலங்கை அணி சார்பில் குமார் சங்கக்கார 63 ஓட்டங்களையும் லகிரு திரிமானே ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும் விளாச இலங்கை எட்டு விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 242 ஓட்டங்களைக் குவித்தது.

இதனையடுத்து மழை காரணமாக இலக்கு 35 ஓவர்களில் 236 ஆக குறைக்கப்பட்டது.

அதன்பின் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 33.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்து. (க)

## சரத்தைவிட அதிக விளைவை சந்திக்கலாம்

சரத் பொன்சேகா தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை, அரசாங்கக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் தாம் மிகுந்த மன வேதனையுடன் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதுகுறித்து தம்மால் எதுவும் செய்ய முடியாது போனதாக, கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது சரத் ஏபான்சேகாவின் ஜனநாயகக் கட்சி எதிரணி பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தது.

எது எவ்வாறு இருப்பினும் பொன்சேகா முகம் கொடுத்ததை விட அதிக விளைவுகளை தாம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என இங்கு தொடர்ந்து உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன கூறினார்.

எனினும் கோழைபோல் வாழ்வதை விட உண்மைக்காக உயிரை பணயம்வைப்பது மேல் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (செ-11)

# நெடுங்கேணி எல்லைப்...

கல்கிசை பொலிஸ் நிலையத்தில் அத்தியட்சகர் பதவி வகித்த ஜயரட்னம் மற்றும் படையினரின் ஓமந்தை சோதனைச் சாவடியில் கப்டன் தரத்தில் பதவி வகித்த லகி என்பவரும் விடுதலைப் புலிகளினால் கடத்தப்பட்டு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் உள்ள புலிகளின் அல்பா 2 மற்றும் அல்பா 5 ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், அதே ஆண்டில்மேற்படி இரு அதிகாரிகளுடன் சேர்த்து 80 பேர் முதலாவதாக 30பேர் பேருந்து மற்றும் லொறி ஆகியவற்றில் கொண்டு செல்லப்பட்டு பெரிய இந்து மடு காட்டுப் பகுதியில் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாகவும், பின்னர் பொலிஸ் அதிகாரி ஜயரட்னம் வள்ளிபுனம் ஈஸ்டர் வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள காட்டுப்பகுதியில் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் மீதமானவர்கள் நெடுங்கேணி காட்டுப்பகுதியில் வைத்து கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாகவும் இலங்கையின் பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளிகள் சாட்சியம் வழங்கியதன் அடிப்படையில் கிளிநொச்சி நீதிமன்றின் பணிப்பிற்கமைய மேற்படி ஆய்வு நடத்தப்படுவதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பெரிய இந்த மடு காட்டுப் பகுதியில் ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இதன்பின்னர் நேற்றையதினம் 2-ம் இடமான நெடுங்கேணியின் எல்லைப்பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் ஆய்வுகள் காலை தொடக்கம் மாலை வரை தொடர்ச்சியாக நடைபெற்றன.

இதனையடுத்து இன்றைய தினம் வள்ளிபுனம் பகுதியில் ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி ஆய்வுகளுக்காக பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கிய முன்னாள் போராளி ஒருவர் சம்பவ இடத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளார். (செ-11)



ஓம் நமசிவாய என்ற மந்திரத்தை ஆன்மீக [illegible] பிரார்த்தனை வழிபாடு நேற்றைய தினம் சித்தன்கேணி சிவன் கோவிலில் ஆரம்பமானது. இவ் வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்...

இதை நான் ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது மைத்திரி பால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க, சந்திரிகா பண்டார நாயக்க, சரத் பொன்சேகா ஆகியோருக்கு விளங்கும் விதமாக சிங்கள மொழியில் இவர்களின் முகங்களை பார்த்தே பகிரங்கமாக சொன்னேன். அதை இங்கே மீண்டும் ஞாபகப்படுத்துகின்றேன் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று புதனகிழமை கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

பொது எதிரணி கோட்பாடுகளில், இன்று இனப்பிரச்சினை இல்லை. ஜனாதிபதிபதி முறைமை 18-ம், 17-ம் திருத்தங்கள் ஆகியவை அகற்றப்படுவது பற்றியே பேசப்பட்டுள்ளன.

நாம் இன்று இவற்றுக்கு தடையாக இருக்கவில்லை. ஆகவே இனப்பிரச்சினை தீர்வை ஒரு நிபந்தனையாக நாம் இன்று முன்னிறுத்தவில்லை. ஆனால்,

அதற்காக இனப்பிரச் 23ஆம் பக்கம் பார்க்க....


## காணவில்லை



121, பலாலி வீதி, கந்தர்மடம் முகவரியில் வளர்த்த 2 வயதுடைய 2 அடி உயரமுள்ள கறுப்பு, மாநிறம் உடைய லயன் செப்பேட் (அலிஸ்ரேசன்) நாயினைக் 1ம் திகதி இரவு 10 மணி முதல் காணவில்லை.

நாய் இருக்கும் இடத்தினை அறியத் தருபவர்க்கு பெறுமதிமிக்க சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: V.செல்வம்

0773611282, 0770877723, 0212223817

(C-9246)



## அகரம் கல்வி நிலையம்

### புதிய கல்வியாண்டு 2015

தரம் 06 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் அனைத்தும்

**மல்லாகத்தில்** மாலை 5.15 மணிக்கும் (தமிழ்மொழிமூல வகுப்புக்கள்)

**கொக்குவிலில்** மாலை 4.45 மணிக்கும் (தமிழ், ஆங்கிலமொழிமூல வகுப்புக்கள்)

கார்த்திகை தீப நன்னாளில் ( 05.12.2014 ) ஆரம்பமாகின்றன.

2013 O/L பெறுபேறுகளின் அடிப்படையில்

9A, 8A } 07மாணவர்கள்

மாவட்டநிலையிலும் மாணவி ஒருவர் முதலிடத்தினைப் பெற்றுள்ளார்.

"அகரம் எம்தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

(8529)



ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

தரம் 6 முதல் O/L ற்கு | யாழ் நகரின் NO : 1

## எடிசன் அக்கடமி

INTENT + EFFORT + GRACE = SUCCESS

யாழ்ப்பாணம் | கலட்டி | நல்லூர் | கொக்குவில் | சுன்னாகம்

### புதிய கல்வி ஆண்டு 2015

### தரம் 6

மற்றும்

தரம் 6 முதல் O/L வரையான English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்

ஆரம்பம்

06.12.2014, சனிக்கிழமை

யாழ் எடிசன் காலை 8.00 மணி

கலட்டி எடிசன் மு.ப. 11.00 மணி

நல்லூர் எடிசன் பி.ப. 12.30 மணி

கொக்குவில் எடிசன் பி.ப. 2.30 மணி

சுன்னாகம் எடிசன் பி.ப. 4.30 மணி

எங்களின் சாதனைகள்

- 1999 முதல் 15 வருடங்களாக அதிகூடிய 9A
- இன்றுவரை 140 பேர் 9A
- 3 தடவை தேசிய ரீதியில் முன்னிலை
- 7 தடவை மாவட்டத்தில் முதலிடம்
- 6 தடவை International Olympiad சாதனை (2 Bronze & 1 Silver)

Contact 077 77 37 926, 075 04 14 979

பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் ! அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள் !!

(C-9238)



## புதிய கல்வியாண்டு - 2015

### தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!

30 வருடாங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.

நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

தமிழ்மொழி மூல வகுப்புக்கள் தரம் 6 முதல் O/L வரை

English Medium Classes Gr. 6 - O/L

### வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு

வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு வெற்றித்தேர்வு வளவாளர்களுடன் யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்

### தரம் 1 முதல் தரம் 5 வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

05.12.2014 வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணி

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

## சயன்ஸ் அக்கடமி

நல்லூர் - அரியாலை.


# தேர்தலில் மகி...

தேசிய சிங்கள பௌதத மக்கள் கட்சியின் சார்பில் ரத்தன பண்டார என்பவர் நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு முறை ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் என்றும், அவர் மூன்றாவது முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் இந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் 18-வது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், அது குறித்து பொது மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட வில்லை. இலங்கையின் அரசியலமைப்பின்படி, இது குறித்து சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

எனவே, 18-வது திருத்தச்சட்டத்துக்கு அமைய, மூன்றாவது தடவை போட்டியிடுவதில் இருந்து மகிந்த ராஜபக்ஷவைத் தடை செய்ய வேண்டும் என்று இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (செ-11)


## புதிய நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்நகர்.

கல்வியாண்டு 2015

தரம் 1 முதல் O/L வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

05-12-2014 வெள்ளி 3 மணி

புதிய அனுமதிகள் இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



25 வருடகால கல்விச் சேவையில் தனித்துவமான ஆசிரியர்களின் தரமான சேவையுடன்

## விக்கினேஸ்வரா கல்வி நிலையம்

இல. 109, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.



கல்வியாண்டு - 2015

ஆரம்பம்

06. 12. 2014 சனிக்கிழமை


மாலை 3.30 மணி

(C-9248)



## யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்





அருள் ஒளி தர்சன மாலையும் திருக்கார்த்திகை பௌர்ணமி தின

சிறப்புப் பூஜையும்

இடம் : இளம் கலைஞர் மண்டபம் சட்டநாதர் வீதி நல்லூர்.

காலம் : 06.12.2014.

சனிக்கிழமை பகல் 10.30 மணி

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து 'எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும் பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்ம்வண்ணம் வேண்டுகின்றோம்.

யாழ் தொடர்புகளுக்கு 0779825004

(8528)



## IELTS புதிய பிரிவு ஆரம்பம்

English for International Opportunity

06.12.2014 காலை 8.00 மணி

E-CITY FEEL BRILLIANT FUTURE

COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

Srilanka's NO.#1 English, Other Languages and Computer Training Centre

இல-372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

IELTS™ உயர்ந்த பெறுபேறுகள்.



0212217106 / 0773400418

IELTS REGISTRATION CENTRE FOR BRITISH COUNCIL

(9247)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.